விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 18 திங்கட்கிழமை (01.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட வரைபு வெளியீடு



## பெருந்திரளான மக்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் நடவடிக்கைக்கான நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபு பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.

04 ஆம் பக்கம் பார்க்க....

## கட்சி அரசியலையும் தாண்டி — மக்களின் விடிவுக்கான பயணம்

### வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன்



(யாழ்ப்பாணம்)

தேர்தல் அரசியலுக்கும் கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்டு எமது மக்களின் விடிவு நோக்கிய பயணத்தையே தமிழ்மக்கள் பேரவை தனது தலையாய

23 ஆம் பக்கம் பார்க்க....

## அங்கேயே பிடியுங்கள்!

### இளஞ்செழியன் அதிரடி

(யாழ்ப்பாணம்)

மது போதையில் மோட்டார் சைக்கிள் ஓடும் இளைஞர்களை, சாராயக் கடைகளுக்கு முன்னாலேயே மடக்கிப்பிடித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸாருக்கு நீதிபதி இளஞ்செழியன் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் குற்றச்செயல்கள் மற்றும் சாரதி அனு

23 ஆம் பக்கம் பார்க்க....

## அரிசி இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி

24 ஆம் பக்கம் பார்க்க....

## மகனை சிறையில் சந்தித்தார் மகிந்த

(கொழும்பு)

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் வெலிக்கடச் சிறைச்சாலையில்

23 ஆம் பக்கம் பார்க்க....

## "நம்மை நாமே ஆளுவோம்"

### தீர்வுத் திட்டத்தில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு இணைந்த சுய ஆட்சியுடன் கூடிய சுய நிர்ணய உரிமையை தமிழர்களுக்கான அரசியல் தீர்வாக வழங்க வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை தனது அரசியல் தீர்வு திட்ட முன்வரைபில் கோரியுள்ளது. சுய நிர்ணய உரிமை மறுக்கப்பட்டால் தமிழ் மக்கள் தமது தலைவிதியை தீர்மானிக்கும் வகையில் பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும் என்பதனையும் பேரவை தனது முன்வரைபில் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை தமிழரு

04 ஆம் பக்கம் பார்க்க....



## ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவை பாரிய ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக ஷிரந்தி ராஜபக்ஷவை இன்றைய தினம் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் லெஷில் டி சில்வா

23 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்களின் அபிலாசைகளை முதன்மைப்படுத்திய வரைபு தயாரிப்பு

### மக்கள் மனமறிய முதலடி எடுத்து வைப்பு – விக்கி



(யாழ்ப்பாணம்)

கட்சிக்கான விசுவாசம் என்பது சிலரின் கண்களை மூடிவிட்டது. ஆனால் வட கிழக்கு மாகாண மக்களின் வருங்காலமே முக்கியம். வழி வழியாக வரவிருக்கும் எமது வாரிசுகளின் வருங்கால வாழ்க்கையே எமக்கு முக்கியம்.

அதற்காக எந்த ஒரு கடினமான பாதையில் பயணிக்கக்கூட நாங்கள தயங்கக் கூடாது. அரசாங்கங்கள் தயாரிக்கும் அரசியல் யாப்பில் தமிழ் மக்களின் தேவைகள், அபிலாசைகள், நோக்குகள், உரிமைகள் யாவையும் உள்ளடக்கப்படாவிடில்

24 ஆம் பக்கம் பார்க்க....

## சிங்கத்தின் வாலை பிடித்திருக்கிறீர்கள்!

### மகிந்தவின் இளைய மகன் ரோகித எச்சரிக்கை

(கொழும்பு)

தனது சகோதரனான யோஷித ராஜபக்ஷவைக் கைது செய்துள்ள நல்லாட்சி அரசாங்கத்துக்கு, மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகனான ரோகித ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்

24 ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போர்க்குற்ற உள்ளக விசாரணையில் வெளி.நீதிபதிகளின் பங்கு என்ன?

## இலங்கையிடம் விளக்கம் கேட்க ஐ.நா முடிவு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்படவுள்ள பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு குறித்து இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் விளக்கம் கோரவுள்ளார்.

இலங்கைக்கு எதிர்வரும் 5ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த அமைக்கப்படவுள்ள பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமளிக்கப்படாது என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரசிங்க ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன் நடத்தவுள்ள பேச்சுக்களின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்படவுள்ள பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் விளக்கம் கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது, பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் தனது இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தனது திட்டங்களை இவர்கள் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரிடம் விளக்கிக் கூறவுள்ளனர்.

அதேவேளை யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 6ஆம் திகதி செல்லவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் அங்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், கொழும்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களுடன் விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், தனது பயணத்தின் முடிவில் எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்தவுள்ளார். (செ-12)

# இந்.மீனவர்கள் 9 பேர் கைது!

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட ஒன்பது தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், அனலைதீவு, வடக்கு கடற்பிரதேசத்தில் இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதுடன் இவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மீனவர்கள் தற்போது கடற்படையினரின் வசம் உள்ளதாகவும் விசாரணைகளின் பின்னர் யாழ்.நீரியல்வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-12)

# சுதந்திரதினத்தில் சுஷ்மா வருகை

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எதிர்வரும் 04ஆம் திகதி வியாழக்கிழமை இலங்கையின் சுதந்திரதினமன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக இலங்கை வரும் சுஷ்மா யாழ்ப்பாணத்திற்கும் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது இலங்கை- இந்திய கூட்டு ஆணைக்குழு சந்திப்பும் அன்று நடைபெறுகின்றது. இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இந்திய வெளியுறவுச் செயலாளர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்போடும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை 05ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ள சுஷ்மா சுவராஜ் வடக்கு முதலமைச்சரை சந்திப்பதோடு வடக்கில் இந்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்படும் வீட்டுத் திட்டங்களையும் பார்வையிடவுள்ளார்.(செ-12)

# ஹிட்லரை விட மோசமான ஆட்சி நடைபெறுகின்றது-கோத்தா

(கொழும்பு)

நல்லாட்சி குறித்துப் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் சர்வாதிகாரி ஹிட்லரை விடவும் மோசமாக நடந்து கொள்கின்றனர் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டமை குறித்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கில் செய்பட்டு வருகின்றது. உயர்மட்ட அரசியல்வாதிகளுக்காக 25 வயதான மகனை பழிவாங்குவது ஏற்புடையதல்ல. யோஷிதவை படையில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தே நான்தான். நாட்டில் சட்டம் ஒழுங்கு எதுவும் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (செ-12)

# சிசுவை கொலை செய்ய முயற்சித்த பெண் கைது

(கொழும்பு)

மொரட்டுவ பகுதியில் 5 மாத சிசுவை ரயிலில் இருந்து தூக்கி எறிவதற்கு பெண்ணொருவர் முயற்சித்தமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெண் சிசுவை ரயிலில் இருந்து வீச முற்படுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த பெண் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

லுனாவ பகுதியை சேர்ந்த 28 வயதான பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (செ-12)

# மரண அறிவித்தல்

## வயித்திலிங்க தம்பிரான் துரைராஜன்



சங்கானையைச் சேர்ந்த வயித்திலிங்க தம்பிரான் துரைராஜன் 31/01/2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்க தம்பிரான்-தங்கம்மா பார்வதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மாவின் மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வஜிதா மற்றும் சுஜிதா, ரஜனிகாந்தா, வஜீசன், (கோப்பாய் கல்வியற்கல்லூரி), தர்ஷினி ஆகியோரின் தந்தையும், அகிலனின் மாமனாரும், ஆருத்ராவின் அம்மப்பாவும், தியாகராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), தேவராஜா(பொறியியலாளர்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2016) திங்கட்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல் :-
குடும்பத்தினர்

(3456)

GROUP CLASSES
ENGLISH New Batch
Gr.6 to O/L 04/02/2016 Thursday at 10 am
P.N. Shutharson Teacher, Kokuvil Hindu College
(3454) Contact :- 0773144527

ஆண்கள் தையலுக்கு உடன் தேவை
50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சம்பளம் தங்குமிட வசதியுண்டு. போனஸ் வழங்கப்படும்.
இடம்: கிளிநொச்சி
தொடர்பு : லதுசன் 0774582344
(C-3658)

வேலையாள் தேவை
முல்லைத்தீவுப் பகுதியில் தோட்ட வேலை செய்வதற்கு ஆண் அல்லது தோட்டத்திலும் வீட்டு வேலை செய்வதற்கு பெண் தேவை.
தங்குமிட வசதியுண்டு
0771681697
0773530996
(C-3587)

பாராட்டி வாழ்த்துகின்றோம்





எமது பாடசாலையின் முதல்வர்
திரு. நாகராசா உதயகுமார்
{BA(Hons),PGDE(Merit, Med (Hons)}
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்
31-வது பட்டமளிப்பு விழாவில்
முதுகல்விமாணி (M.Ed) பட்டம்
பெற்றமையை அகமகிழ்வுடன்
பாராட்டுவதுடன் இன்னும் பல பட்டங்கள்
பெற்று கல்வித்துறைக்குப் பணியாற்றி
எதிர்காலம் ஒளிபெற வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்பேணகம்
கிளி/பன்னக்கண்டி இ.த.க பாடசாலை
(C-3659)

# நல்லாட்சியிலும் ஊழல், மோசடி குறையவில்லை

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்று ஒருவருடம் கடந்துள்ள போதிலும் நாட்டில் ஊழல், மோசடிகள் குறைந்தபாடில்லையென ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் அமைப்பின் இலங்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் அந்தந்த நாடுகளில் இடம்பெறும் ஊழல், மோசடிகளை அடிப்படையாக வைத்து வெளியான அறிக்கையின் மூலம் இது தெரியவந்துள்ளதாக குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டுக்காக நடத்தப்பட்ட ஆய்வறிக்கைப் பட்டியலில் இலங்கைக்கு 83ஆவது இடமே கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.(இ)

# சமஷ்டிக்கு இடமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**புதிய அரசாங்கத்தின் உத்தேச அரசியல் அமைப்பில் சமஷ்டி ஆட்சி முறைமை குறித்த எந்தவொரு யோசனையும் உள்ளடங்காது எனவும் இலங்கையில் சமஷ்டி முறையிலான ஆட்சிக்கு இடமில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் உத்தேச அரசியல் அமைப்பில் சமஷ்டி ஆட்சி முறைமை குறித்த எந்தவொரு யோசனையும் உள்ளடங்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசியல் அமைப்பு குறித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒன்பது யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யார் எவ்வாறான கோரிக்கை விடுத்தாலும் வேண்டுகோள்களை முன்வைத்தாலும் அரசியல் அமைப்பில் சமஷ்டி முறைமையிலான ஆட்சிக்கு இடமில்லை என ஜனாதிபதி திட்டவட்டமாக சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்குடன் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. இதேவேளை சமஷ்டி முறையை அமுல்படுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் கோரி வரும் நிலையில் ஜனாதிபதி மைத்திரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆயுத அகற்றல் குறித்து விரைவில் விசாரணை

இறக்குமதி செய்யப்பட்ட வெடிபொருட்களில் காலாவதியானவற்றை அகற்றும் செயற்பாட்டின் போது ஏற்பட்ட நட்டம் தொடர்பில் விசாரணை செய்யப்படவுள்ளது.

இதன்போது ஏற்பட்ட சுமார் 2 பிலலியன் ரூபா நட்டத்துடன் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருக்கு தொடர்பு உள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தமயந்தி ஜெயரட்ன மீதே இந்த விசாரணை நடத்தப்படவுள்ளது.

பாரிய ஊழல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இந்த விசாரணையை நடத்தவுள்ளது.

இந்த ஆயுத அகற்றல் செயற்பாட்டின் போது உரிய ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தற்போது உள்துறை அமைச்சின் செயலாளராக பதவி வகிக்கும் அவர் நியூசிலாந்து தப்பிச்சென்று அங்கு வசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ரணிலை இரகசியமாக சந்திக்கவில்லை

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இரகசியமாக சந்திக்கவில்லை என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரணிலும் பசிலும் இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும் சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவடையச் செய்து புதிய கட்சி அமைப்பது குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பதிலளித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரகசியமான முறையில்ரணிலை சந்தித்ததாக ஊடகங்களில் வெளியான தகவல்களில்உண்மையில்லை.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதியின் பின்னர் நான் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவில்லை என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னாள்அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மகளது திருமண வைபவத்தில் கண்டேன்.

அமைச்சர் ராஜித சேனாரட்னவை சில தடவைகள் சந்தித்தேன் மற்றும் சிறையில் இருக்கும் போது நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ என்னை வந்து பார்வையிட்டார்.

இவர்களைத் தவிர ஆளும் கட்சியின் எவரையும் நான் சந்திக்கவில்லை. எவ்வாறெனினும் என்னைப் பற்றி பரப்பும் செய்திகளை சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரே பரப்புகின்றனர்.

இவர்கள் வாரம் தோறும் அமைச்சரவையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்திப்பவர்களாகும் என அவர் தெரிவித்துள்ளார். (இ)

## மஞ்சள் கடவையில் இடம்பெறும்

# விபத்துக்களை தவிர்க்க விசேட வேலைத் திட்டம்

(கொழும்பு)

மஞ்சள் கோட்டுக் கடவையில் இடம்பெறும் விபத்துக்களை தவிர்ப்பதற்கான விசேட வேலைத் திட்டமொன்று இன்று முதல் நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மாநகர சபையின் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து, மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பாதுகாப்பற்ற நிலைமைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் கலாநிதி சிசிர கோதாகொட தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் மஞ்சள் கடவையில் இடம்பெற்ற விபத்துக்களில் 10 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமையை சுட்டிக்காட்டியுள்ள அவர், இதன் காரணமாக பாதுகாப்பற்ற வீதி கடவைகள் குறித்து கண்காணிப்புகளை மேற்கொண்டுள்ளதாகவும் தொடர்ந்து இன்று முதல் விசேட கண்காணிப்புகளை மேற்கொண்டு அதன் அடிப்படையில் மஞ்சள் கடவையை பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பான திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக சிசிர கோதாகொட மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

# கொழும்பில் இன்று கவனயீர்ப்பு பேரணி

(கொழும்பு)

சுதந்திர தினத்திற்கு முன்னர் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் அரசியல் கைதிகள் பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதை கண்டித்தும் இன்று திங்கட்கிழமை கொழும்பில் முற்பகல் 10 மணிக்கு கவனயீர்ப்புப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அமைப்பின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு மகசின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளை பார்வையிட்ட பின்னர் முற்பகல் 10 மணிக்கு சிறைச்சாலையில் இருந்து பேரணியாக பிரதமர் அலுவலகத்திற்குச் சென்று மகஜர் ஒன்றை கையளித்தபின்னர் தொடர்ந்து பேரணியாக ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்று மகஜர் ஒன்று கையளிக்கவுள்ளது.

இப்பேரணியில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்புடன் இணைந்து சர்வமத தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்பினைச் சேர்ந்த பலர் கலந்து கொள்ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கல்வி அமைச்சரின் சம்பளத்தை குறைத்தால் எப்படி இருக்கும்?

## ஆசிரிய உதவியாளர்கள் கேள்வி

தமிழர்களை ஆசிரிய உதவியாளர்கள் என்று பாடசாலைகளில் நியமித்து அவர்களின் உழைப் பைச் சுரண்டும் கல்வி அமைச்ச ரின் சம்பளப் பணம் குறைத்து வழ ங்கப்பட்டால் அவரது மனநிலை எப்படி இருக்கும் என பாதிக்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமிழர்கள் வாழும் பகுதிப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்காகவும் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பாக ஆசிரியர் நியமனம் வழங்குவதாகவும் கூறி தமிழர்களுக்கு ஆசிரிய உதவியாளர் என்னும் நியமனத்தை இலங்கையின் கல்வி அமைச்சு வழங்கி அவர்களுக்கான மாதச் சம்பளமாக 6 ஆயிரம் ரூபாவை மாத்திரமே வழங்கி அவர்களின் உழைப்பைச் சுரண்டி வருகின்றது. இதேவேளை சிங்களவர்களுக்கு ஆசிரியர் நியம னத்தை வழங்கி 35 ஆயிரம் ரூபா வுககும் மேற்பட்ட சம்பளத்தை இலங் கைக் கல்வி அமைச்சு வழங்கி வரு கின்றது. இதற்குத்தமிழர்களாக வுள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளித்து வருவதாகப் பாதிக்கப்பட்டவர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இலட்சக் கணக்கில் சம்பளம் பெற்று வசதி வாய்ப்புக்களுடன் வாழும் கல்வி அமைச்சர் உட்பட்ட இலங்கையின் அமைச்சர்கள் தமிழர்களை வெறும் ஆறாயிரம் ரூபா சம்பளத்திற்கு அரச ஊழியர்களாக நியமித்து ஈவிரக்கமற்ற வகையில் அவர்களின் உழைப்பைச் சுரண்டி வருகின்றார்கள்.

மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா சம்பளத்திற்காக முழுநேரப் பணியாற்றும் தமிழர்களின் உழைப்புச் சுரண்டப்பட்ட நிலையில் அவர்களது குடும்பங்கள் பெருங் கஷ்டங்களில் வாடுவதும் இதனைச் சுட்டிக்காட்டி தமக்கான சம்பளப் பணத்தை வழங்குமாறு பாதிக்கப்பட்டவர்கள கோரி வருகின்ற போதிலும் பதவியிலுள்ள தமிழ் அமைச்சர்கள் கூட தமது நிலையைப் புரிந்துகொள்ளாது தமது உழைப்பைச் சுரண்டுவதற்குத் துணையாக இருந்து ஆதரவளித்து வருவதாகப் பாதிக்கப்பட்ட வர்களால் கவலையும் விசனமும் தெரிவிக்கப்படுகின்றது.(இ)

# தமிழ் மக்கள்...

இவ்வெளியீட்டு நிகழ்வு நேற்று மாலை மூன்று மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

புதிய அரசியல் யாப்பு அமைக்கப்படவுள்ள தருணத்தில், வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான அர சயல் தீர்வு திட்டத்தை இதுவரை யாரும் அதிகார பூர்வமாக முன் வைக்காத நிலையே காணப்பட்டு வந்தது. இந்நிலையில் வடக்கு மாகாண முதல்மைச்சரை இணைத் தலைவராக கொண்ட தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் தீர்வுக்கான முன்வரைபினை நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

மதகுருமார்களின் ஆசியுடன் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில், முன்னதாக இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன், கிழக்கு மாகாண இணைத்தலைவர் த.வசந்தராஜா ஆகியோர் தலைமை உரை ஆற்றினார்கள். தீர்வு திட்ட முன்வரைபினை பேரவையின் அரசியல் உபகுழுத் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான வி.புவிதரன் வெளியிட்டு வைக்க, வடக்கு மாகாண முதலமைச்சர் அதனை பெற்றுக் கொண்டார். பின்னர் வரைபின் சுருக்கத்தை புவிதரன் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசாங்கம் தற்போது ஆட்சியில் உள்ள நிலையில், புதிய அரசியல் யாப்பு திருத்தம் ஒன்றினை கொண்டுவரவுள்ளதாக அவ்வரசு அறிவித்து அதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுத்தும் வருகின்றது. முதற்கட்டமாக பொது மக்களிடமிருந்து கருத்துக்களை பெறும் நடவடிக்கைகளும் மாவட்ட செயலகங்கள் ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் புதிய அரசியல் யாப்பில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடைய அபிலாசைகள் உரிமைகள் வலியுறுத்தப்படுவதற்கு, தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு திட்ட முன்வரைபுவும் மத்திய அரசிடம் கையளிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டே நேற்றைய தினம் தீர்வு திட்ட முன்வரைபு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டதனால் வீரசிங்கம் மண்டபம் சனத்திரளினால் நிரம்பி வழிந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொது மக்கள், கல்வி அதிகாரிகள், வைத்தியர்கள் என பலதரப்பட்டவர்களும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

முதலமைச்சர் மண்டபத்தினுள் நுழையும் போது மண்டபத்தில் கூடியிருந்த பெரும் திரளான மக்களும் எழுந்து நின்று கைகளை தட்டி வரவேற்றனர். ஒவ்வொரு பேச்சுக்களின் போதும் மக்களின் கைத்தட்டுக்கள் பேச்சாளர்களின் கருத்துக்களை வரவேற்றன.

இவ்வாறு மக்களின் பேராதரவுடன் பேரவையின் தீர்வு திட்ட முன்வரைவு உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்வு திட்ட முன்வரைபினை மக்கள் பார்வைக்காக விடப்படும் என அறிவித்துள்ள ஏற்பாட்டு குழு www.tamilpeoplescouncil.org என்ற தமிழ் மக்கள் பேரவையின் இணையத்தளத்தின் ஊடாகவும் பார்வையிட முடியும் என அறிவித்துள்ளது. (செ-4)

# ‘நம்மை நாமே..

ருக்கான அரசியல் தீர்வு தொடர்பில் மக்கள் மத்தியில் கலந்தாய்வு ஒன்றினை நடத்துவதற்கு உதவும் வகையில், அரசியல் தீர்வு தொடர்பிலான முக்கிய வரையறைகளை உள்ளடக்கிய வரைபு ஒன்றினை தயாரிப்பதற்கு முயற்சித்தது. இதற்காக சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரன் தலைமையிலான உப குழு ஒன்றினையும் அமைத்து தீர்வு திட்ட முன்வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்வு திட்ட முன்வரைபு நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. இருபத்தியொரு பக்கங்களை கொண்டமைந்துள்ள அந்த வரைபில், இருபத்துநான்கு பிரதான தலைப்புக்களின் கீழ் தமிழ் மக்களுக்கான உரிமைகள், அபிலாசைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அரசியல் ஏற்பாடுகளை செய்வதற்கு முன் அரசியல் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கான தேவைப்பாட்டிற்கு விளக்கமளித்தலுடன் ஆரம்பமாகும் தீர்வு திட்ட முன்வரைபு, அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கான வரைபு முன்மொழிவுகளை பின்வரும் தலைப்புக்களில் கூறுகின்றது.

இலங்கை அரசின் தன்மை, இறைமை, அரசியலமைப்பின் மீயுயர்வுத் தன்மை, மொழி மதம் பிரஜாவுரிமை மற்றும் அடிப்படை உதவிகள், ஆட்சி முறைமை என்ற தலைப்புக்களில் வலியுறுத்தி, இதில் மத்திய மட்டத்திலான பகிரப்பட்ட ஆட்சியில் இரண்டாவது அவை, மாநில ஆளுநர், மத்தியினதும் மாநிலத்தினதும் அதிகாரங்கள், காணிகள், உள்ளூராட்சி மன்றங்கள், பொலிஸ் சட்டம் மற்றும் ஒழுங்கு, வெளியுறவுக் கொள்கை, பொதுச்சேவை, ஆட்சேர்ப்புக்கொள்கை, கல்வி, அரசிறை சமஷ்டி,

மத்தி மாநிலத்திற்கு இடையிலான பிணக்குகளை தீர்த்தல் எனும் தலைப்பில் அரசியலமைப்பு நீதிமன்றம், நீதித்துறை, நல்லாட்சி மாநில சபை, மாநில சட்டமா அதிபதி, அவசர கால அதிகாரங்கள், மத்தி மாநிலங்களிற்கு இடையிலான ஒத்துழைப்பு, அரசியலமைப்பு திருத்தங்கள் என்ற தலைப்புக்களில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பேரவை தனது தீர்வு திட்ட முன்வரைபில் வலியுறுத்தியுள்ள ஆட்சி முறைமையில், இலங்கை ஓர் சமஷ்டி குடியரசாக இருக்கும். இதில் இரண்டு மட்டத்திலான அரசாங்கம் இருக்கும் (மத்தி மற்றும் மாநிலம்) சமஷ்டியின் கூறுகளாக மாநிலங்கள் இருக்கும். அத்தகைய மாநிலங்களில் ஒன்றாக தற்போதைய 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை கொண்ட வடக்கு கிழக்கு மாநிலம் அமையப்பெறும்.

மத்திய அரசு பாராளுமன்றில் நிறைவேற்று அதிகார முறைமையை கொண்டதான வெஸ்ட்மினிஸ்டர் முறைமையிலான ஆட்சி முறைமையில் இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை விட காணி பொலிஸ் அதிகாரங்கள் உட்பட ஐம்பத்து நான்கு அதிகாரங்களை மாநில அதிகாரங்க ளாக வரைபு கோரியுள்ளது.

அதாவது 1.காணி 2. சுகாதாரமும் சுதேச மருத்து வமும் 3.உயர்கல்வி, பல்கலைக் கழகங்கள் உள்ளடங்கலாக கல்வியும் கல்விச் சேவைகளும் 4.கமத்தொழிலும் கமநலசேவைகளும் 5.நீர்ப்பாசனம் 6.விலங்கு வேளாண்மை 7.கண்டமேடு மற்றும் பொருளாதார வலயம் உள்ளிட்ட வரலாற்று நீர்ப்பரப்புகள் மற்றும் ஆள்புல நீர்ப்பரப்புக்கள் உள்ளடங்கலான கரையோர வலயங்களுடன் தொடர்புபட்ட மீன்பிடித் தொழில், கனிப் பொருள்கள், சுரங்கங்கள் உள்ளடங்கலான பொருளாதார வளங்கள்.

8.மாநிலத்திற்குள்ளான வனாங்கள், சரணாலயங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு 9.கைத்தொழில்களும் கைத்தொழில் அபிவிருத்தியும் 10.எரிபொருள், மின்சாரம் மற்றும் மின்வலு வழங்கல் 11.சுரங்கங்களும் கனியவளங்களும் குவாரிகளும் 12. போக்குவரத்து 13.மாநில கணக்கெடுப்பும் புள்ளி விபரவியலும் 14.விமான நிலையங்களும் துறைமுகங்களும் இறங்குதுறைகளும் 15.ஆறுகளும் நீர்நிலைகளும் 16. வீதிகளும் பெருந்தெருக்களும்

17.வீடமைப்பும் நிர்மாணத்துறையும் 18. நகர திட்டமிடலும் அபிவிருத்தியும் 19. கிராமிய அபிவிருத்தி 20.உள்ளூராட்சி மன்றங்கள் 21.கூட்டுறவுகள் 22.மாநிலத்திற்குள்ளான உணவு விநியோகமும் பகிர்ந்தளிப்பும் 23.சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு 24. பொது ஆற்றுகைகள் உள்ளடங்கலாக கலாசார செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், 25. தொலைக்காட்சி உள்ளடங்கலான ஒலிபரப்பும் ஊடகமும்,

26. நிவாரணங்கள், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் 27.சமூகப் பாதுகாப்பு 28. பொலிஸாரும் சட்டமும் ஒழுங்கும். (மீன்பிடி உரித்துகளையும் மீட்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் கரையோர வளங்களை பாதுகாக்கும் பொருட்டும் பொலிஸார் ஒரு கரையோரப் பாதுகாப்பு பிரிவொன்றை ஸ்தாபிக்க முடியும்)

29.சீர்திருத்தும் நிலையங்கள் மற்றும் சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களின் நிர்வாகம் 30.மாநில பொதுச் சேவைகள் 31. விளையாட்டுத் துறை 32.மாநிலத்திற்குள்ளான கூட்டிணைக்கப்படாத சங்கங்களையும் மன்றங்களையும் ஒழுங்குபடுத்தல்,

33. மாநிலத்தின் கடன் 34. உள்நாட்டு மற்றும் சர்வதேச கடன் மற்றும் உதவி பெறுதல் (சர்வதேச கடன் பெறுதலின் போது குறித்த வரையறையை மீறும் பட்சத்தில் மத்தியின் ஒருங்கியைவு தேவைப்படும்) 35. மாநிலத்துக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு, சர்வதேச நன்கொடைகள், அபிவிருத்திக்கான உதவிகளை ஒழுங்குபடுத்தலும் ஊக்குவித்தலும்,

36.மாநில நிதி மற்றும் கடன் நிறுவனங்கள் 37. மதுவரி தீர்வைகள் 38. பிராந்தியத்தின் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான விற்பனைப் புரள்வு வரிகள்/பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள். 39. தேசிய லொத்தர்கள் தவிர்ந்த பந்தய வரிகளும், பரிசுப்போட்டிகளும், லொத்தர்களும் மீதானவரிகள். 40. மோட்டார் வாகன உரிமம் மற்றும் கட்டணங்கள்.

41. மோட்டார் வாகன மற்றும் ஆதன விற்பனைகள் மீதான முத்திரைக் கட்டணம். 42.நீதிமன்றங்களினால் அறவிடப்படும் தண்டப் பணங்கள் 43. நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைக் கட்டணம் உள்ளடங்கலாக நீதிமன்ற கட்டணங்கள். 44. இறைவரியினை மதிப்பிடுதல், அறவிடுதல் உள்ளடங்கலான காணி வரி அறவீடு மற்றும் வரி அறவிடும் நோக்கங்களுக்காக காணி பதிவேடுகளை பேணுதலும்.

45.கனிப்பொருள் உரிமைகள் மீதானவரிகள். 46.மாநில கணக்காய்வு 47.மாநில நிரலில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்குதல். 48. மாநில நிரலில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலான தண்டப்பணம். 49. மாநில மட்டத்திலான திட்டமிடல் 50.மாநிலத்துக்கான சட்ட சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் 51. தொல்பொருள் மற்றும் பாரம்பரிய அமைவிடங்கள், நூதன சாலைகள், சுவடிகள்,

52. மாநிலத்துக்குள்ளான நிர்வாகம் 53. மாநிலத்துக்குள்ளான நீதிநிர்வாகம் 54. மாநில திரட்டு நிதியம். ஆகியவற்றை வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்குரிய அதிகாரங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர மத்திய அரசிற்குரிய அதிகாரங்கள் என குறிப்பிடப்பட்டுள்ள முப்பத்தி ஏழு அதிகாரங்கள் தவிர ஏனைய அனைத்தும் மாநிலத்திற்கான அதிகாரங்கள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இவற்றோடு வடகிழக்கு மாநில ஆட்சி நடைமுறைக்கான சில முன்மொழிவுகளும் தீர்வு திட்ட முன்வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளன. (செ-4)

# ஜெனிவா பிரேரணை பிரித்தானியா உறுதி!

(கொழும்பு)

ஜெனிவா பிரேரணை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதில் பிரித்தானியா தெளிவான நிலையில் இருப்பதாக பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணையில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு தொடர்பில் அண்மைய நாட்களாக பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளியாகிவரும் நிலையில், இது குறித்து ஜேம்ஸ் டோரிஸிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது இந்த கேள்விக்கு பதிலளிப்பதை விட ஜெனிவா பிரேரணை அமுலாக்கத்தில் அவதானம் செலுத்துவது சிறந்தது என தெரிவித்துள்ளார்.

மேலும், ஜெனிவா பிரேரணையில் இலங்கை அரசு பயணிக்க வேண்டிய பாதை தெளிவாக கூறப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எவ்வாறான திட்டங்களை வகுத்துள்ளது என்பது தொடர்பில் இதுவரை தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்வரும் ஜுன் மாதத்திற்கு முன்னதாக பிரேரணையின் அமுலாக்கம் குறித்த முதற்கட்ட அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தில் முன்வைக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# ஜனாதிபதிக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம் மாதம் 23ஆம் திகதி ஜேர்மனிக்கு செல்லவுள்ளார். பெர்லின் நகருக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அங்கு பலத்த பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜேர்மனியிலிருந்து அவர் ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணங்களின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க நெறிமுறை தலைமை அதிகாரி ரிஸ்வி ஹசன் தலைமையிலான ஏழு அதிகாரிகள் பெர்லின் சென்றுள்ளனர். இவர்கள், அரச பணத்தை மிச்சப்படுத்துவதற்காக, அங்குள்ள தூதுவர் கருணாதிலக அமுனுகமவின் இல்லத்தில் தங்கி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். முன்னொரு போதும் இல்லாதளவுக்கு ஜனாதிபதிக்கு பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படு வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

# ஆயுதங்கள் மீட்பு



அம்பாறை கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாய்ந்தமருது அல் அமான் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடொன்றின் வளாகத்தில் அமைந்துள்ள மலசலக் கூட குழியொன்றிலிருந்து கழிவுகளை அகற்றிய போதே, ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது 16 கைத்துப்பாக்கி தோட்டாக்கள் , 13 வெற்றுத்தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைக்குண்டொன்றும், 33 ரி 56 துப்பாக்கி தோட்டாக்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# எப்.யூ.ரீ.ஏவின் புதிய சபை தெரிவு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் புதிய அதிகாரிகள் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் களனிய பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற வருடாந்த ஒன்றுகூடலின் போதே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் புதிய தலைவராக மொரட்டுவை பல்கலைக்கழக பேராசிரியர் ரங்கிக கல்வதுரவும், செயலாளராக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஷாயாம் பஸ்நாயக்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் அச் சங்கத்தின் புதிய பொருளாளராக களனிய பல்கலைகழகத்தின் குமுது சுமேதா தேர்வாகியுள்ளார். (செ-12)

# ஒற்றையாட்சி முறைமை இல்லாதொழித்தால்தான் இலங்கையில் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியும்

## மாவை. எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நல்லாட்சி அரசு ஆட்சி நடத்தி வந்தாலும், தமிழர்கள் இன்னமும் அதனை முழுமையாக அனுபவிக்கவில்லை, என தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாட்டில் தற்போது உள்ள ஒற்றை ஆட்சி முறைமை இல்லாமல் செய்யப்பட்டு சமஷடி அடிப்படையிலான தீர்வு வழங்கப்படுவதன் மூலமே தமிழர்கள் நிம்மதியான வாழ்வொன்றினை வாழ முடியும் என தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், கடந்த முப்பது ஆண்டு காலமாக வடக்கு கிழக்கில் மாகாண சபை முறைமை இருக்கவில்லை. இதனால் சர்வாதிகாரமாகவே மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெற்று வந்தது. அரச அதிகாரிகளும் ஏதோ ஒரு கட்சிக்கு சார்ந்தே செயற்பட வேண்டிய நிலையும் காணப்பட்டது.



ஆகையால் பக்கச்சார்பாக செயற்பட வேண்டிய கட்டாயத்தில் கடந்த காலங்களில் இருந்த அரச அதிகாரிகளை வினைத்திறனாக செயற்பட வைக்க வேண்டிய கடமை எமது இணைத்தலைமைகளுக்கு உண்டு. எமது தேசமும் எமது மக்களும் கடந்த காலங்களில் அழிக்கப்பட்டு உள்ளார்கள். தற்போது நல்லாட்சி அரசு ஆட்சியில் உள்ளது என கூறப்பட்டாலும், அதனை எமது மக்கள் முழுமையாக அனுபவிக்க ஆரம்பிக்கவில்லை. நல்லாட்சி அரசின் நன்மைகள் எமக்கு கிட்டவில்லை.

ஆகையால் எமது மக்களின் நன்மைக்காக செயற்பட வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இந்த அபிவிருத்தி கூட்டத்தில் அரசியல் போட்டிகளை மறந்து எங்களது மக்களின் நலன்களுக்காக செயற்பட்டு, போரினால் பாதிக்கப்பட்ட எமது மாகாணத்தின் புனர்வாழ்விற்கு அதிக அக்கறை காட்டல் வேண்டும். நல்லாட்சி எனப்படும் புதிய அரசின் காலத்தில் கூட தயாரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில், போரினால் பாதிக்கபட்ட மாகாணம் என்ற வகையில் எமது மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை. 13 ஆவது திருத்த சட்டம் மூலம் எமக்கு போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. எமது அபிவிருத்தியை நாம் முன்னெடுப்பதற்கு இந்த ஒற்றையாட்சி முறைமையும் ஒரு தடையாக உள்ளது. ஆகையால் எமக்கான அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் இருந்து வந்த அராஜக ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் நிம்மதியான வாழ்வொன்றினை வாழ்ந்து வருவதாக கூறிவரும் நிலையில், எமது மக்கள் தற்போதும் கடந்த கால வாழ்வையே வாழ்ந்து வருவதாக எமக்கு தோன்றுகின்றது. அழிவடைந்துள்ள எமது தேசத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. அதனை கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்த்து செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# மதுரை மல்லிகை யாழ். மல்லிகையாக வேண்டும்

## யாழ். இந்தியத் துணைத்தூதுவர் விருப்பம்

மதுரை மல்லிகை இனிவரும் காலங்களில் யாழ். மல்லிகையாக மாற வேண்டுமென யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

மதுரைமாவட்டத்திலிருந்துகொண்டுவரப்பட்ட மல்லிகைக் கன்றுகளை நாட்டும் விழா நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு துர்க்கையம்மன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் மரபில் எமது முன்னோர்கள் காலத்திலிருந்து ஆலயங்கள், திருமண வைபவங்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் இந்து மத முறையில் மல்லிகைப்பூவை உபயோகிப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

ஆனால் இங்கு அவை அதிகளவில் கிடைப்பதில்லை. எனவே வடமாகாணம் முழுவதும் இந்திய மல்லிகை கன்றை நட்டு இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்கு விக்கும் நோக்குடனும் மல்லிகைப் பூவை அனைத்து நிகழ்வுகளிலும் மக்கள் பயன்படுத்தவேண்டும் என்ற நோக்குடனும் யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக 10 ஆயிரம் மல்லிகை மரக்கன்றுகளை நடும் திட்டத்தை புன்னாலைக்கட்டுவன் பகுதியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளோம். 2,3 மாதங்களுக்கு முன்னர் வவுனியா மாவட்டத்தில் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தோம். இனி வரும் காலங்களில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த மல்லி கைக் கன்றை அறிமுகப் படுத்துவதற்கு தயராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

மல்லிகைக் கன்று நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன்,மதுரை மாவட்ட வர்த்தக சங்கத்தலைவர் ஜெகதீசன் மற்றும் இந்திய வர்த்தகர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-9)




யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நர்ன் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle, UK



பருத்தித்துறை வர்த்தகர் சங்கம்

பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்
காலம்: 06.02.2016 சனிக்கிழமை மாலை 3.30 மணி
இடம்: சங்க காரியாலயம்
(UA 10 சந்தைக் கட்டட தொகுதி, பருத்தித்துறை)
வர்த்தக அங்கத்தவர்கள் தங்கள் உறுப்புரிமையை உறுதிப் படுத்தி தவறாது கலந்து கொள்ளவும்
செயலாளர்
சி.சிறிபிரகாஷ் (077 322 2837) பிரகாஷ் எலக்ரோனிக்
C6,சந்தைக் கட்டடத் தொகுதி, பருத்தித்துறை.
(சி-3592)


# இராசி பலன்

01.02.2016

(தை 18, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு,
அட்டமி முன்னிரவு 8.24 மணிவரை
சுவாதி பிற்பகல் 12.26 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36மணிவரை

வளவன்

**கிரகநிலை**
**சந்திராஷ்டமம்**
**ரேவதி -அச்சுவினி**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி | செவ் சந் | குரு |

**மேடம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள வேண்டிய நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மிதுனம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கடகம்:** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தூர தேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** நண்பர்களிடம் ஒப்படைத்த வேலைகளை நல்லபடியாக முடித்துக் கொடுப்பர், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், எந்தக் காரியத்திலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், உறவினர் வருகையுண்டு, சயனசுகக் குறைவான நிலையுண்டு.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காண முற் படுவீர்கள், உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகலாம்.

**மகரம்:** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு, மனதிற்கினிய புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள் தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மீனம்:** வரவை விட செலவுகள் கூடலாம், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை உருவாகும், திருடர் பயமுண்டு.

# அதிகாரங்களைப் பறிக்கவே நல்லாட்சி அரசும் முனைகிறது

## வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**மாகாணங்களுக்குள் இருக்கும் அதிகாரங்களை பறித்து கொள்ளவே தற்போதைய அரசும் முனைவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இணைத்தலைவராக உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல தடைகள், தடங்கல்கள், தாமதங்கள் மத்தியில் எமது அரசாங்க அதிபர் இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். மாகாணமட்டத்தில் என்னை மட்டும் ஐந்து மாவட்டஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட இணைத்தலைவராகவும் முப்பத்திநான்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட இணைத்தலைவராகவும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

மொத்தம் 39 கூட்டங்களுக்கு நான் இணைத்தலைவராகக் கடமையாற்றுவதனால் வேறு வேலைகள் எவற்றையும் நான் பார்க்க முடியாமல் போய் விடும். எனவே என் சார்பில் மற்றவர்களைக் கடமையாற்ற அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியிருந்தேன். அதற்குப் பதில் வரவில்லை. அது மட்டுமல்ல கடந்த 13ஆம் திகதி அன்று வேறு சில விடயங்களையும் அவருக்குத் தெரிவித்திருந்தேன்.

அதாவது 24.01.1996 ஆம் திகதிய பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் படி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு மாகாணம் சார்பில் முதலமைச்சரும் மத்திசார்பில் அமைச்சர் அல்லது சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே இணைத்தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்ததை அவருக்குத் தெரியப்படுத்தினேன். இது சென்ற வருடம் வரை பின்பற்றப்பட்டு வந்ததையும் இவ்வருடம் குறித்த சுற்றறிக்கைக்கு மாறாக நான்கு பேர் இணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினேன்.

சட்டவாக்கத்தில் ஈடுபட வேண்டிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் நடைமுறைப்படுத்தும் அதிகாரங் கொண்ட அமைச்சர்களுடன்இணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதை அவருக்கு எடுத்துக் காட்டினேன். இதனால் மாகாண சபையின் நிர்வாகத்திற்குஏற்படப் போகும் பாதிப்புக்கள் பற்றியும் எடுத்துக் காட்டினேன். அரசாங்க அதிபர்கள் மாகாண முதலமைச்சர் இன்றி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்த எத்தனிப்பதையும் அவருக்கு கடிதமூலம் தெரியப்படுத்தினேன். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் பொதுவான சட்டரீதியான தார்ப்பரியத்தை நாங்கள் யாவரும் முதலில் அறிந்து கொள்ளவேண்டும். இது பற்றி மற்றைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இதுவரையில் குறிப்பிட்டும் வந்துள்ளேன். என்னுடைய இது பற்றிய கருத்து உங்கள் கூட்டஅறிக்கையில் ஆவணப்படுத்தவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடமாகாண சபை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் தொடங்கப்பட்டபோது முதற் கூட்டத்திலேயே சில கருத்துக்களை ஆவணப்படுத்தியிருந்தேன்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மகிந்த சிந்தனைகளை நடைமுறைப்படுத்தவே ஒருங்கி ணைப்புக் குழுவானது நியமிக்கப் பட்டுள்ளது என்று கூறி அதனை நடைமுறைப்படுத்தவே என்னை நியமித்துள்ளதாகக் குறிப்பிட்டதைக் கண்டித்து வடமாகாணம் மகிந்த சிந்தனையை ஏற்கவில்லை என்றும் 38 பேரில் 30 பேர் அச்சிந்தனையை ஏற்காதவர்கள்தான் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள் என்ற கருத்தையும் வெளியிட்டு நடைபெறும் செயற்றிட்டங்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தால் தான் நாங்கள் பங்குபற்றுகின்றோம் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

மத்தியின் நெறிப்படுத்தலுக்கு மாகாணத்தை வளைக்க எத்தனித்திருந்ததை அப்போதுஎடுத்துக் காட்டினேன். இப்போதும் அதனையே வலியுறுத்தி எல்லா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் ஒரு கருத்தை வலியுறுத்தி வருகின்றேன்.

புதிய அரசியல் யாப்பு ஒன்றை அமைக்கப் போவதா கஅரசாங்கம் அறிவித்திருக்கும் வேளையில் மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் இருக்கும் தற்போதைய உறவை ஆவணப்படுத்துவதால் இவ்வாறான தவறான உறவுகள் நீடிக்காது பார்க்க எமது ஆவணப்படுத்துகை அனுசரணை வழங்கும் என்பதைச் சொல்லிவைக்கின்றேன்.

ஒற்றையாட்சியின் கீழ் இலங்கை - இந்திய உடன்பாட்டின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வு பாதிக்கப்பட்டது. முக்கியமாக உண்மையில் வடகிழக்கு மாகாணங்களுக்கென்றே இனப்பிரச்சினையைத் தீர்க்க அதிகாரப்பகிர்வானது 13 ஆவது திருத்தச் சட்டத்தினால் கொண்டு வரப்பட்டது. ஆனால் ஒற்றையாட்சி என்றதால் ஜனாதிபதியினால் உடன்பாட்டினால் வழங்கப்பட்ட உரித்தை மீளப்பெறக் கூடியதாகவிருந்தது. மாவட்டசெயலாளர்களைத் திரும்பவும் மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்ததால் நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்படத் தொடங்கின. அதை நிவர்த்தி செய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் காலத்தில் 1996 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதில் மத்தியையும் மாகாணத்தையும் ஒருங்கிணைத்து நிர்வாகத்தை முன் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உண்மையில் திரும்பப் பெற்ற உரித்தை மாகாணங்களுக்கே திருப்பி அளித்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை.

ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கு மாகாணம் சார்பில் முதலமைச்சரும் மத்தி சார்பில் அமைச்சர் அல்லது சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே இணைத் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அமைச்சருக்குப் பதிலாக சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் என்று அதில் குறிப்பிடும் போது அது ஒரு குறைபாடாகவே சட்டப்படி தெரிந்தது.

ஏனென்றால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சட்டவாக்கத் தகைமையையேகொண்டவர். அவர்களுக்கு நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்படவில்லை. இது இங்கிருக்கும் இணைத் தலைவர்களை எந்தவிதத்திலும் குறைகூறுவதாக எடுத்துக் கொள்ளப்படலாகாது. நியமனங்களில் அரசியல்தீர்மானங்களை எடுத்து மாகாண சபையின் அதிகாரங்களை முடக்க எத்தனங்கள் நடக்கின்றனவோ என்று சிந்திக்கவேண்டியுள்ளது. ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார். அதை விமர்சிக்க முதலமைச்சருக்கு என்ன உரித்திருக்கின்றது என்று சிலர் கேட்கலாம். ஜனாதிபதி முன்னைய சுற்றறிக்கையை வாங்கி விட்டுப் புதியசுற்றறிக்கையை வெளியிட்டிருந்தாரானால் நான் மேற்கூறியகருத்துக்களைத் தெரிவித்திருக்கமாட்டேன்.

சில அரசாங்க அதிபர்களோ பிரதேச செயலாளர்களோ வெறுமனே மத்திய அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தலாம் என்று நினைப்பதுதவறானது. ஒருங்கிணைப்பு என்றால் இரு சாராரையும் சேர்த்து வைப்பது. யாரையும் யாரையும் நாங்கள் ஒருங்கிணைக்கின்றோம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இது மற்றைய மாகாணங்களில் அத்தனை பெரிதாகப் பார்க்கப் படமாட்டாது என்பது எனக்குத் தெரியும்.

ஆனால் மத்தியில் இருக்கும் அரசாங்கமும் மாகாணத்தில் இருக்கும் அரசாங்கமும் வேறு வேறு கட்சிகளைச் சேர்ந்திருப்பதால் மத்தியும் மாகாணமும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளைக் கொண்டு செல்வது வடமாகாணத்தில் மிகவும் முக்கியமாக இருக்கின்றது. ஆகவே மத்தியையும் மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்கள் இணைத் தலைவர்களாக இருந்து நடத்தினால்தான் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் சட்டவலுப் பெற்றிருக்கும். தனிய அரசாங்க அமைச்சர்களையோ சட்டவாக்கப் பொறுப்பில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களையோ மட்டும்இணைத் தலைவர்களாகக் கொண்டு ஒரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தமுடியாது. நடத்தினால் அது ஒருங்கிணைப்புக் குழு கூட்டமாகாது. நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கொண்ட மத்தியின் அமைச்சரும் சட்டவாக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைச் சேர்த்து நடத்தும் ஒரு கூட்டம் ஒருங்கிணைப்புக் கூட்டமாகவேகருதப்படமாட்டாது. அங்கு ஒருங்கிணைப்பு நடைபெற வேண்டுமானால் மாகாணம் சார்பாக நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கொண்ட ஒருவர் அமர்ந்தே தீரவேண்டும். இப்பொழுது எல்லோரும் இதை உணர்ந்துகொண்டுள்ளார்கள் என்று நம்புகின்றேன்.

மன்னாரில் வடமாகாண சபை சார்பில் எவரும் இணைத்தலைவராகச் செயலாற்றாமல் கூட்டம் நடந்து முடிந்ததாகக் கேள்விப்பட்டேன். அக்கூட்டத்தின் சட்டவலுப் பற்றி அரசாங்க அதிபர் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். வெறுமனே மத்திய அரசு சார்பான ஓரிருவர்களை வைத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்த முடியாது என்பதை நாங்கள் உணர வேண்டும். மாகாண சபைக்கு முழுமையாக இலங்கை - இந்திய உடன்பாட்டின் கீழ் கொடுக்கப்பட்ட ஒரு உரித்தையே கூறுபோட்டு தற்போது மாகாணம் இல்லாமலே மத்தியின் ஏற்பாட்டின் கீழ் மாகாண நிர்வாகத்தை நடத்த முடியும் என்று சிலர் நினைக்கின்றார்கள். அது தவறு என்று சுட்டிக்காட்டவே இவ்வளவையும் இங்கு பிரஸ்தாபித்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

---

# ராணுவத்தளபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தடை!

## சட்டமா அதிபர் திணைக்களம் பிறப்பித்தது

இலங்கையின் இராணுவ தளபதி கிரிசாந்த டி சில்வாவுக்கு எதிரான சட்டநடவடிக்கைகளை காலதாமதம் செய்யவேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களம், சீ.ஐ.டிக்கு உத்தியோகபூர்வ மற்ற முறையில் தெரியப்படுத்தியுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போகச்செய்யப்பட்டமை தொடர்பில் இராணுவத்திடம் சில ஆவணங்களை ஹோமாகம நீதிமன்றம் கோரியிருந்தது.

எனினும் இராணுவத்தளபதி இன்னும் அதனை சமர்ப்பிக்கவில்லை. இதனையடுத்து இராணுவத தளபதி மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்என்று ஹோமாக நீதவான உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை சீ.ஐ.டியினர் சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

எனினும், இந்த நடவடிக்கையை காலதாமதப்படுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களம் உத்தியோக பூர்வ மற்ற முறையில் தெரியப்படுத்தியுள்ளதாக சீ.ஐ.டியை மேற்கோள் காட்டி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு பேரவை கூட்டத்திலும் இராணுவத் தளபதிக்கு எதிரான நடவடிக்கை தாமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை படைத்தலைவர்கள், ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ளனர்.

இராணுவத்தளபதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது படைகளுக்குள் பிரச்சினையை தோற்றுவிக்கும் என்றும் படைத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனினும் பிரகீத் எக்னெலிகொடவின் விசாரணைகளின் போது எந்த விடயமும் மறைக்கப் பட இடம் தரமுடியாது என்று ஜனாதிபதி உறுதிபட தெரிவித்துள்ளார். (இ)

---

# விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது

கொழும்பு ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் பிரித்தானியாவுக்கான விசா அனுமதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்று காரணம் காட்டியே இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதிய ன்று லண்டனில் நடைபெற வுள்ள மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காகவே கர்தினால் மல்கம் ரஞ்சித் பிரித் தானியா செல்லவிருந்தார்.

கர்தினால் முன்னர் பிரித் தானியாவுக்கு மேற்கொண்ட விஜயம் உட்பட்ட பல தகவ ல்கள் விசா விண்ணப்பத்தில் குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்தினால் அது நிராகரிக் கப்பட்டதாக ககர்தினாலின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தனிப்பட்ட ஒருவரின் விசா விடயம் என்ற அடிப்படையில் இது குறித்து கருத்துககூற முடியாது என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. (இ)

# SHANTHIHAM
Association for Health & Counselling

## Vacancy

Shanthiham, the Association for Health and Counselling is a non-government organization providing psychosocial support services and training of government and non-government cadre in the northern region. Presently Shanthiham is implementing a three year EIDHR program with the support of ZOA funded by European Union (EU). The overall goal of the program is Community-based integrated Mental Health/Psychosocial Support Program in Northern Province of Sri Lanka.

**1. Monitoring and Evaluation Officer**

**SPECIFIC RESPONSIBILITIES**

**1. Monitoring**

1.1 Develop project monitoring plan (PMP) of the projects in line with project LFA and consulting with Program team and partners.

1.2 Coordinate with Implementing Partners (IPs) for collecting data against agreed indicators.

1.3 Engage with IPs to collect and manage essential data of their respective projects.

1.4 Ensure quality of data collected by Field Mobilizers.

1.5 Provide feedback to partners and Program teams on projects' performance based on monitoring data findings.

1.6 Assist Finance Team in developing budgets.

**2. Evaluation**

2.1 Assist Director in designing, coordinating and conducting project evaluations (mid-term and end-line)

2.2 Assist Director in designing and conducting Post Implementation Monitoring Survey (PIMS)

2.3 Assist Program team in conducting Program Data Review.

2.4 Support partners in designing and disseminating research studies by providing relevant input.

**Functional Competencies:**

·A solid understanding of mental health and psychosocial support, with the focus on gender issues, participatory processes and joint management.

·Familiarity with and a supportive attitude towards processes of strengthening local organizations and building local capacities for self-management.

·Willingness to undertake regular field visits and interact with different stakeholders, especially primary stakeholders.

·Technical report writing skill and a high-level of computer literacy.

·Good knowledge and experience of local context, legal and management issues.

·Fluency in written and spoken English and Tamil is required.

·Good personal organization, interpersonal and communication skills.

·Working at national and sub-national level in national development issues is an asset.

·Previous working experience with UN, INGO and other donors and GBV projects is an asset.

·Previous working experience in communication and advocacy and cooperation with media will be an asset.

**2. உள சமூக பணியாளர் / உளவளத்துணையாளர்**

**தேவையான தகுதிகள்**

*க.பொ.த உ/த பரீட்சையில் சித்தி.

*தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து உளவளத்துணையாளர் டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

*3 வருட அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம்.

*அறிக்கை சமர்ப்பித்தல்/ கணனி அறிவு.

**3. Communication Officer**

**Requirements**

·Should have a degree or equivalent in English / Language/ Communication / Public Relation / Journalism or in relevant field.

·Should have 3 years professional experience in managing communication activities and writing proposals and reports to reach local and international audience.

·Experience on develop branding initiatives, internal communications and external media relations.

·Experience on communication strategy and execute programs to deliver communication objectives throughout the organization.

·Excellent skills of keep effective coordination with stakeholders including government organizations.

·Excellent communication skills in oral and written in English.

·Ability to work independently with minimum supervision.

·Previous working experience in UN/INGO and NGO in this same field is an asset.

·Ability to cover reporting, proposal writing and communicating with donors.

**Women are highly encouraged to apply.**

The short listed candidates will be invited for an interview. Applicants are requested to send their updated CVs on or before 6th of February, 2016.

**Director,**
**Association for health and Counselling - Shanthiham**
**8-1/8 Katpagavinayagar Lane,**
**Off Kachcheri Nallur Road, Jaffna**

UNIVERSITY COLLEGE OF JAFFNA UNIVOTEC

# யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரிக்கான புதிய அனுமதி

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரியின் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு தகுதியுடைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.உணவுத் தொழில்நுட்பவியல்** Food Technology

**2.கட்டடசேவைகள் தொழில்நுட்பவியல்** Building Services Technology

**3.குடிசார் பொறியியல் கட்டுமான தொழில்நுட்பவியல்** Construction Technology

**4.பொறியியல் சார் உற்பத்தித் தொழில்நுட்பவியல்** Production Technology (Mechanical & Manufacturing Technology)

**5.விவசாய இயந்திரவிய தொழில்நுட்பவியல்** Farm Machinery Technology (Agricultural Machinery Technology)

**6.இயந்திரமின்னணுவியல்** ( Mechatronic Technology)

**7.விருந்தோம்பல் மற்றும் உபசரணை முகாமைத்துவம்** Hospitality Management ( Hospitality & Tourism Management )

**8.அழகுக் கலையியல்** Cosmetology ( Beauty Culture)

**வேண்டப்படும் தகைமை:** க.பொ.த.உயர்தரத்தில் எத்துறையிலாவது 3 பாடங்களில் சித்தி அல்லது தேசிய தொழில் தகைமை மட்டம் 4 இல் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள முன்னணி புத்தகசாலைகளிலோ அல்லது எமது www.ucj.lk என்னும் இணையத்தளத்திலோ அல்லது இல. 29,பிறவுண் வீதி,கொக்குவில் இல் உள்ள எமது கல்லூரியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும் என்பதால் உங்கள் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுதிகதி :-** 12.02.2016

மேலதிக தகவல்களுக்கு

முகவரி:- இல. 29,பிறவுண் வீதி,கொக்குவில்,யாழ்ப்பாணம்

தொலைபேசி இல : 021-221-7791 / 021-221-7792

இணையத்தள முகவரி : www.ucj.lk

மின்னஞ்சல் : intoucjaffna@sltnet.lk

(C-3593)

# கல்யாண மாலை

## இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா:12செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்
தொ.இ: B/3644

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 6 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:B.COM/ஆசிரியர்
தொ.இ: B/3651

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 29
உயரம்: 180cm
தகைமை/தொழில்:MSC,B.COM லண்டன்
தொ.இ: B/3653

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 16செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:Diploma, NCT CIVIL/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/3659

## இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 100செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc/போதனாசிரியர்
தொ.இ: G/4193

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 55
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4194

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 28சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்
தொ.இ: G/4199


பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 12
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பொறியியலாளர்
தொ.இ: G/4204

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## பொதுமக்களின் பாவனைக்கு ஏற்ற முறையில் பொதுக்கிணறுக்கு சுற்றுவேலி அமையுங்கள்



(வற்றாப்பளை)

முல்லைத்தீவுமாவட்டம்கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட் பட்ட வற்றாப்பளை தெற்கு கிராமத் தில் ஜப்பான் அரசின் நிதியுதவியு டன் அமைக்கப்பட்ட பொதுக்கிணறை மக்கள் பாவனைக்கு ஏற்றாற்போல் துப்புரவுசெய்து பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் பாவனைக்கு உகந்த வகையில் பாதுகாப்பான மறைப்பு வேலிகள் அமைத்துதருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

இக்கிணறு கட்டி முடிக்கப்பட்டு சுமார் நான்கு வருடங்கள் கடந்தும் பொதுமக்களின் தேவைக்கமைவாக அமைக்கப்படவில்லையென அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப் பகுதியில் கிணறுகள் இன்றி வாழ்கின்ற பொதுமக்கள் அக்கிணற்றுக்கு அருகில் இருக்கும் இராமோதைய சுகாதார நிலையத்தின் கிணற்றை தமது தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் சுகாதார நிலையத் திற்கு வருகைதரும் கர்ப்பிணித் தாய் மார்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே குறித்த கிராமத்தை கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி சங் கத்தினர், மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் இதனைக் கருத்தில் கொண்டு குறித்த பொதுக் கிணற்றை பாவனைக்கு ஏற்றாற் போல் அமைத்துத் தருமாறு அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். (2-310)

## நாவற்காடு இடுகாடு, சுடுகாடுகளை புனரமைப்புச் செய்ய நிதியொதுக்கீடு

### வலம்புரி செய்தியை அடுத்து

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட நாவற்காட் டில் அமைக்கப்பட்டுள்ள இடுகாடு, சுடுகாடு ஆகியவற்றின் குறைபா டுகள் பற்றி கடந்த மாதம் 24 ஆம் திகதிவலம்புரிப் பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து அதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து ஒரு இலட்சம் ரூபாவை இதனைப் புனரமைப்பதற்கு வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவ தாவது,

மேற்படி மயானங்களின் குறை பாடுகளால் அப் பிரதேச மக்கள் எதிர் கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பில் வலம்புரி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டதன் விளைவாக முதற்கட்டமாக குறித்த மயானங் களை துப்புரவு செய்து சுற்றுவேலி களை அமைப்பதற்கு இத் தொகையை ஒதுக்குவதாக நேற்று முன்தினம் முள்ளிவளை வடக்கு கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது மாகாண சபை உறுப்பினர் தெரி வித்தார்.

அத்துடன் மேற்படி மயானங் களின் ஏனைய கட்டுமானப் பணி கள் தொடர்பில் ஒரு திட்ட வரைபை தன்னிடம் ஒப்படைக்குமாறும் அதனை உரியவர்களிடம் கையளித்து அச் செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி மொழி வழங்கினார்.

மேலும் அப் பிரதேச மக்களின் ஏனைய குறைபாடுகள் தொடர்பாக கேட்டறிந்த மாகாண சபை உறுப் பினர், அவை தொடர்பில் உரியவர் களுக்கு தெரியப்படுத்தி நடவ டிக்கையை விரைவுபடுத்துவதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி கூட்டம் முள்ளியவளை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.அமலதாஸ் தலைமை யில் முள்ளியவளை வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது. (2-310)




## அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக மக்களின் கருத்துக்களை கேட்டறிய அமர்வுகள்

### கிளிநொச்சியில் இரண்டு தினங்கள்

அரசியல் அமைப்புச் சீர்திருத் தங்கள் தொடர்பாக பொதுமக்க ளின் கருத்துக்களைக் கேட்டறியும் குழுவின் அமர்வுகள் எதிர்வரும் 8 , 9 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள் ளது.

இந்த அமர்வில் அரசியல் அமைப் புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக பொது மக்கள் தமது கருத்துக்களை பதிவு செய்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தேச அரசியலமைப்புச் சீர் திருத்தங்களுக்கான முன்மொழிவு களை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக 20 உறுப்பினர் களைக் கொண்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுவொன்று அமைச் சரவையின் அங்கீகாரத்துடன் நிய மிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்தங் கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களை பெறுவது இக் குழுவின் பணியாகும்.

அதன் பின்னர் அந்தச் சமர்ப் பணங்கள் மீதான அறிக்கையொன் றையும் அதன் சிபாரிசுகளையும் இக்குழு தயாரித்து அவற்றை அர சியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான அமைச்சவை உப குழுவுக்கு சமர்ப் பிக்கப்படும்.

எனவே இந்த அமர்வுகளில் பொதுமக்கள் பங்குபற்றுவதோடு தங்கள் யோசனைகளை இந்தக் குழுவுக்குத் தெரிவிக்க அழைக்கப் படுகின்றனர். வாய்மூல யோசனை களை செய்யும் போது தமது யோச னைகளின் சாராம்சத்துடன் கூடிய எழுத்துமூலமான பிரதியையும் வழங் குவது விரும்பத்தக்கதாகும்.

இது தொடர்பான மேலதிக விப ரங்களை 011 243 7676 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 011 232 8780 என்ற தொலைநகல் ஊடாகவும் constitutional reforms@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் yourconstitution.lk எனும் வலைத்தளத்தினூடாகவும் தவிசாளர் அரசியலமைப்புச் சீர் திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு செயலகம், விசும் பாய, ஸ்ரேபிள்ஸ் வீதி, கொழும்பு 02 எனும் முகவரி ஊடாகவும் தொடர்பு கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

## மின் விளக்குகளைப் பொருத்தி போக்குவரத்துக்கு உதவுங்கள்

### முள்ளியவளை, தண்ணீரூற்று மக்கள் கோரிக்கை

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிய வளை, தண்ணீரூற்று ஆகிய பகுதி களில் பிரத்தியேகமாக வீதி விளக் குக் கம்பங்களை அமைத்து அவற் றில் வீதி விளக்குகளைப் பொருத்தி போக்குவரத்திற்கு உதவுமாறு அப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளி டம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவ தாவது,

தற்போது அப் பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவை பெரும்பாலும் மின் கம்பங்களிலேயே பொருத்தப் பட்டுள்ளதால் அவற்றின் மூலம் வீதிகளுக்கு போதியளவு வெளிச் சம் கிடைப்பதில்லையெனவும் அவ் விளக்குகளில் சில ஒளிராமல் இருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் வீதி விளக்குகளை பொருத்தப்பட வேண்டிய இடங்களில் மின் கம்பங்கள் இல்லாது விடில், அவற் றுக்கென பிரத்தியேகமாக கம்பங் களை அமைத்து மின் விளக்கு களைப் பொருத்த வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். (2-310)

### கர்ப்பூரப்புல் இந்து மயானத்தில் சடலங்களை

## எரியூட்ட அமைக்கப்பட்டுள்ள இரும்புத் தூண்கள் இந்து சமய ஆசார முறைப்படி அமையவில்லை

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(முள்ளியவளை)


முள்ளியவளை கர்ப்பூரப்புல் இந்து மயானத்தில் சடலங்களை தகனம் செய்வதற்கான கொட்டகை நிர்மாணிக் கப்பட்டுள்ள போதிலும் சடலங்களை வைத்து தகனம் செய்வதற்காக நாட்டப்பட்டுள்ள இரும்புத் தூண் கள் இந்து சமய ஆசாரமுறைப் படியல்லாது திசைமாறி அமைக்கப் பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக் கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவ தாவது,

தகனம் செய்வதற்காக நாட்டப் பட்டுள்ள இரும்புத்தூண்கள் இந்து முறைப்படி வடக்குத் தெற்குத்திசை நோக்கி நாட்டப்படாமல் கிழக்கு மேற் காக நாட்டப்பட்டுள்ளமையால் தகனக் கிரியைகளுக்காக அங்கு எடுத்துச் செல்லப்படும் சடலங்கள் மழை காலங்களில் கூடக் கொட்ட கைக்கு வெளியில் வைத்தே தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் அமைக்கப்பட்டுள்ள கொட்டகையின் உயரம் குறைவாக உள்ளதாகவும் உடல்களை இந்தக் கொட்டகையில் தகனம் செய்யும் போது நெருப்பின் தாக்கம் நேரடி யாக தகரத்தை சென்றடையக்கூடிய குறுகிய உயரத்தைக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் கொட்டகையின் கூரைத்தகடுகள் விரைவாக சேத மடையக்கூடிய நிலையில் உள்ளன என மக்கள் சுட்டிக் காட் டுகின்றனர்.



இந்த மயானமானது கரைதுறைப பற்று பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே உரிய அதிகாரிகள் இக் குறைபாடுகளை விரைவாக சீர் செய்து சடலங்களை இந்துக்களின் ஆசார முறைகளுக்கு அமைய தகனம்செய்வதற்கு வழிசெய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-302)





ஒட்டுசுட்டான் கருவேலன் கண்டல் ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு நேற்று முன்தி னம் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநா தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(படங்கள் முள்ளியவளை செய்தியாளர்)

### நெல்சிப் திட்டத்தின் ஊடாக

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஒருகோடியே 80இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக ஒரு கோடியே 80 இலட்சத்து 64 ஆயிரம் ரூபா புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரப் பகுதியிலுள்ள பொது நூலக கட்டட புனரமைப்பு, மரக்கறி சந்தை புனரமைப்பு ஆகியவற்றின் வேலைகளுக்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் குமாரசாமி மிதுலைநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நடப்பாண்டில் வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரப்பகுதியிலுள்ள பொது நூலக கட்டட புனரமைப்பிற்காக 70 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாவும் புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையில் அமைந்துள்ள மரக்கறி சந்தைப்பகுதி புனரமைப்பிற்காக ஒருகோடியே 10 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் ஒரு கோடியே 80 இலட்சத்து 64 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதமளவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்களினுள் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-15)




# படிமுறை வளர்ச்சி காணும் துணுக்காய் கல்வி வலயம்

## மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யுத்தம் முடிவடைந்து மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சி வீதமானது படிப்படியாக அதிகரித்துச் செல்வதை தாம் வரவேற்பதாக கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக கூட்டத்தின் போது கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், வைத்திய கலாநிதி சிவமோகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன் போது துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. எல். மாலினி வெனிற்றன் தெரிவிக்கையில், கடந்த 2011ஆம் ஆண்டு தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் காணப்பட்ட சித்தி வீதமானது 40.8 வீதமாகவும் இது2012இல் 51.07 வீதமாகவும் 2013 இல் 63.07 வீதமாகவும் 2014 இல் 67.88 வீதமாகவும் 2015 இல் 70 வீதமாகவும் அதிகரித்துள்ளது.

இதேபோல் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 2011 இல் 28 வீதமாகவும் 2012 இல் 36.04 வீதமாகவும் 2013 இல் 36.31 வீதமாகவும் 2014 இல் 41.06 வீதமாகவும் 2015 இல் 65.11 வீதமாகவும் காணப்படுகின்றது. க.பொ.த. உயர்தரத்தில் 2012 இல் 69.23 வீதமாகவும் 2013 இல் 66.92 வீதமாகவும் 2014 இல 69.51 வீதமாகவும் காணப்படுகின்றது என அவர் தெரிவித்த போதே இணைத்தலைமை பிரதிநிதிகள் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளனர். (2-15)





வவுனியா செடடிகுளம வரபுரம மணிவாசகா மகாவிததியாலயததின வருடாநத இலல மெயவலலுநா திறனாயவு கடநத 29 ஆம திகதி மகாவிததியாலயததின அதிபா எஸ. நிததியானநதன தலைமையில நடைபெறறது. இதனபோது வடககு மாகாண சபை உறுபபினா ம.தியாகராசாவின மாகாணசபை பிரமாண அடிபபடையிலான நிதியொதுககடு ஊடாக பாணட வாததியக குழுவுககான இசைககருவிகள மகாவிததியாலயததின அதிபரிடம கையளிககபபடடன. (படஙகள: -பனிககனகுளம செயதியாளா)

# மீள்குடியமர அனுமதிக்காவிட்டால் உண்ணாவிரதப்போராட்டம் தொடங்கும்

## கேப்பாபிலவு மக்கள் வடமாகாண முதலமைச்சருக்கு மகஜர்

யுத்தம் நிறைவடைந்து 6 ஆண்டுகள் கடந்தும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இன்றும் அகதிகளாய் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி தவிக்கும் கேப்பாபிலவு கிராம மக்கள் தங்களைச் சொந்தக் கிராமமான கேப்பாபிலவில் குடியமர்த்துமாறு அரசாங்கத்தை நேரடியாகவும் பத்திரிகைகளினூடாகவும் பல தடவைகள் கேட்டிருந்தும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டும் இதுவரை செவிடன்காதில் ஊதிய சங்கு போலவே அரசு மௌனம் காத்து வருகின்றது. ஒரு ஜனநாயக அரசானது மக்களுக்காகச் சேவைகள் செய்து மக்களின் துயரங்களைத்துடைத்து அவர்களின் இன்னல்களைப் போக்கு வதாகும்.

ஆனால் எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில் மக்களின் உரிமைகளையும் பறித்து அவர்களின் வாழ் நிலங்களையும் அபகரித்து இரும்புக்கரம் கொண்டு அடக்கி வருகின்றது.

அரசின் ஆட்சி மாறிக் கொண்டே செல்கின்றன. ஆனால் கொள்கைகளோ மனிதாபிமானங்களோ இன் னும் கடும்போக்காகவே உள்ளன. ஆனால் தற்போது நல்லாட்சி என்ற பேரில் உருவான அரசாவது அவற்றைத் திருத்தியமைக்குமென நம்பியிருந்த எமக்கு பழையபடி முன்னர் இருந்த ஆட்சியாளர்களின் இத் திலிருந்தே தற்போதைய அரசு தொடர்கின்றது.

நாங்கள் இனிமேலும் அரசாங்கத்தை நம்பத் தயாரில்லை. எங்களது மீள்குடியேற்றம் தொடர்பாக சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் முகமாக நாங்கள் அகிம்சை முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக கிராமமக்கள் பகிரங்கமான அறிக்கையொன்றை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனூடாக வடக்கு மாகாண முதலமைச்சருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் எமது சொந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்காவிட்டால் அன்றிலிருந்து நாங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது நாங்கள் வாழ்ந்து வருகின்ற மாதிரிக்கிராமத்தில் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு ஏற்ற எந்தவொரு தொழில் நடவடிக்கைகளுமில்லை. நாங்கள் தற்போதும் ஒரு வேளை உணவிற்குக்கூட வழியில்லாத நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் இருக்கின்றோம்.

நாங்கள் இப்படி பட்டினியை எதிர்கொண்டு இருப்பதைவிட எங்களின் உரிமைக்கான உண்ணாவிரதம் இருந்து மடிவதுமேல் எனவும் கிராமமக்கள் தங்கள் ஆதங்கங்களைவெளிப்படுத்துகின்றனர். (2-30)

# அறுவடைக்கு தயாரான நெற்பயிர்களை சேதப்படுத்தும் கட்டாக்காலி மாடுகள்

(தண்ணீரூற்று)

முள்ளியவளை முறிப்பு, வற்றாப்பளை ஆகிய இடங்களில் நெல் வயல்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்படுகின்றன.

தற்போது இந்த வயல்களினுள் கால்நடைகள் உள்நுழைந்து சேதப்படுத்துவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பெரும்போக நெல்விதைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் அனைத்து கால்நடைகளையும் வீடுகளில் கட்டிவளர்க்க வேண்டுமென அந்தப் பகுதி கமக்கார அமைப்பினர் கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியிருந்தனர்.

அவ்வாறு கட்டிவளர்க்கப்படாது வயல் நிலங்களை சேதப்படுத்தும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு தண்டப் பணம் அறவிடப்பட்ட பின்னரே உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 28ஆம் திகதி முல்லைத்தீவு- மாங்குளம் 3 ஆம் கட்டை வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள கட்டைவேலி பகுதியில் 2 ஏக்கர் நெல் வயலின் கால் ஏக்கரை அப்பகுதியிலுள்ள மாடுகள் சேதமாக்கின.

இதனையடுத்து விவசாயியினால் மாடுகள் அனைத்தும் பிடிக்கப்பட்டு அப்பகுதி கமக்கார அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

இதனை அடுத்து சம்பந்தப்பட்ட கமக்கார அமைப்பும் கம விதானையும் சேதப்படுத்தப்பட்ட நெல் வயலை நேரில் சென்று பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு 10 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறு மாடுகளின் உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் தொடருமாகில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது. பின்னர் மாடுகள் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. (2-292)

# கிளிநொச்சியில் அதிகரிக்கும் சட்டவிரோத மணல் அகழ்வு



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் சட்டவிரோத மண் அகழ்வு மிகவும் கூடுதலாக நடைபெற்று வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதன் ஒரு பகுதியாக உருத்திரபுரம் சிவநகர் கிராம குடியிருப்பிற்கும் சிவன்கோயில் வீதிக்கும் இடைப்பட்டதாகவுள்ள சேதமடைந்த வீதியில் தொடர்ச்சியாக மண் அகழ்வு நடவடிக்கை நடைபெற்று வருகிறது. இந்த இடங்களிலிருந்து உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றப் படும் மணல் வீடுகளில் கொண்டு சென்று குவிக்கப்பட்டு அங்கிருந்து கன்டர் ரக வாகனங்களில் வரும் வெளி மாவட்டத்தினருக்கு விற்பனை செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெறத்தொடங்கியுள்ளது.

இதனால் சேதமடைந்த நிலையிலுள்ள வீதிகள் பல மேலும் சேதமடைந்து பொதுமக்கள் போக்குவரத்தில் துன்பமடையும் நிலை ஏற்படுத்தப்படுவதாக கவலை தெரிவிக்கப் படுகினறது.

இச்சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென அண்மையில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் பலரால் தெரியப்படுத்தப்பட்டது.

பொலிஸார் இச்சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க நடவடிக்கை எடுப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்த வண்ணமே யுள்ளது. எனவே சொல்லளவில் மட்டும் நின்றுவிடாமல் செயலில் இறங்கி சட்டவிரோத மணல் அகழ்வைத் தடைசெய்து பொதுமக்களையும் வீதிகளையும் பாதுகாக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-254)


# நாயுடன் மோதுண்டவர் தீவிர சிகிச்சைப்பிரிவில்

(தண்ணீரூற்று)

உந்துருளியில் பயணித்துக்கொண்டிருந்த போது வீதிக்கு குறுக்காக நாய் பாய்ந்ததால் அதில் மோதுண்டு குடும்பஸ்தர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் கடந்த 28 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.


இதில் முல்லைத்தீவு -சிலாவத்தை தீர்த்தக் கரையில் வசிக்கும் எஸ். சிறீஸ்கந்தராசா (வயது-45) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவார். (2-292)




தவில் மேதை லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தியின் 40 ஆவது ஆண்டு சிரார்த்த தின நிகழ்வுகள் அண்மையில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தில் இடம்பெற்ற போது...




திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற பொங்கல் விழாவின் போது...
(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி முள்பள்ளியிலிருந்து பாடசாலை செல்லும் சிறார்களுக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நிலையத்தின் போசகர் இ.செல்வநாதன், கொக்குவில் மேற்கு சி.சி. த.க பாடசாலை அதிபர் திருமதி. கு.இளங்கோவன் ஆகியோர் சிறார்களுக்கு பரிசில்களை வழங்குவதை படங்களில் காணலாம்.



உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளம் தொழில் முயற்சியாளர் பத்து பேருக்கு யு.என்.டி.பி. நிறுவன அனுசரணையில் நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு நிதியுதவியை பயனாளிகளிடம் வழங்கி வைத்தார்.மேலும் இந்நிகழ்வில் 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களால் வீடுகள் சேதமடைந்த பயனாளிகளுக்கான வீடுகள் திருத்தியமைப்பதற்கான உதவித்தொகைகளும் வழங்கி வைக்கப்பட்டன.



ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலக தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்ற போது...

# வலி.வடக்கு மக்கள் விரைவில் மீள்குடியேற்றப்படுவார்கள்

## அங்கஜன் எம்.பி. அறிவிப்பு



வலி.வடக்கு மக்கள் ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியின்படி விரைவில் தமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இணைத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இவ்வாறு இடம்பெற்றது, அவ்வாறு இடம்பெற்றது என பேசுவதை விட்டுவிட்டு எதிர்காலத்தில் மக்கள் நலத்திட்டம் தொடர்பில் பேசுவதுதான் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்கு பொருத்தமானதாக இருக்கும்.

யாழ். மாவட்டமானது பொருளாதாரத்தின் மையப் பகுதியாக காணப்படுகின்றது. எனவே யாழ். மாவட்டத்தை வடமாகாணத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் முக்கிய மாவட்டமாக முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை நாங்கள் செயற்படுத்த வேண்டும்.

நான் இந்த கூட்டத்தில் இணைத்தலைமையாக பங்குபற்றியபோதும் கட்சி பேதமாகவோ அல்லது அரசியல் வாதியாகவோ கலந்து கொள்ளவில்லை. மக்களின் நலன் சார்ந்து செயற்பாட்டாளனாகவே கலந்து கொண்டுள்ளேன். ஆகவே நாம் இதில் தலைமை உரைகளை குறைத்து அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் பேசுவது பொருத்தமானதாக அமையும்.

எம்மக்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக மீள்குடியேற்றம், வேலை வாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதை போன்று ஆறு மாத காலத்திற்குள் மீள்குடியேற்றம் இடம்பெறும். அதற்கான வேலைகள் இடம்பெறுகின்றன. அவ்வாறு குடியேறும் மக்களின் நலத்திடங்களை நாம் முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# வெளியுறவுத்துறை அமைச்சின் பணிகளை பிரதமரின் சர்வதேச குழு கண்காணிக்கும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் வரும் சர்வதேச விவகாரக் குழு, வெளியுறவு அமைச்சின் ப்ணிகளை கண்காணிக்கவுள்ளது.

இதன்போது வெளியுறவு கொள்கை உட்பட பல விடயங்களில் அந்தக்குழு வழிக்காட்டல்களை மேற்கொள்ளும் என்று இலங்கையின் ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.



திறைசேரியின் முன்னாள செயலாளரும்பிரதமரின்ஆலோசகருமான சரித்த ரத்வத்தை இந்தக் குழுவின் தலைவராக செயற்பட்டு வரு கிறார்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க, வெளியுறவு அமைச் ர மங்கள சமரவீர, பிரதி யமைச்சர் ஹர்ச டி சில்வா, அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, சாகல ரட்நாயக்க, லலித் ஏக்கநாயக்க உட்பட்டவர்களை நாடாளுமன்ற கட்டடத்தில் சந்தித்து பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

இதன்போது புதிய அரசாங்கம் பதவியேற்று கடந்த ஒருவருட காலப்பகுதியில் வெளியுறவு அமைச்சர் பெரிதாக பணிகளை முன்னெடுக்கவில்லை என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்கள் உரியமுறையில் பணிகளை மேற்கொள்ளவில்லை. இதில வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயமும் உள்ளடங்குகிறது.

இந்த நிலையில் வெளியுறவு அமைச்சின்கீழ் வரும் பொருளாதாரத்துறை பிரிவு அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவின்சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப் படவுள்ளது. (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### பெண்களுக்கான பலன்கள்

பொதுவாக பெண்களுக்கு உடலின் இடது பக்கத்தில் உள்ள மச்சங்களே நன்மையளிப்பவை. அதனால் ஆண்களுக்கு உடம்பில் வலது பாகத்தில் உள்ள மச்சங்களின் பலன்களை பார்த்தல் போன்றே பெண்களுக்கு உடம்பில் இடது பாகத்தில் உள்ள மச்சங்களை பார்த்து பலன்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது முறையாகும். ஆண்களுக்கு வலது பாகத்து மச்சங்கள் அதிக அளவில் நல்ல பலன்களை குறிப்பது போன்று பெண்களுக்கு இடது பாகத்து மச்சங்கள் அதிகளவில் நல்ல பலன்க ளை கொடுக்கும். பெண்களுக்கு உடம்பில் வலது பாகத்தில் உள்ள மச்சங்கள் பெரும்பாலும் தீய பலன்களைக் குறிக்கும்.

### பாதங்களில்

பொதுவாக பெண்களுக்குப் பாதங்களில் மச்சம் இருத்தல் பெரும்பாலும் நல்ல பலன்களையே குறிக்கும்.

இடது பாதத்தில் இடது புறமாக மச்சம் இருந்தால் நல்ல குணமும் அமைதியும் அழகும் நிரம்பியவர்கள். தெய்வ பக்தியும் பெரியோர்களிடம் பணிவும் கொண்டவர்கள். குடும்பப்பெண்ணுக்குரியசமையல் கலையிலும் ஏனைய செயல்களிலும் திறமை புரிந்தவர்கள். தெய்வ ஸ்தலங்களுக்குச் சென்றும். தீர்த்த யாத்திரைகள் புரிந்தும் வாழ்க்கையைப் புனிதமாகக் கழிப்பவள். நாக ரிக காட்சிகளைக் காண் பதைக் காட்டிலும் புராதன நூல்களை கற்ப திலும் கேட்பதிலும் மிக்க ஆர்வம் காட்டக் கூடியவள்.

இடது பாதத்தில் வலப்புறத்தில் மச்சம் இருந்தால் தனக்கேற்ற கணவனை அடையவளாகவும் நல்ல குழந்தைகளை பெறுபவளாகவும் இருப்பாள். தயை உடையவளாகத் திகழ்வாள். ஏழைகளின் மீது பரிவு காட்டி உள்ளதில் சிறிதளவாளது அளிப்பாள்.

வலது பாதத்தில் இடது புறம் மச்சம் இருந்தால் அதிக பாக்கியவதியாக இல்லாமல் சாதாரணவாழ்க்கையைநடத்துபவள். வாழ்க்கையின் முற்பகுதியில் நன்றாக வாழ்ந்து பிற்பகுதியில் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காவாள்.

வலது பாதத்தில் வலது புறமாக மச்சம் இருந்தால் பெண்களுக்குரிய அச்சம். நாணம் போன்றவை குறைந்து இருப்பாள். பிறர் கூறும் நல்ல வார்த்தைகளைக் கேளாதவர்களாக இருப்பார்கள்.

கணவனுக்கு அனுகூலமான மனைவியாக இராமல் தன் இஷ்டப்படி வெளியே சுற்றியும் பிறர் வீடுகளில் தங்கியும் காலம் கழிப்பாள். பிறர் பழித்துப் பேசுவதைப் பற்றிக் கவலை கொள்ள மாட்டாள். இவளிடம் கற்பு குணத்தை எதிர்பார்க்க முடியாது.

### முழங்கால்களில்

பொதுவாகப் பெண்களுக்கு முழங்கால்களில் மச்சம் இருந்தால் அது நல்ல பலன்களை குறிக்காது. இடது முழங்காலில் எங்காவது மச்சம் இருந்தால் மிக்க அறிவாளியாக இருப்பாள். குடும்பத்திற்கேற்ற குணமு டையவள். ஆனால் கடினமான பேச்சால் பிறரை வெறுக்கச் செய்வாள். அதிக குழந்தைகளைப் பெறுவாள். கணவனைகைப்பாவையைப் போலஆட்டிவைக்கும்சுபாவம் கொண்டவள். இருந்தும் நல்ல அறிவுடையவர்களாக குடும்பத்திற்கேற்ற குணங்கள் உடையவர்களாக ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக ஏழைகளுக்கு இரங்கும் பண்புடையவர்களாக இருப்பார்கள். பிறரால் நன்கு மதிக்கப்படுவார்கள்.

வலது முழங்காலில் மச்சம் இருந்தால் அவர்கள் பிறரை அடக்கியாள வேண்டுமென்று நினைப்பார்கள். மிகவும் முரட்டு குணமுள்ளவள். வீட்டில் தனது பெருந்தனமே இருக்க வேண்டுமென்று விரும்புவாள். பெரியோரிடம் சிறிதும் மதிப்பில்லாமல் தன் இஷ்டப்படி நடப்பவள். தன் தவறைக் தான் உணராமல் பிறர் தவறுகளையே பெரிதாகச் சொல்பவள்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

20 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான 20.9 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

34 வயதான இவர் நேற்று முன்தினம் இலங்கையின் தென்பகுதி அம்பலாங்கொடை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். முதலில் குறித்த இளைஞர் சிறிய தொகை ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தமைக்காகவே கைது செய்யப்பட்டார்.

எனினும் பின்னர் விசாரணைகளின்போது அவர் பெருந்தொகை போதைப்பொருளை வைத்திருந்தமை கண்டறியப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ)

## கட்சியை உடைக்க வேண்டாமென மகிந்தவிடம் நிசாந்த கோரிக்கை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்தக்கூடாது என்று, அவருக்கு முன்பு நெருக்கமாக இருந்த தற்போதைய பிரதியமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைக்கையில் இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு பாரிய சவால்கள் உள்ளன.

இந்தநிலையில், மகிந்த ராஜபக்ஷ கட்சியை பிளவடைய செய்ய முயற்சிக்கக்கூடாது என்றும் முத்துஹெட்டிகம கோரியுள்ளார். (இ)

## ஜனாதிபதியின் செயலாளருக்கு இராஜதந்திர பதவி வழங்கல்

தற்போதைய ஜனாதிபதியின் செயலாளராக பதவி வகிக்கும் பி.பி.அபயகோனுக்கு இராஜதந்திர பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றும் அனுர திஸாநாயக்க, ஜனாதிபதி செயலாளராக பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதி செயலாளராக பதவியேற்கும் முன்னர் அபயகோன், மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் உள்துறை அமைச்சின் செயலாளராக பதவி வகித்தார். என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 25 ஆம் ஆண்டு விழா நாளை

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் 25 ஆம் ஆண்டு விழாவும் ஒன்றியத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் கூட்டுறவு மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட ஒன்றியத் தலைவர் என்.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

தேசிய தேசோதய சபையின் யாழ். மாவட்ட சபையின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாவட்ட நிலையத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# மெய்வல்லுநர் போட்டி நாளை

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எம்.இந்திரபாலா தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் கலந்து கொள்ள வுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி யின்மேலதிக பணிப்பாளர் கே.சாந்தகுமார் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.கந்தநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄

யாழ்.பருத்தித்துறை வட இந்து ஆரம்பப்பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பருத்தித்துறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ். சிறிராமச்சந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள் ளார். மாண வர்களுக்குரிய பரிசில்களை வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி நந்தினிதேவி சிறிராமச்சந்திரன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (இ-5-19)

# மற்றுமொரு அகதிச்சிறுவனின் சடலம் துருக்கி கடற்கரையில் ஒதுங்கியது





துருக்கி கடற்கரை பகுதியில் மீண்டும் அகதிச்சிறுவனின் உடல் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. அதிக எண்ணிக்கையில் அகதி களை ஏற்றிக் கொண்டு வந்த படகு ஒன்று துருக்கி கடல் பகுதியில் கிரீஸ் நாட்டின் லெஸ்பாஸ் தீவு அருகே கடலில் மூழ்கியது. தகவல் அறிந்த, துருக்கி கடற் பாதுகாப்பு படை வீரர்கள் விரைந்து சென்று அவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர், இதில், 37 பேரின் உடல்களை கடற்படை வீரர்கள் மீட்டனர். அவர்களில் குழந்தைகளும் அடங்குவர். இந்நிலையில், கடந்த ஆண்டு உலகையே உலுக்கிய அய்லான் என்ற அகதிச்சிறுவனைப் போன்றே, மீண்டும் ஒரு சிறுவனின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

துருக்கி பொலிஸார், உயிரற்ற அச்சிறுவனின் உடலை தூக்கி கொண்டு போய் கடற்கரையின் ஒரு பகுதியில் வைக்கும் புகைப்படம் வெளியாகியுள்ளது.

இதுவரை துருக்கி நாட்டில் 2.5 மில்லியன் சிரிய அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர், இதில் கடந்த ஆண்டு மட்டும் 1 மில்லியன் பேர் குடியேறியுள்ளனர், இதில் 3,600 பேர் இறந்திருக்கலாம் அல்லது காணாமல்போயிருக்கலாம் என ஐரோப்பிய ஆணையகம் தெரிவித்துள்ளது.

சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் உள் நாட்டு போர் நடைபெறுவதால் அங்கு வாழ வழியற்ற மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைகின்றனர்.

அனுமதி பெறாத படகுகளில் அதிகளவில் பயணம் செய்யும் இவர்கள் நடுக்கடலில் மூழ்கி தங்கள் இன்னுயிரை இழக்கின்றனர். இச் சம்பவங்கள் துருக்கி மற்றும் கிரீஸ் கடல் பகுதியில் அடிக்கடி ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தண்ணீருக்குள் நின்றபடி தன்னைத்தானே சுட்டு விஞ்ஞானி சோதனை



'துப்பாக்கி முனைக்கு எதிரே நெஞ்சு நிமிர்த்தி நிற்கும் நான், சுட்டால் சாக மாட்டேன்', என சவால் விட்டு நிரூபித்து காட்டியுள்ளார் நோர்வே நாட்டு விஞ்ஞானி ஒருவர். நோர்வே நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஆண்ட்ரியாஸ் வாஹ்ல, அறிவியல் பரிசோதனை மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய தகவல்களை வெளியிடும் அரசு தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புக்காக, தண்ணீருக்குள் துப்பாக்கியால் சுடும்போது, குண்டு சீறிப்பாயாது எனும் அறிவியல் தத்துவத்தை நிரூபிக்க விரும்பினார்.

இதற்காக தலை மட்டும் வெளியே தெரியும்படி, கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு தனது மார்புக்கு நேர் எதிரே துப்பாக்கியை ஸ்டாண்டில் பொருத்தி 3 மீற்றர் தொலைவில் நிறுத்தினார். பின்னர் ஒரு கயிற்றின் ஒரு முனையை துப்பாக்கி விசையில் இணைத்து மறுமுனையை தன்னிடம் வைத்துக் கொண்டார். அதன் பிறகு, 'ரெடி, 3,2,1, குண்டு சீறிப்பாய்கிறது', என ரன்னிங் கமெண்ட்ரி கொடுத்தபடி, அவர் கயிறைப் பிடித்து இழுத்தார்.

அடுத்த கணம் துப்பாக்கி முனையில் இருந்து குண்டு சீறிப்பாய்ந்தது. அறிவியல் உண்மைப்படி, துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட குண்டு 1.5 மீற்றர் தாண்டும்போது, வேகம் இழந்து தண்ணீரில் மெதுவாக மூழ்கியது. இயற்பியல் கூற்று உண்மைதான் என நிரூபித்தார் ஆண்ட்ரியாஸ். நிகழ்ச்சிக்குப் பின், நீச்சல் குளத்தின் அடியில் குண்டை கண்டெடுத்த ஆண்ட்ரியாஸ், அதை வெற்றியின் சின்னமாக தனது தலையில் அணிந்தபடி போட்டோவுக்கு போஸ் கொடுத்துள்ளார். (இ)

## பணிமனையில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் பெட்டியில் திடீர் தீ விபத்து

(மும்பை)

மும்பையில் உள்ள மகாலக்ஷ்மி ரயில்வே பணிமனையில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் பெட்டியில் நேற்றுமுன்தினம் மாலை திடீர் தீவிபத்து ஏற்பட்டது. மேற்கு ரயில்வேக்கு சொந்தமான ரயில்வே பணிமனை மகாலக்ஷ்மி ரயில் நிலையம் அருகில் உள்ளது.

நேற்று முன்தினம் இங்கு, ரயில் பெட்டிகளை பராமரிக்கும் பணி நடைபெற்று கொண்டிருந்தது. அப்போது திடீரென ஒரு ரயில் பெட்டி தீப்பற்றி எரியத் தொடங்கியது. சிறிது நேரத்தில் பெட்டி முழுவதும் தீ பரவியது. உடனே ரயில்வே ஊழியர்கள் தீயை அணைக்கும் நடவடிக்கையில் இறங்கினர். தீயணைப்பு படையினரும் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.



இந்த விபத்து குறித்து மேற்கு ரயில்வே செய்தி தொடர்பாளர் கூறுகையில், "விபத்தில் யாரும் காயமடையவில்லை. விபத்து ஏற்பட்ட 5 நிமிடத்திலேயே தீ அணைக்கப்பட்டு விட்டது. ரயில் பெட்டியில் வெல்டிங் வேலை நடந்து கொண்டிருந்த போது தீப்பொறிகள் ஒயில் மீது பட்டு தீப்பற்றியிருக்கலாம் என கருதுகிறோம். விபத்தில் ரயில் பெட்டிக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்பது குறித்து ஆய்வு செய்யப்படும். பணிமனைக்குள் விபத்து நடந்ததால் ரயில் போக்குவரத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை" என்றார். (இ)

## சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக ரஷ்யாவில் மக்கள் வீதிகளில் தஞ்சம்

ரஷ்யாவில் யெலிஜோவா நகருக்கு 95 கி.மீ. வட கிழக்கில், கம்சாத்கா கராய் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இந்திய நேரப்படி காலை 8.55 மணிக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 புள்ளிகளாக பதிவானதாக அமெரிக்க புவியியல் மையம் கூறி உள்ளது.


ஆனால் ரஷ்ய அறிவியல் அகடமி தனது இணைய தளத்தில், இது 7.3 புள்ளிகளாக பதிவானதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த நில நடுக்கம் 160 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. அதனால்தான் பெருமளவு பாதிப்பு இல்லை.

இருந்தபோதும் நில நடுக்கத்தை உணர்ந்த மக்கள் வீடுகளையும், கட்டடங்களையும் விட்டு ஓட்டம் பிடித்தனர். அவர்கள் வீதிகளிலும், திறந்தவெளி மைதானங்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

இந்த நில நடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. சுனாமி அபாயமும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 28 விரல்களைக் கொண்ட மனிதர்



(சென்னை)

இந்தியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் 28 விரல்களுடன் காணப்படுகிறார். குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தேவேந்திர சுதார் எனும் இவர் உலகிலேயே அதிக விரல்களைக் கொண்ட நபர் என கடந்த டிசெம்பர் மாதம் கின்னஸ் சாதனை நூலில் பதிவு செய்யப்பட்டவர்.

43 வயதான தேவேந்திர சுதாரின் ஒவ்வொரு கைகளிலும் தலா 7 விரல்கள் காணப்படுகின்றன.

அதேபோன்று ஒவ்வொரு கால்களிலும் தலா 7 விரல்கள் காணப்படுகின்றன.

தனது கை, கால்களிலுள்ள மேலதிக விரல்களை இறைவன் தனக்கு அளித்த கொடை என அவர் கருதுகிறார்.

தச்சுத்தொழிலாளியாக தேவேந்திர சுதார் பணியாற்றுகிறார்.

இந் நிலையில் தான் பணியாற்றும் போது மேற்படி மேலதிக விரல்களை தற்செயலான தான் வெட்டிவிடக்கூடும் என அஞ்சுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

28 விரல்களுடன் காணப்படும் தேவேந்திர சுதாரை பார்வையிடுவதற்கு வெளியூர்களில் இருந்தும் மக்கள் வருகின்றனர். (இ

# மரமாக மாறும் மனிதன்



வங்கதேசத்தின் குல்னா பகுதியில் இளைஞர் ஒருவர் அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டு மரமாக உருமாறி வருவது குடும்பத்தினரிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வங்கதேசத்தின் குல்னா பகுதியில் வசித்து வரும் 25 வயதான அபுல் பஜந்தர் என்பவர் அரிய வகை தோல் வியாதியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்.

அவரது கை விரல்கள் மரத்தில் இருந்து பட்டைகள் உருவாவது போன்று தடிமனாக நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணம் உள்ளன.

இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அவரை டாக்கா மருத்துவ கல்லூரி மற்றும் வைத்திய சாலையில் சிறப்பு சிகிச்சைக்கு அனுமதித்துள்ளனர்.

இதனிடையே இந்தோனேசியாவில் இதேபோன்று அரிய வகை தோல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த மனிதர் ஒருவர் அண்மையில் இறந்துள்ளார்.

ஆனால் அவரது உயிரிழப்புக்கு காரணம் அவருக்கு இருந்த நோய் அல்ல என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு இவர் குறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்று சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை உருவாக்கியிருந்தது.

வைத்தியசாலையில் இருந்து திரும்பிய அவர் தனது உடம்பில் இருந்து 6 கிலோ மருக்களை அகற்றியுள்ளதாக அந்த நிகழ்ச்சியில் அவர் தெரிவித்திருந்தார். (இ)

### கொலம்பியாவில் மட்டும்

# 2 ஆயிரம் கர்ப்பிணிகள் ஷிகா வைரஸால் பாதிப்பு

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய 'ஜிகா' வைரஸின் தாக்குதலுக்கு தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் 2 ஆயிரம் கர்ப்பிணிகள் இலக்காயிருப்பதாக அந்நாட்டு சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னமெரிக்கா. மத்திய அமெரிக்கா. கரீபியன் நாடுகள் உட்பட இதுவரை 25இற்கும் மேற்பட்ட நாடுகளில் ஷிகா வைரஸ் பாதிப்பு உள்ளது. இந்த நாடுகளில் 40 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் பிரேசிலில் மட்டும் 15 இலட்சம் பேர் உள்ளனர்.

இந்நிலையில், கொலம்பியாவில் 20ஆயிரத்து 297 பேருக்கு ஷிகா வைரஸ் பாதிப்பு இருப்பதாகவும் இதில் 2 ஆயிரத்தி 116 பேர் கர்ப்பிணிகள் என்றும் அந்நாட்டு சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

ஷிகா வைரஸ் பாதித்த கர்ப்பிணிகளுக்கு சிறிய தலை, மூளை பாதிப்பு, பார்வைக் குறைபாடு. நரம்பு மண்டல பாதிப்புகளுடன் குழந்தைகள் பிறக்கின்றன. இதனால் இப்போதைக்கு பெண்கள் கருத்தரிக்க வேண்டாம் என்று பிரேசில் உள்ளிட்ட நாடுகள் அறிவுறுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# மூழ்கும் நிலையில் 3 நாட்களாக கடலில் தத்தளிக்கும் கப்பல்




பிரெஞ்சு கடற்கரையில் சரக்குக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கும் நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.

Panama நாட்டிலிருந்து 3,600 தொன் மரக்கட்டைகள் மற்றும் மணலினை ஏற்றிக்கொண்டு சென்ற Smit Salvage நிறுவனத்திற்கு சொந்தமான சரக்குக் கப்பல் ஒன்று. பிரான்ஸின் மேற்கு கடற்கரையில் நகர முடியாமல் நின்றுவிட்டது.

இதனைத் தொடர்ந்து அதில் பயணம் செய்த 22 சிப்பந்திகள் ஹெலிகொப்டரின் உதவியுடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

ஆனால், 3 நாட்களாகியும் சரக்குக்கப்பலினை கரைக்கு கொண்டு வரமுடியவில்லை. ஏனெனில் கடலின் கரையில் இருந்து சுமார் 270 கிலோ மீற்றர் தொலைவில் தத்தளித்த வண்ணம் அக்கப்பல் உள்ளது.

இந்த கப்பலின் உள்ளே தண்ணீர் செல்ல செல்ல இது விரைவில் மூழ்கிவிடும் என சரக்குக்கப்பலின் தளபதி கூறியுள்ளார். இருப்பினும் இந்த கப்பல் நிற்கும் இடம் கரையில் இருந்து தூரம் என்பதால் இதனை கரைக்குக்கொண்டு வருவது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும் எனக்கூறியுள்ளார்.

இந்நிலையில், சரக்குக் கப்பல் கடந்த மூன்று நாட்களாக தத்தளித்து வருவதால், பிரெஞ்சு கடலில் பயணம் செய்யும் பிற கப்பல்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், விரைவில் கப்பலை மீட்கவேண்டும் என பிரெஞ்சு கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# ஜேர்மன் பிரதமரின் செல்வாக்கு சரிந்தது

ஜேர்மனியின் பலம் வாய்ந்த பிரதமராக ஏஞ்சலா மெர்கல் இருந்து வருகிறார். இவர் உள்நாட்டு போர் நடைபெறும் சிரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அகதிகளாக வருபவர்களை வரவேற்று அடைக்கலம் அளித்து வருகிறார்.

கடந்த ஆண்டு மட்டும் இது போன்று 10 இலட்சத்து 10 ஆயிரம் பேர் அகதிகளாக ஜேர்மனியில் தங்கியுள்ளனர். இந்த நடவடிக்கையால் ஏஞ்சலா மெர்கலின் செல்வாக்கு பொதுமக்களுடையே சரிந்துள்ளது.

அண்மையில் ஒரு செய்தி நிறுவனம் கருத்துக்கணிப்பு நடத்தியது. அதில் இந்த விபரம் தெரிய வந்துள்ளது. அகதிகள் தங்க இடமளிப்பதில் ஏஞ்சலா மெர்கல் மேற்கொண்டுள்ள கொள்கை திட்டத்தை பெரும்பாலான ஜேர்மனி மக்கள் எதிர்க்கின்றனர். 45 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் இவர் பதவி விலக வலியுறுத்தியுள்ளனர். (இ)

# சுரங்க விபத்தில் சிக்கிய 4பேர் 36 நாட்களுக்கு பின்னர் மீட்பு

(பீஜிங்)

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள ஷாங்டாங் மாகாணத்தில். லின்யி நகரத்தில் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி ஜிப்சம் சுரங்கம் ஒன்று திடீரென சரிந்து விழுந்து விபத்து நேரிட்டது.

இதில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் 29 பேர் சிக்கிக் கொண்டனர். உடனடியாக மீட்புப் பணி முடுக்கி விடப்பட்டது.

11 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஒருவர் உயிரிழந்தார். மற்றவர்களைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் விபத்து நடந்து 36 நாட்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் 4 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

அவர்களுக்கு பெரிய அளவில் காயங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

200 மீற்றர் ஆழத்தில் சிக்கிக்கொண்ட அவர்களுடன் மீட்புப் படையினருக்கு 8 ஆம் திகதி தொடர்பு கிடைத்தது. அதைத் தொடர்ந்து சுரங்கப்பாதை அமைத்து அதன் வழியாக அவர்களுக்கு உணவு. உடைகள். விளக்கு உள்ளிட்டவை அனுப்பப்பட்டு வந்தன.

இருப்பினும் மோசமான வானிலை காரணமாக அவர்களை மீட்பதில் தாமதம் ஏற்பட்டது. இப்போது மீட்கப்பட்டு விட்டனர். இன்னும் 13 பேர் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை.

இந்த சுரங்கத்தில் விபத்து நேரிட்ட சில நாட்களில் அதன் அதிபர் தற்கொலை செய்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# சவுதி மசூதியில் துப்பாக்கிச்சூடு 4 பேர் பலி

சவுதி அரேபியாவின் மெஹசின் பகுதியில் இமாம் ரெசா மசூதி உள்ளது. இங்கு நேற்று முன்தினம் மதியம் தொழுகை நடந்து கொண்டிருந்தது.

அப்போது மசூதியில் துப்பாக்கி சூடு நடந்தது. இதில் 4 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இடுப்பில் வெடிகுண்டு அடங்கிய பெல்ட் அணிந்த இருவரை தொழுகையில் இருந்தவர்கள் தடுத்து நிறுத்தியதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவியதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்தத் தாக்கு தலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.(இ)

# கார்க்குண்டு வெடிப்பு 2பேர் உடல் சிதறி பலி



ஏமன் நாட்டில் ஏடன் நகரில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடி அருகே நேற்று முன்தினம் ஒரு கார் அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட பொலிஸார். தடுத்து நிறுத்த முற்பட்டனர்.

ஆனால் அந்த கார் நிற்காமல், வேகமாக வந்து அந்த சோதனைச் சாவடி மீது மோதி வெடித்தது. தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர் வெடிகுண்டு நிரப்பி வந்து, அந்த காரை வெடிக்க செய்ததாக தகவல்கள் கூறுகின்றன.

கார்க்குண்டு வெடிப்பில் 2 பேர் சிக்கி உடல் சிதறி பலியாகினர். 5 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பலியான 2 பேரில், கார்க்குண்டு வெடிப்பை அரங்கேற்றிய தீவிரவாதியும் அடங்குவானா என்பது குறித்து தகவல் இல்லை. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத. அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (இ)

# தீவிரவாதிகளின் விபரங்களை வெளியிட்டுள்ளது ஐரோப்பா

சர்வதேச அளவில் மிக முக்கியமாகத் தேடப்படும் தீவிரவாதிகளின் பெயர்ப் பட்டியலை ஐரோப்பா வெளியிட்டுள்ளது.

பல்வேறு குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடைய 16 நபர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் பொலிஸாரால் தேடப்பட்டுவரும் தீவிர வாதிகளின் பட்டியலை www.eumostwanted.com என்ற புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளத்தில் 17 மொழிகளில் வெளியிட்டுள்ளது.

ஐரோப்பியன் பொலிஸ்.பொது மக்கள் யார் வேண்டுமானாலும் இந்த இணையத்தளத்தில் உள்ளவர்களைப் பற்றி துப்பு கொடுக்கலாம்.

இதற்கு சன்மானமும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பதிலளிக்க முடியாமல் அதிகாரி திணறல்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வனவளத் திணைக்கள அதிகாரி எந்தவித ஆயத்தமும் இன்றி சமூகமளித் தமையால் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூற முடியாமல் திணறினார். இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்தது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொது செயலாளர் மாவை சேனாதி ராஜா பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு பிரிவாக அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் அந்தந்த அதிகாரிகளினால் அறிக்கையாக முன்வைக்கப்பட்டன. இந்நிலையில் வனவள திணைக்களத்தின் திட்டங்கள் தொடர்பாக விளக்கம் அளிப்பதற்கு குறித்த திணைக்கள அதிகாரியினை வடக்கு மாகாண முதலமைச்சர் அழைத்த போது சபையில் அதிகாரி பிரசன்னமாகவில்லை.

இதனால் அதிருப்தி அடைந்த முதலமைச்சர் இதனை ஏற்க முடியாது எனவும் வனவளத்திணைக்களத் திடம் பல விடயங்கள் கேள்விகளாக உள்ளன. இன்று சமூகமளிக்காமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து அடுத்த பிரிவு ஆரம்பமானது.

இந்நிலையில் திடீரென சபையில் தோன்றிய அதிகாரி தன்னை வனவள அதிகாரி என அடையாளப்படுத்திக் கொண்டார். தொடர்ந்து முதலமைச்சர் அதிகாரியிடம் உங்கள் திணைக்கள செயற்திட்டம் தொடர்பில் தெரியப்படுத்துங்கள் என வினாவினார் இதற்கு பதிலளிக்க முடியாமல் அதிகாரி திணறினார்.

இந்த வருடம் 10 பாடசாலைகளை தெரிவு செய்துள்ளோம் மர நடுகைக்காக என அதிகாரி தட்டுத்தடுமாறி தெரிவித்தார். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் 10 பாடசாலைகளை காடாக்கப்போறீங்களா? என்று தெரிவித்ததைத் தொடர்ந்து சபையில் தொடர் சிரிப்பொலி நிலவியது. இதனைத் தொடர்ந்து அடுத்த கூட்டத்தில் செயற்திட்டம் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார். (இ-4)



யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கனடா கிளையினரால் ஐந்து பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 270 | 250 | 300 | 400 |
| தக்காளி | 60 | 60 | 50 | 60 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 90 | 70 | 120 | 80 |
| கரட் | 180 | 200 | 170 | 200 | 200 | 180 |
| பூசணி | 60 | 80 | 45 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 60 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 50 | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 90 | 100 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 100 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 70 | 80 | 70 |
| பயற்றங்காய் | 150 | 100 | 100 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 | 140 | 80 |
| பீற்றூட் | 120 | 100 | 80 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 200 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 900 | 800 | – | 700 | 800 | - |
| போஞ்சி | 80 | 100 | 70 | 100 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | – | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 30 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 40 | 120 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 80 | 100 | 120 | 100 |
| முள்ளங்கி | 20 | 30 | 40 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | – | 100 | – |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணம் சென்ற ரெயிலை நிறுத்தி 100 தமிழர்கள் சுட்டுக்கொலை 93

### கடையடைப்பு

சமரசப் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணம் பகுதியில் கடையடைப்பு வேலை நிறுத்தமும் நடந்தன.

பெரும்பாலான பஸ்கள் ஓடவில்லை. மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லவில்லை.

சமரசப் பேச்சில் பங்கு கொள்ளாத போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சமரசப் பேச்சைப் புறக்கணிக்க வேண்டும் என்ற துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

### சமரசத் திட்டம்

மூன்று நாள் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் ஒரு சமரசத் திட்டம், இலங்கை அரசாங்கத்தின் சார்பில தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சமரசத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:-

### மாவட்ட கவுன்சில்கள்

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் 4 மாவட்ட கவுன்சில்கள் அமைக்கப்படும்.

இந்த மாவட்ட கவுன்சில்களுக்குக் கல்வி, சிவில் நிர்வாகம், போக்குவரத்து ஆகிய துறைகளில் அதிக அதிகாரங்கள் (இந்தியாவில் மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள புதுச்சேரி போன்ற பகுதிகளுக்கு அளிக்கப்பட்டு இருப்பது போல) வழங்கப்படும்.

### தமிழ் முதல்மந்திரி

இந்த 4 மாவட்ட கவுன்சில்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே மாநிலமாகச் செயற்படும்.

இந்தத் தமிழ் மாநிலத்துக்குத் தனி முதல்மந்திரி இருப்பார். தனி சட்ட சபையும் இருக்கும். (இந்தியாவில் மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள புதுச்சேரி மாநிலம் போல இவை இருக்கும்)

### திருகோணமலை


இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை நகரமும் இந்தத் தமிழ் மாநிலத்தில் சேர்க்கப் பட மாட்டாது என்று இலங்கை அரசு தெரிவித்தது.

(சமீபத்தில் அம்பாறையில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை சம்பவங்கள் நடந்தன)

### அவகாசம் தேவை

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழர் கட்சி பிரதிநிதிகளும், ஈழம் தேசிய விடுதலை முன்னணியும் இந்தச் சமரசத் திட்டம் பற்றி பரிசீலனை செய்ய அவகாசம் தேவை என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே இந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இலங்கை அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தது.




இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் அறிவிக்கப்பட்டிருந்த ஊரடங்கு சட்டம் ரத்து செய்யப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த 500 தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

### ஏற்க மறுப்பு

இலங்கை அரசு கொடுத்த சமரசத் திட்டத்தை ஆராய்ந்த போராளிகள், அதை ஏற்பது இல்லை என்று முடிவு செய்தனர்.

1984 ஆம் ஆண்டு ஜெயவர்த்தன இதே திட்டத்தை அறிவித்து இருந்தார். இப்போது புதிதாக எதுவும் இல்லை. இந்தத் திட்டத்தை அப்போதே நிராகரித்து விட்டோம் என்று விடுதலைப் புலிகள் கூறினார்கள்.

. இது இலங்கை தமிழர்களின் அடிப்படை பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்றும் அவர்கள் அறிவித்தனர்.

### நிராகரித்தது ஏன்?

இலங்கையின் சமரசத் திட்டத்தைத் தமிழர் பிரதிநிதிகள் ஏன் நிராகரித்து விட்டனர் என்பது பற்றித் தமிழர் கட்சி பிரமுகர் ஒருவர் கூறியதாவது:-

இலங்கையின் சமரசத் திட்டம் வெறும் கண்துடைப்பு.

இந்தியாவில் உள்ள மாநிலத்துக்கு உரிய அந்தஸ்தைத் தருவதற்கு கூட இலங்கை அரசு முன்வரவில்லை. இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களுக்கு உரிய அந்தஸ்துதான் தரப்படும் என்கிறார்கள்.

தமிழ்ப் பகுதியின் முதல் மந்திரியை ஜனாதிபதிதான் நியமிப்பார் என்றும் கூறிகிறார்கள். இதைத் தமிழர்கள் ஏப்படி ஏற்க முடியும்?

இவ்வாறு அந்தப் பிரமுகர் கூறினார்.

4 நாட்கள் பேச்சு நடத்தியும் உடன்பாடு ஏற்படாததால் மீண்டும் ஒகஸ்ட் 12 ஆம் திகதி திம்புவில் சந்தித்துப் பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, பூட்டான் தலைநகரான திம்புவில் நடைபெற்ற இரண்டாம் கட்ட சமரசப் பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் சமரசப் பேச்சுவார்த்தைக்கு பிரதமர் ராஜீவ் காந்தி முயற்சி எடுத்துக் கொண்டார்.

அவர் முயற்சியின் பேரில் இலங்கை அரசுப் பிரதிநிதிகளும் விடுதலைப்புலிகள் உட்பட போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளும் பூட்டான் தலைநகரான திம்புவில் 1985 ஜூலை மாதத்தில் சந்தித்துப் பேசினார்கள்.



(தொடரும்)

# சு.க. பிரதானிகளுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசியின் உள்ளூராட்சி மன்ற பிரதானிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பிரதேச சபைத் தலைவர், மாநகரசபைத் தலைவர், நகரசபைத் தலைவர் உள்ளிட்ட முக்கிய உள்ளூராட்சி மன்ற பொறுப்புக்களை வகித்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பத்துப்பேர் இவ்வாறு தண்டிக்கப்படவுள்ளனர்.

பகிரங்கமாக கட்சியின் தலைமையை இவர்கள் விமர்சனம் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இந்த பத்துப் பேருக்கும் கட்சித் தலைமையகம்கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாககட்சியின்பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சத்தம் போட்டு எச்சரிக்கை விடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அச்சுறுத்த முடியும் என எவரேனும் நினைத்தால் அது வெறும் கனவு என்பதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கட்சி என்றால் அதற்கு ஒழுக்கம் மிகவும் அவசியமானது. ஒழுக்கமின்றி கட்சியோ நாடோ முன்னோக்கி நகர முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க எவருக்கும் இடமளிக்கப்படாது. எனவே எதிர்வரும் நாட்களில் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறுவோர் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் என துமிந்த திஸாநாயக்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உள்ளூராட்சி மன்றங்களில் முக்கிய பதவிகளை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்சித் தலைமையை பகிரங்கமாக விமர்சனம் செய்ததுடன், மகிந்தவுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்திருந்தனர்.

இவ்வாறு அறிவித்த பத்து பேருக்கு எதிராகவே கட்சி நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(இ)

# போர்க்களத்தில் சயிட் அல்ஹுசைன்

(கொழும்பு)

**இம்மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், வடக்கு நோக்கி விஜயம் செய்யவுள்ளார். இதன்போது அவர் வடக்கில் இறுதிப் போர் இடம்பெற்ற இடங்களை பார்வையிட்டு, போரினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களையும் சந்திக்கவுள்ளார்.**



இந்த நிலையில் சயிட் அல் ஹுசைன் எதிர்வரும் 9ஆம் திகதி வரை இலங்கையில் இருப்பார் எனவும் அன்றையதினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின்போது ஐக்கிய நாடுகள் பரிந்துரை தொடர்பிலான நடைமுறைப்படுத்தல்களை அரசாங்கம் அவருக்கு தெளிவுபடுத்தவுளளது என சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவை கலைப்பது குறித்து அரசாங்கம் கவனம்

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினை கலைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாரிய நிதி மோசடிகள் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு பூரண அதிகாரங்களை வழங்கி, பொலிஸ் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வந்த சகல விசாரணைகளும் பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் அதிகாரங்களை ஒப்படைக்கும் உத்தேச சட்ட வரைவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அண்மையில் பிரதி அமைச்சர் அனுராத ஜயரட்னவின் வீட்டில் சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதி அமைச்சர்கள், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கினால் அதனை எதிர்ப்பது என தீர்மானித்துள்ளனர்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் அதிகாரத்தை கூட்டும் எந்தவொரு சட்ட மூலமும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை எதிர்ப்பது என சுதந்திரக் கட்சி பிரதி அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்த உள்ளதாகவும் பிரதி அமைச்சர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## இன்று ஒரு தகவல்

# பிளஸ் & மைனஸ்

நம்மோடு ஒட்டிக் கொண்டுவிட்ட தவறான பழக்கங்களை நம்மால் விட முடியாது என்று நாம் எண்ணுகிறோம். அதனாலேயே அப் பழக்கங்களை நம்மால் கைகழுவ முடியாமல் போகிறது. நம்மால் முடியும் என்று நாம் மனப்பூர்வ மாக நம்பும் போது இது நிச்சயம் கைகூடுகிறது.

எண்ணமே வாழ்க!

எண்ணங்களே செயல்களாகின்றன.

குறையில்லா மனிதர்கள் எவருமிலர். மக்களால் மகாத்மா என்று போற்றப்பட்ட காந்திஜி போன்றவர்களும்கூடத் தவறான பழக்கங் களை உடையவர்களாகத்தான் இருந்திருக்கி றார்கள்.

ஆனால்,அவர்கள் மனமாற்றம் அடைவ தற்கு ஏதோ சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அதனால் அவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டார்கள். மேலும்,நம்மை நாம் மாற்றிக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படை உணர் வுகள் அவர்களது மனதை அரித்தெடுத்தி ருக்க வேண்டும். நம்மிடமுள்ள குறைகள் நீங்கி னால் நாம் விரைவில் முன்னுக்கு வந்து விட முடியும்.

மனவுறுதி இல்லாதவர்கள்தாம் தீய பழக்கங்களுக்கு அடிமையாகுகிறார்கள். தீய பழக்கங்களில் உள்ள கெடுதல்களையும் நற் பழக்கங்களினால் அடையக்கூடிய நன்மைகளை யும் உணரத்தொடங்கினால் நிச்சயம் மன உறுதி ஏற்படும்.

திருத்த வேண்டும், தீய பழக்கங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று எல்லோரும் விரும்பத்தான் செய்கின்றனர். ஆனால்,தீவிரமான எண்ணம் இல்லாததனாலும்,அதை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பதில் உள்ள சிக்கல்கள் மலைப்பை ஏற்படுத்துவதா லும் எந்தவிதமான முயற்சிகளையும் மேற் கொள்ளாமல், மீதமிருக்கும் காலத்தையும் இப்படியே கழித்து விடுவோம் என்று சமா தானம் செய்து கொள்கிறார்கள்.

நம்மிடம் உள்ள குறைபாடுகள் என்னென்ன என்பதை நாம் உணர்ந்து, அவற்றை நாம் முதலில் பட்டியலிடவேண்டும். நம்மையும் அறியாமல் நம்மிடம் குடிகொண்டுள்ள குறைக ளைப் பட்டியலிடவேண்டும். நம்மிடம் நெருங்கிப் பழகுபவர்களிடம், என்னிடம் நீங்கள் காணும் குறை என்ன ? என்று நேரிடையாகவே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பெருங்கடனாளியாக உள்ளவன் பணக்காரனாக விரும்பினால் அவனது முதல் செயல் என்னவாக இருக்கும்? கடனை அடைப்பதற் கான முயற்சிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும். பிறகுதான் தன் நிலையை அவன் உயர்த்திக் கொள்ள முடியும்.

அதைப் போலவே, புதுவாழ்வு வாழவிரும்புகிறவர்கள் முதலில் தங்களது குறைகளை உணர்ந்து அவற்றைப் போக்கிக் கொள்ள வேண்டும். இந்த உணர்வை அடிமனத்திலேயே ஏற்படுத்திக் கொண்டுவிட வேண்டும். பிறகு, மெல்ல நற்பழக்க வழக்கங்களை மேற்கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.

படைபடையாக உடம்பில் அழுக்கை வைத் துக்கொண்டு,மேலும் அதைப் பவுடர் பூசி மறைப் பதில் பயனென்ன இருக்க முடியும்?

**லேனா தமிழ்வாணன்**

# இஸ்ரேலிய நாட்டின் முகவர்களும் சிறுநீரக வர்த்தகத்துடன் தொடர்பு

இஸ்ரேலிய நாட்டின் முகவர்களும் இலங்கை மருத்துவர்களுடன் இணைந்து சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் வெளிச்சமாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டு இஸ்ரேலிய நீதிமன்ற அறிக்கையில் அந்நாட்டு முகவர்களுக்கும் இலங்கை மருத்துவர்களுக்கும் இடையில் சிறுநீரக வர்த்தகம் தொடர்பிலான தொடர்பு பேணப்பட்டமை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த 65 வயதான ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான எட்வட் சான்டலர் என்ற நபர் சட்ட விரோத சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்காவின் டெக்ஸாசைச் சேர்ந்த 83 வயதான மோட்டார் வாகன விற்பனைப் பிரதிநிதி ஒருவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய ஒரு இலட்சத்து 75 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும், இஸ்ரேலைச் சேர்ந்த டொரின் என்ற பெண்ணுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய 2 இலட்சம் அமெரிக்க டொலர்களையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த இரண்டு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளையும் இலங்கையில் மேற்கொள்வதாக குறித்த இஸ்ரேலிய முகவர் இருவருக்கும் உறுதியளித்திருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதற்காக இலங்கை வருவதற்கு முன்னதாக குறித்த முன்னாள் இராணுவ அதிகாரியை இஸ்ரேலிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபருக்கு அந்நாட்டு நீதிமன்றம் தண்டனையும் விதித்துள்ளது.

இலங்கையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை நடத்துவதற்காக இந்தியாவைத் தவிர, இஸ்ரேல் மற்றும் உக்ரேய்ன் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் வந்துள்ளனர்.

இஸ்ரேலியர்களுக்கு சிறுநீரகங்களை தானமாக அதிகளவில் பாலஸ்தீனர்கள் வழங்கியுள்ளதாக இன்டர்போல் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.(இ)




# இரு துருவங்கள்!



வெகு காலத்துக்கு முன், ஒரு சிறிய நாட்டை ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். அவர் பெயர் அச்சலேந்திரா.

அச்சலேந்திரா ஏழைகளிடத்தில் இரக்க குணம் கொண்டவர். தன்னால் ஆன எல்லா உதவிகளை ஏழைகளுக்கு செய்து வந்தார். அதே போல் பறரை ஏமாற்றி பொருளை அபகரிப்பவர்க்ளையும் வெறுத்தார்.

அச்சலேந்திரா அடிக்கடி மாறுவேடத்தில் தன் நாட்டைச் சுற்றிப பார்க்க புறப்பட்டு விடுவார். அவர் அப்படி செல்லும் போது தன்னுடன் யாரையும் அழைத்துச் செல்ல மாட்டார். தனியாக செல்லும் அரசர், தன் நாட்டில் வறுமையில் வாடும் யாரையாவது கண்டால், அவர்களை மறுநாள் தன் அரச வைக்கு அழைத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவர்கள் சுகமாக வாழ வழி செய்து வந்தார்.

ஒருநாள் அச்சலேந்திரா மாறுவேடத்தில் தான் நாட்டை சுற்றிப பார்க்க புறப்பட்டார். அவருக்கு பல விதமான அனுபவங்கள் கிடைத்தன.

ஒரு ஊரில் இரண்டு பேர் வீதியில் கண்டெடுத்த பணமுடிப்புக்காக சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். மாறுவேடத்தில் அங்கு வந்த அரசனைப் பார்த்த இரண்டு பேரும் வந்தவர் அரசன் என்று தெரியாமல் அவரிடம் நியாயம் கேட்டனர்.

பணமுடிப்புக்கு உண்மையான சொந்தக்காரன் ஒரு விவசாயி. அவன் தன் மகளின் திருமணத்திற்காக தன் வயலில் விளைந்த நெல்லை சந்தையில் விற்றுவிட்டு கிடைத்த பணத்தை, ஒரு சிறிய துணிப்பையில் போட்டு அதை ஒரு பண முடிப்பு போல் எடுத்து வரும் போது, தவறுதலாக வீதியில் தவற விட்டுவிட்டான். சிறிது தூரம் சென்ற விவசாயி பண முடிப்பு காணமல் போனதை அறிந்து, திரும்பி வந்து பார்த்த போது மிக அருகில் ஒருவன் பணமுடிப்பை கையில் வைத்திருப்பதைப் பார்த்தான். உடனே விவசாயி பணமுடிப்பு என்னுடையது என்று, பண முடிப்பை வைத திருப்பவனிடம் கூறினான்.

பணமுடிப்பை வைத்திருந்தவன் பண முடிப்பு தன்னுடையதுதான் என்று சற்று உரத்த குரலில் கூறினான்.

பணமுடிப்புக்கு உண்மையான சொந்தக்காரனான விவசாயிக்கு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான். அந்த நேரத்தில் தான் மாறு வேடத்தில் இருந்த அரசர் அச்சலேந்திரா அங்கு வந்தார்.

"விவசாயி மாறுவேடத்தில் இருந்த அரசரிடம், ஐயா! உங்களைப் பார்த்தால் ஒரு பெரிய இடத்து மனிதர் போல் தோன்றுகிறது. நீங்கள் தான் என்னுடைய பணமுடிப்பை வாங்கித் தர வேண்டும்," என்று கூறினான.

(தொடரும்)

## கல்பனா சாவ்லா



விண்வெளிக்கு பயணம் செய்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பானா சாவ்லா,

இவர், இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் 1961 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆம் திகதி பனாரஸ்லால் சாவ்லாவுக்கும், சன்யோகிதா தேவிக்கும் மகளாக, இவர் ஒரு பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு சுனிதா மற்றும் தீபா என்ற இரண்டு சகோதரிகளும், சஞ்சய் என்ற சகோதரனும் இருந்தனர். கல்பானா சாவ்லா, தனது ஆரம்ப கல்வியை தனது ஊரில் உள்ள அரசு பள்ளியில் தொடங்கினார். 1982 இல் "பஞ்சாப் பொறியியல் கல்லூரியில்" விமான ஊர்தியியல் துறையில் கல்விப் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார்.

இவர், 1983 இல் ஜீன் பி எர ரே ஹாரிசன் என்ற விமானப் பயிற்சி ஆசிரியரை மணம் முடித்தார். பின்னர், 1984 இல் அமெரிக்காவில் உள்ள "டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில்" விண்வெளிப் பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1986ல் பௌல்தேரில் உள்ள "கோலோரடோ பல்கலைக்கழகத்தில்" இரண்டாவது முதுகலைப் பட்டமும், பிறகு 1988ல் வெண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

1988 ஆம் ஆண்டு, நாசா அமெஸ் ஆராய்ச்சி கூடத்தில் "ஒசெர்செட் மேதொட்ஸ் இன்க்யின்" துணைத் தலைவராக பணியாற்றிய அவர் விஃஎஸ்.டி.ஓ.எல் (V/STOL) இல் சி.எஃடி (CFD) ஆராய்ச்சி செய்தார். விமானம் மற்றும் கிளைடர்களை ஓட்டக் கற்றுக்கொடுக்க தகுதிச் சான்றிதழ் பெற்றதோடு மட்டுமல்லாமல், ஓட்டவும் அனுமதி பெற்றிருந்தார்.

1995 இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் "கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ்-87 (STS-87) இல்" பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். 1997 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்த பயணத்தில், சுமார் 372 மணி நேரம் விண்வெளியிலிருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாக பூமி திரும்பினார். இதன்மூலம் விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையும் பெற்றார்.

மீண்டும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தன்னுடைய இரண்டாவது பயணத்திற்குத் தயாரானார். ஈற்றில், 2003ஆம் ஆண்டு ஜனவரி 16-ந் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ்-107 (STS-107) அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா, உள்ளிட்ட 7 பேர் அதில் பயணித்தனர். 16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பிய அவர்கள் சென்ற அந்த விண்கலம், அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லா உள்பட ஏழு விலைமதிப்பற்ற விண்வெளி வீரர்களும் அதில் பலியாகினர்.

ஒரு சாதாரண பள்ளியில் படித்து, பலர் வியக்கும்படி தன் கனவுகளை நனவாக்கி வாழ்ந்து காட்டியவர் கல்பனா சாவ்லா. பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர், இந்தியாவிற்கு உலகப்புகழ் சேர்த்தவர் என்றால் அது மிகையாகாது. 'கனவுகளைக் கண்டு அந்த கனவுகளை நனவாக்குவதற்கு விடாமுயற்சியோடும், முழுமனதோடும் செறபட்டால் வெற்றி நிச்சயம்' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தி சென்ற வீரப்பெண் அவர்.

## 02.2016 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1662 - ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.
- 1788 - ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப் படக்குக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1793 - ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.
- 1832 - ஆசியாவின் முதலாவது அஞ்சல் (தபால்) வண்டி சேவை கண்டியில் ஆரம்பமாகியது.
- 1864 - டென்மார்க்-புரூசியா போர் ஆரம்பமானது.
- 1880 - யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்குமிடையில் முதலாவது தபால் வண்டி சேவையை ஆரம்பித்தது.
- 1884 - ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற்பதிப்பு வெளியானது.
- 1893 - தொமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப்பிடிப்பகத்தை நியூ ஜேர்சியில் கட்டி முடித்தார்.
- 1913 - உலகின் மிகப்பெரிய தொடருந்து நிலையம் Grand Central Terminal நியூயோர்க் நகரில் திறக்கப்பட்டது.
- 1924 - சோவியத் ஒன்றியத்தை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.
- 1946 - நோர்வேயின் ட்றிகிவா லீ ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1958 - எகிப்து மற்றும் சிரியா ஆகியன இணைந்து 1961 வரையில் ஐக்கிய அரபுக் குடியரசு என ஒரு நாடாக இயங்கின.
- 1979 - 15 ஆண்டுகள் நாடு கடந்த நிலையில் வாழ்ந்த ஈரானின் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி டெஹ்ரான் திரும்பினார்.
- 2005 - நேபாள மன்னர் ஞானேந்திரா நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

### பிறப்புகள்

- 1905 - எமிலியோ செக்ரே, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1989)
- 1931 - போரிஸ் யெல்ட்சின், ரஷ்ய முன்னாள் அதிபர் (இ. 2007)

### இறப்புகள்

- 1958 - கிளிண்டன் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர (பி. 1888)
- 1964 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத் துறையின் முன்னோடி (பி. 1873)
- 1976 - வேர்னர் ஐசன்பேர்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர (பி. 1901)
- 1976 - ஜோர்ஜ் விப்பிள், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர (பி. 1878)
- 1986 - அல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுததாளர் (பி. 1902)
- 1999 - வானம்பாடி யோகராஜ், வில்லிசை கலைஞர், நாடக ஆசிரியர், நடிகர், மேடைப்பாடகர் (பி.1948)
- **2003 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை** (பி. 1961)

# யாழில் கைத்தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டதே வேலைவாய்ப்புக்கள் கேள்விக்குறியாக காரணம்

## அரச அதிபர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**யாழ். மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத் தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டதன் காரணமாக தற்போது வேலைவாய்ப்புக்கள் கேள்விக் குறியாக வுள்ளன. ஆகவே இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டுமென யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவ ட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில்வேலை வாய்ப்பின்மை என்பது மிகவும் பாரிய பிரச்சினையாக உள்ளது. அதுமிகவிரைவில் தீர்க்கப்பட வேண்டும். கடந்த வருடம் மத்திய மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்களினூடாக பல்வேறு நிதியில் 247 09.72 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு 3 ஆயிரத்து 123 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன.

2015 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்துக்காக 1759.5 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப் பட்டுள்ளது. அதில் ஆயிரத்து 320 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 275 பேரை மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் 6 ஆயிரத்து 204 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப் பட வேண்டியுள்ளது.அதில் 11 ஆயிரத்து 319 குடும்பங்களை சேர்ந்த 39 ஆயிரத்து 96 பேர் இந்த பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர்.

மீள் குடியேறிய,மீள் குடியேறவுள்ள மற்றும் வறுமையான 38 ஆயிரத்து 574 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டிய வேலை உள்ளது. மற்றும் 8 ஆயிரத்து 527 வீடுகள் புனரமைப்புசெய்யப்பட வேண்டியுள்ளன.

எமது மாவட்டத்தில் 31 ஆயிரத்து 827 மலசல கூடங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை அதிகமாகவுள்ளது.

விசேட தேவையுடையோருக்காக 545 விசேட மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்படவேண்டிய தேவை உள்ளது.எனவே இது தொடப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 9,883 இடங்களில் சோதனை

மேல்மாகாணத்தில்காணப்படுகின்ற டெங்கு பரவும் அபாய நிலையை கட்டுப்படுத்தும் நோக்கில் கொழும்பு மாவட்டத்தில் 9883 பகுதிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக கொழும்பு மாநகர சபை கூறியுள்ளது.


இதற்காக முப்படையினரும் பொது சுகாதார பரிசோதகர்களும் இணைந்து மூன்று நாள்வேலைத்திட்டம்ஒன்றை முன்னெடுத்திருந்ததாக அதன் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜே முனி தெரிவித்தார்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இடங்களில் 10 வீதமானவை டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.மேலும் 2 வீதமான சூழல் நுளம்பு இனப்பெருக்கம செய்யக்கூடியவாறு காணபட்டதாக அவர் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் வெப்பமான காலநிலை நிலவுகின்ற போதும் டெங்கு பரவும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (இ)

## யோஷிதவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கும் கடற்படை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் லெப்டினனட் யோஷித ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுப்பதற்காக தாம் இன்னும் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையை எதிர்பார்ப்பதாக கடற்படை தரப்பு தெரிவித்துள்ளது.



கடற்படை பேச்சாளர் அக்ரம் அலவி கொழும்பின் ஊடகம் ஒன்றுக்கு இதனை தெரிவித்துள்ளார்.


யோஷித தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை, பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமையவே அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்க முடியும் என்று அலவி தெரிவித்துள்ளார்.


மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்தபோது யோஷித கடற்படையின் பதவியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 620


உஷா




சுதா




கன்சிகா




ராஜ்




கமல்




பிரதாப்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மயிர்க் கூச்செறிய வைக்கும் “சிங்க- இரத்தம்” பிரச்சாரமும் உயிர்கொண்டெழும் இலங்கை வம்ச வரலாறும் (மகாவம்சம்)




சண்டே லீடர் பத்திரிகையில் “மயிர்கூச்செறிய வைக்கும் சிங்க இரத்தம் பிரச்சாரமும் உயிர்கொண்டெழும் இலங்கை வம்ச வரலாறும் (மகா வம்சம்)” எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...

“சிங்கலே” அதாவது “சிங்கத்தின் இரத்தம்” என்ற வாசகங்களுடன் கூடிய பிரச்சார ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட வாகனப் பவனியுடன் ஆரம்பமாகிய அந்த பிரச்சார இயக்கத்தின் பிரதிபலிப்பு நுகேகொடவில் வாழும் முஸ்லிம் மக்களது வீட்டுச் சுவர்களுக ளெங்கும் மிக விரைவிலேயே பிரதிபலித்தது மட்டுமல்லாது நகரெங்கும் பரவிக் கொண்டிருந்தது. இந்த ஒரே வார்த்தை முஸ்லிம்களின் வீட்டுச் சுவர்களளனை த்திலும் ஸ்பிரே பெயின்ட் மூலம் எழுதப்பட்டவையாக காணப்பட்டது.

இந்த ஸ்பிரே பெயின்ட் பூச்சு சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது தகுந்த நடிவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் கூறியது. ‘சிங்கலே’ அல்லது ‘சிங்க இரத்தம்’ என்ற இந்த பிரச்சாரமானது முன்னாள் ‘UPFA’ பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவருமான உதய கம்மன்பிலவினாலும் சிங்கள தேசிய இயக்கத்தினாலுமே ஊக்குவிக்கப்பட்டதாகவுமிருந்தது.

முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களுக்கிடையே பதட்ட நிலையை மீண்டும் உருவாக்கி விடக்கூடிய இப்புதிய பிரச்சினைக்கு பலரிடமிருந்து கிளம்பியிருக்கும் எதிர்ப்புக்களுடன் சமூக ஊடகங்களிலும் அது பற்றிய பலதரப்பட்ட கலப்பு பிரதிபலிப்புக்களையும் காணக் கூடியதாயிருந்தது.

இந்த விடயம் பற்றி கடந்த நாட்களில் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே நிகழ்ந்த கலந்துரையாடல் களின்போது இப்பிரச்சினை நாட்டில் இனக் கலவரங்களை உருவாக்கி விடக் கூடுமென்ற கவலையும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் சகல சமூகங்களதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் நிலையான நிரந்தர அமைதி சமாதானம் அங்கு ஏற்பட வேண்டுமென ஊக்குவித்துவரும் மனித உரிமைகள் குழுக்களுங்கூட இந்த “சிங்கலே” பிரச்சார இயக்கம் பற்றி கவலையுடன் கூடிய தமது அக்கறையை வெளிப்படுத்தியிருந்தன.

“வெறுப்பினை விதைப்பதன் ஊடாக பாகுபாட்டையும் பகைமையையும் தூண்டி, அதன்மூலம் அல்லது இலங்கை சிறுபான்மை மக்களுக்கெதிராக வன்முறையை கட்டவிழ்த்துவிடுவது போன்ற வழிகளில் குழப்பங்களை உருவாக்க சந்தர்ப்பங்களைத் தேடும் புதுப்புது பிரச்சார இயக்கங்களை முடுக்கிவிடும் சிலர் அல்லது சில அமைப்புக்கள் பற்றி வெளிவரும் அறிக்கைகள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துவதாயிருக்கின்றன. மத ரீதியிலான பதட்ட நிலையை ஏற்படுத்தும் அரசியல்வாதிகள் சிலரது குழப்பகரமான மனப்போக்குகள் பற்றியும் கடந்த வருடங்களின் போது நன்கு அறியப்பட்டுள்ளது. இவ்வித மான நிலைமைகளில் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சிறுபான்மை மக்கள் மீது எதிர்பாராத திடீர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை அரசியல் தலைவர்கள் இவ்வித போக்கினை தடுப்பதற்கோ நிறுத்துவதற்கோ போதிய அளவில் கூடுதல் நடிவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமேயன்றி எரியும் நெருப்பில் எண்ணை ஊற்ற முயற்சிக்கக் கூடாது” என ஆசிய பசுபிக் சர்வதேச மன்னிப்புச் சபையின் பத்திரிகை ஊடகத் துறை அதிகாரியாகிய ஒலோம் புளொமிஸ்ற் சண்டே லீடர் பத்திரிகைக்கு கூறியிருந்தார். கடந்த காலத்தில் பேச்சுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்டவிதிகளை மீறுவோரைத் தண்டிப்பதற்கு ‘பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்’ பயன்படுத்தப்பட்ட அதே மொழிப் பிரயோக சட்ட விதிகளே அண்மையில் ‘பகைமைப் பேச்சு’க்களுக்கெதிராக பிரேரிக்கப்பட்ட சட்டமூலங்களில் மீண்டும் விரிவாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதானது பேச்சுக்கள் மூலம் வன்முறை தூண்டப்படுவதை அரசாங்கம் சகித்துக் கொள்ளாது என்ற மிகவும் தெளிவான செய்தியையே அவர்களுக்கு வழங்குவதாக உள்ளது.

“கடந்த காலங்களில் சிறுபான்மையினரைத் தாக்கினால் தட்டிக்கேட்பது யார்? என்ற விதமாக தடையோ தண்டனையோ இன்றி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை தகுந்த வழிகள் மூலம் நிறுத்திக் கொள்ளச் செய்வதே இந்த செய்தியை சம்பந்தப்பட்டவர்களுக்கு மனதில் பதியவைக்க உதவும்” என்று அவர் மேலும் கூறியிருந்தார்.

நுகேகொடையில் முஸ்லிம்கள் வாழும் பகுதியிலுள்ள அவர்களது வீட்டுச் சுவர்களில் ‘சிங்க இரத்தம்’ என்ற சுலோகங்களை எழுதி இனவாதப் பிரச்சாரத்தை ஓர் தொடர் இயக்கமாக நடத்துபவர்களையும் அதற்குப் பொறுப்பானவர்களையும் கைது செய்ய வேண்டுமென்று இலங்கை முஸ்லிம் கவுன்சிலும் அரசாங் கத்தை வலியுறுத்தியுள்ளது. இந்த அமைப்பின் தலைவரான என்.எம். அமீன், சண்டே லீடர் பத்திரிகைக்கு இது பற்றி தெளிவுபடுத்தியதுடன் இந்த பிரச்சார இயக்கத்தின் செயற்பாடுகளாலாகும் விளைவுகளின் வளர்ச்சி பற்றி தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

அதேநேரம், இலங்கை வரலாற்று ரீதியாகவே ‘சிங்கலே’ என்ற பெயர்ப்பதத்தைக் கொண்டிருப்பதாக அதாவது சுதந்திரமடைவதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே அது ஓர் ‘சிங்கள நாடு’ என்ற அடையாளத்தைக் கொண்டுள்ளது என்ற உண்மையை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது என்பதே இது பற்றிய முன்னாள் ‘UPFA’ உறுப்பினரான உதய கம்மன் பிலவின் கூற்றாக இருக்கிறது.

கடந்த வாரம் இடம் பெற்ற இந்த இனவாத பேரணி நிகழ்வுகளின்போது சில பொலிஸ் உந்துருளி களிலும் இந்த சிங்கலே வாசக ஸ்ரிக்கர்கள் காணப் பட்டமை மேற்படி யான இனவாதப் பிரச்சாரத்தின் தீவிர பரம்பல் வேகத்தை காட்டுவதாயுள்ளது.

(தொடரும்)

# இசையால் பெருகும் வருமானம்

**தொழில் ரகசியம்**

ஒலிபரப்படும் இசையின் டெம்போ வாடிக்கையாளர் கடையில் செலவழிக்கும் நேரத்தை நிர்ணயிக்கும் என்கிறார்கள். பின்னணியில் குத்து பாட்டு போட்டால் குதித்து ஓடி வாங்கும் வாடிக்கையாளர் டெம்போ குறைவான இசையை ஒலிபரப்பினால் ஆர அமர மெதுவாக கொள்வனவு செய்கிறாராம்.

இசை கேட்டால் புவி அசைந்தாடுமா என்று எமக்குத் தெரியாது. இப்பொழுது வரும் பாதி இசை கேட்டால் வசைபாடத்தான் தோன்றுகிறது. ஆனால் சந்தைப்படுத்தல் ஆலோசகராய் லட்சணமாய் ஒன்று தெரியும். கடைகளில் சரியான இசை கேட்டால் வாடிக்கையாளர் வசைபாடாமல், அசைந்தாடி பொருள் வாங்குவார். இதை நாம் கூறவில்லை. கடையில் ஒலி பரப்பப்படும் இசை வாடிக்கையாளர் மனதை பாதிக்கும் விதத்தை நாற்பது வருடங்களாக ஆராய்ந்த பல அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஆய்வுகள் கூறுகின்றன.

இசையின்ஒலி அளவு, டெம்போ, தன்மை ஆகியவை கடையில் வாடிக்கையாளர் செலவழிக்கும் நேரத்தை, பிராண்டுகளை பார்க்கும் கோணத்தை, வாங்கும் அளவை நிர்ணயிக்கின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

**இசையின் ஒலி அளவு?**

ஒலிபரப்பப்படும் இசையின் அளவு அதிகமாக இருந்தால் வாடிக்கையாளர்கள் தங்களை அறியாமல் கடையில் குறைந்த நேரமே செலவழிக் கிறார்களாம். விட்டால்போதும் என்று வாடிக்கையாளர்கள் கடையிலிருந்து ஓடுகிறார்களாம். இளைஞர்கள் மட்டுமே அந்த காட்டு சத்தத்தை பொறுத்துக் கொண்டு ஷாப்பிங் செய்கிறார்கள் என்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நம்மூர் கடைகள் பல இப்படித்தான் இசையை கடை முழுவதும் அலர விடுகிறது. கடைக்கு வந்தவர்களை அசிங்கமாய் திட்டி, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவதற்கு ஈடானது இது. மெதுவாய், பதமாய், அமைதியாய் பின்னணியில் இசை ஒலிபரப்படும் போது வாடிக்கையாளர் கடையில் செலவழிக்கும் நேரம் அதிகரிக்கிறது.

இதில் ஒரு வேடிக்கையான விஷயம் உண்டு. சுப்பர்மார்க்கெட்டில் பின்னணி இசையின் அளவு அதிகமிருந்தால் வாடிக்கையாளர் கடகடவென்று ஷொப்பிங் முடித்து கிளம்புகிறார். ஆனால அவர் கடையில் வாங்கும் அளவும் செலவழிக்கும் பணமும் குறைவதில்லை. வாங்க வந்ததை வாங்கி கடையிலிருந்து விட்டால் போதும் என்று எஸ்கேப் ஆகிறார்.

தேநீர் கடைகளில் இசையை அசுரத்தனமாக அலர விடுவதை கேட்டிருப்பீர்கள். சும்மா ஒரு ரீ மட்டும் வாங்கி வெட்டியாய் உட்கார்ந்து வியாபாரத்தை கெடுக்காதே என்று வந்தவர்களை விரட்ட ரீ கடைகள் பயன்படுத்தும் விவகாரமான டெக்னிக் இது.

**இசையின் டெம்போ**

ஒலிபரப்பப்படும் இசையின் டெம்போ வாடிக்கையாளர் கடையில் செலவழிக்கும் நேரத்தை நிர்ணயிக்கும் என்கிறார்கள். பின்னணியில் குத்து பாட்டு போட்டால் குதித்து ஓடி வாங்கும் வாடிக்கையாளர் டெம்போ குறைவான இசையை ஒலிபரப்பினால் ஆர அமர மெதுவாக ஷாப்பிங் செய்கிறாராம்.

மெதுவாக ஷொப்பிங் செய்வதனால் என்ன பயன்? மெதுவாக ஷொப்பிங் செய்யும் வாடிக்கையாளர்கள் அதிகம் வாங்குகிறார்கள் என்று உலகின் பல ஆய்வுகள் கூறுகின்றன. மெதுவாய் ஷாப்பிங் செய்யும் போது ஒவ்வொரு பொருளையும் எடுத்து, பார்ப்பதால் வாங்கக கூடிய சாத்தியக்கூறு அதிகமாகிறது.

சுப்பர்மார்க்கெட்டில் பரவாயில்லை. டெம்போ அதிகமுள்ள இசையையோ, குத்து பாட்டு போட்டாலோ வந்தது வந்தோம், டக்கென்று வாங்கிவோம், கிளம்புவோம் என்று வந்தவர்கள் வாங்கிச் செல்வார்கள். நின்று, பார்த்து, மெதுவாய் வாங்கும் கடைகளான புடைவை கடை, நகைக் கடைகளில் டெம்போ அதிகமான இசையை ஒலிபரப்புவதற்கு பதில் பேசாமல் 'கடைக்குள் அத்துமீறி யாரும் பிரவேசிக்கக் கூடாது' என்று போர்ட் வைத்து விடலாம்!

**இசையின் தன்மை?**

இசையின் தன்மை, அதாவது ஷொப்பிங்கை பாதிக்கும் மற்றொரு முக்கியமான விடயம். ஒலிபரப்பும் இசை அமைதியானதாக இருக்கும் பட்சத்தில் வாடிக்கையாளர்கள் தங்களையும் அறியாமல் மெதுவாக ஷொப்பிங் செய்கிறார்கள். அவர்கள் மனமும், எண்ணங்களும் கூட சாந்தமாகி அதிகம் வாங்குகிறார்கள் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

பாடல்களுக்கு பதில் காதையும், மனதையும் அதிகம் நெருடாத இன்ஸ்ட்ருமெண்டல் இசை இன்னமும் பெட்டர் என்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதாவது பாடல் இல்லாமல் இசைக் கருவிகள் மட்டும் கொண்டு இசைக்கப்படும் இசை. புத்தகக் கடைகள், ஷொப்பிங் மால்கள் சிலவற்றில் 'இசைஞானி இளையாராஜா'வின் இன்ஸ்ட்ருமெண்டல் ஹிட்ஸ் ஒலிபரப்பப்படுவதை கேட்டிருப்பீர்கள். எண்ணங்களை நெருடாத, அமைதியான இசையில் மனம் லயித்து, மனம் சந்தோஷமாய் ஷொப்பிங் செய்வதை உணர்ந்திருப்பீர்கள். இதற்காகவாவது ஒரு எட்டு அந்த கடைகளுக்கு சென்று பாருங்கள். உணர்வீர்கள்.

ஒலிபரப்பும் இசையின் தன்மை வாடிக்கையாளர்கள் கடை பொருட்களை பார்க்கும் விதத்தையும் பாதிக்கிறது என்கிறார்கள். மேற்கத்திய நாடுகளில் வைன், ஷாம்பேய்ன் விற்கும் கடைகளில் க்ளாசிகள் இசையை ஒருபரப்பும் போது விலை அதிகமான ஐடங்கள் ஜோராய் விற்கிறதாம். நம்மூர் புடவை கடைகள் கல்யாண கூரை பட்டு புடவை விற்கும் செக்ஷனில் பாரம்பரிய இசையை பின்னணியில் ஒலிபரப்பலாம். பயன் தரும்.

**சாப்பிடும் நேரம்?**

இசையின் தாக்கம் கடைகளில் மட்டுமே என்று நினைக்காதீர்கள். ஹோட்டல், ரெஸ்டாரண்ட் செல்பவர்களையும் பாதிக்கும் சக்தி இசைக்கு உண்டு என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆற அமர ஆறு நாள் இருந்து சாப்பிடும் சௌகரியமுள்ள டைன் இன் ரெஸ்டாரெண்டுகளில் அமைதியான இசையை பின்னனியில் ஒலிபரப்பப்பினால் பில் தொகை கூடும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.


அப்படியென்றால் வருகிறவர்கள் அதிகம் தின்கிறார்களா? இல்லை. சரக்கும் சேர்த்து விற்கும் ரெஸ்டாரண்டுகளில் தின்பதற்கு முன் கொஞ்சம் அதிகமாகவே குடித்துவிட்டு சாப்பிடத் தோன்றுமாம். அதன் பின் சிறிது வயிற்றிகும் ஈவதால் பில் வேல்யூ கூடுகிறது. அதுவும் பின்னனியில் அமைதியான இசையாய் இருந்துவிட்டால் இன்னமும் விசேஷம். விலை உயர்ந்த சீமை சரக்கை விரும்பி குடிப்பார்களாம். பலரும் குடித்திருப்பதால் தானே சொல்கிறார்கள். கேட்டு வைப்போம்.

நம்மூர் 5 நட்சத்திர ஹோட்டலில் உள்ள ரெஸ்டாரெண்டுகள் இந்த டெக்னிகை அதிகம் பயன்படுத்துவதை அங்கு சென்றவர்கள் பார்த்திருக்கலாம். அந்த ஹோட்டல்கள் ஜோராக கல்லா கட்டுவதாகவும் கேள்வி.

கடைகள், சுப்பர்மார்க்கெட் போன்ற இடங்களை விடுங்கள், பொதுவாகவே மனித மனங்களை பாதிக்கும் சக்தி இசைக்கு உண்டு. அமைதியான இசை கேட்கும்போது மனம் சாந்தமடைகிறது. உணர்வுகள் புதுப்பிக்கப் படுகின்றன. தீய எண்ணங்கள் மறைகின்றன என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. ஜெர்மனியில் இரவில் திருட்டு அதிகம் நடந்து கொண்டிருந்த தெருக்களில் க்ளாசிகள் இசை ஒலிபரப்பப்பட்ட போது அந்த தெருக்களில் திருட்டு பெருமளவு குறைந்துவிட்டதாம்.

எமது பகுதியிலும் இரவில் திருட்டு அதிகம். ஜெர்மனி ஆய்வு பற்றி விளக்கி இரவில் சீடி ப்ளேயரில் மெல்லிய இசையை ஒலி பரப்பினால் 'சீடி ப்ளேயரே திருட்டு போயிடுமோ தெரியாது.

# நிதி மோசடி! தப்பிப்பது எப்படி?



குற்றவுணர்ச்சி இல்லாம செய்யுற எதுவுமே தப்பில்ல. பணம் சம்பாதிக்க ஆயிரம் வழி இருக்கு. உங்களை மாதிரியே பணம் சம்பாதிக்க ஆசை உள்ளவங்களை சேர்க்கணும். ஏமாத்தணும்.

ஒருத்தன ஏமாத்தணும் என்றால் அவனுடைய பேராசையை தூண்டணும்.... இந்த வசனங்கள் எல்லாம் -சதுரங்க வேட்டை' திரைப்படத்தில் இடம் பெற்று வரவேற்பு பெற்றவை என்பது தெரியும். திரைப்படத்தில் இது போன்ற வசனங்கள் இடம்பெற்றால் கைதட்டும் நாம் நடைமுறையில் பல மோசடிகளில் சிக்கி பணத்தையும் பொருளையும் இழந்து தவிக்கவே செய்கிறோம்.

காடு வளர்ப்பு, தேக்கு வளர்ப்பு, காளான் வளர்ப்பு, தங்க காசு என எதாவது ஒரு வழியில் பணம் பறிக்கும் மோசடி கும்பல்களிடம் இருப்பதையும் இழந்துவிட்டு நிற்கும் கதை ஐந்து பத்து ஆண்டுகள் இடைவெளியில் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இதற்கிடையே நிதி நிறுவனங்கள் என்கிற பெயரில் மோசடியான நிறுவனங்கள் பலவும் மக்களை ஏமாற்றி வருகின்றன. அதிக வட்டி, பத்தாயிரம் கட்டினால் 6 மாதத்தில் இருபது ஆயிரமாக சேர்த்து வாங்கிக் கொள்ளலாம் என வாய் வார்த்தையிலேயே மக்களை மயக்குகிறார்கள்.

**அதிக வட்டி சாத்தியமா?**

இது போன்ற மோசடி நிதி நிறுவனங்கள் மக்களை ஈர்ப்பதற்கு அடிப்படைக் காரணம் அதிக வட்டி, இரட்டை வருமானம் போன்ற அஸ்திரங்கள்தான். மக்களின் பேராசையை தூண்டித்தான் இந்த நிறுவனங்கள் வளர்கின்றன. இப்போதைய பணவீக்க விகிதத்தின் அடிப்படையில் குறைந்த காலத்துக்குள் அதிக வட்டியோ, அதிக வருமானமோ உத்தரவாதம் கிடையாது. சரியான கட்டுப்பாட்டு அமைப்புகளின் கீழ் இயங்கும் நிதிச் சந்தை சார்ந்த முதலீட்டு திட்டங்களின் சராசரி வளர்ச்சி அதிகபட்சமாக 14-15 சதவீதம்தான். அதுவும் நீண்டகாலத்துக்கு முதலீடு செய்தால்தான் கிடைக்கும். அதிக வருமானத்தை உத்தரவாதமாக கொடுக்க முடியும் என்று சொல்பவர் களிடம் விலகி இருப்பதே நல்லது.

**அனுமதிகள் பொய்யா?**

இது போன்ற நிறுவனங்கள் தங்களை அரசின் அனுமதி பெற்றவர்கள் என்று தகவல் கொடுக்கின்றனர். ஆனால் இது தவறு. ஒரு தொழிலை சட்டப்படி மேற்கொள்ளவும், நிறுவனத்துக்கு ஒரு தனிநபர் அந்தஸ்து வழுங் கவும் நிறுவனப் பதிவுகள் செய்யப்படுகின்றன. இதை வைத்துக் கொண்டுதான் மோசடி முதலீடுகள் திரட்டி வருகின்றன சில நிறுவனங்கள்.

கம்பெனி சட்டத்தின் கீழ் மட்டும் பதிவு செய்துள்ள நிறுவ னாங்களுக்கு முதலீடுகளை திரட்டும் அதிகாரம் இல்லை.

பொதுமக்களிடம் நிதி திரட்டி தொழில் செய்ய அனுமதி பெற்ற நிறுவனம் என்றால், நிறுவனம் எந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப் பட்டிருக்கிறது, எந்த ஒழுங்குமுறை ஆணையம் கட்டுப் படுத்துகிறது என்பதை தெரியப்படுத்த வேண்டும். அப்போதுதான் அந்த நிறுவனத்தால் ஏதாவது பிரச்சினை என்றால் அரசிடமிருந்து சரியான தீர்வு கிடைக்கும்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,382.24 | 6,382.24 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,315.36 | 3,315.36 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 2,265.092

***உயர்வடைந்தபங்குகள்(ரூ)*** மல்ரி பினான்ஸ்(15.60), உடப்புசலாவ(26.10), போகல காபைட்(35.10), எல்பிட்டிய(19.50), பீப்பள்ஸ் இன்ஸ்(17.30)

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** எஸ்.எம்.பி லீசிங்(0.30), புளூ டைமண்ட்(0.40), குட் ஹோப்(1,217.10), லங்கா செரமிக்(102.20), ஈகுவிட்டி ரூ(53.50).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.06 | 146.10 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.16 | 210.40 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.35 | 160.55 |
| சுவிஸ் பிராங் | 139.15 | 144.97 |
| கனேடிய டொலர் | 100.55 | 104.67 |
| அவுஸ்திரேலிய டொலர் | 99.81 | 104.55 |
| சிங்கப்பூர் டொலர் | 99.14 | 102.97 |
| ஜப்பான் யென் | 1.19 | 1.23 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.11 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.18 | |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

# தமிழ் சினிமா வரலாறு

88

## எதிர்நீச்சல் போட்டு ஏவி.எம்.சாதனை

இரவல் குரல்

சொந்தக் குரலில் பாடாமல் இரவல் குரலில் பாடும் முறை, முதன் முதலாக இப்படத்தில்தான் புகுத்தப்பட்டது. தேவகி வேடத்தில் நடித்த பெண்ணுக்குப் பாடத்தெரியாது. அப்போது மும்பையில் பிரபல பாடகியாக இருந்த லலிதா வெங்கட்ராமனின் பாடலைப் பதிவு செய்து தேவகிக்காகப் பயன்படுத்தினார்கள்.

நந்தகுமார் ஓரளவு நன்றாக ஓடிய படம். என்றாலும் நஷ்டம்தான்.

சொந்த ஸ்டூடியோ

இப்படி வரிசையாக மூன்று படங்களும் தோல்வி அடைந்தாலும் ஏவி.எம்.மனம் தளரவில்லை. தோல்விக்குக் காரணம் என்ன என்று நிதானமாக யோசித்தார்.


சொந்தத்தில் ஸ்டூடியோ இல்லாததே இதற்குக் காரணம் என்ற முடிவுக்கு வந்தார்.

சொந்தமாக ஸ்டூடியோ ஒன்றைத் தொடங்கத் தீர்மானித்து, சிலருடன் கூட்டுச் சேர்ந்து 1940 இல் சென்னையில் பிரகதி ஸ்டூடியோவை தொடங்கினார். 1 1/2 ரூபா லட்சம் செலவில் தொங்கப்பட்ட அந்த ஸ்டூடியோவில் முதன் முதலாக பூகைலாஸ் என்ற தெலுங்கு படத்தை தயாரித்து வெளியிட்டார். ஆந்திராவில் அதற்கு நல்ல வரவேற்பு. 25 வாரம் ஓடியது.

தொடர்ந்து 5 ஆண்டுகளில் வசந்தசேனா, அரிச்சந்திரா, வாயாடி- போலி பாஞ்சாலி, சபாபதி ஆகிய படங்களை தயாரித்தார்.

டைரக்ஷன்

இதில் சபாபதியை ஏவி.மெய்யப்ப செட்டியாரே டைரக்ட்





காரைக்குடியில் ஏவி.எம். நடத்திய கடை

செய்தார். அவர் டைரக்ட் செய்தார். அவர் டைரக்ஷன் பொறுப்பை ஏற்ற முதல் படம் இது. 1941 டிசெம்பரில் வெளியான சபாபதி வெற்றிப் படமாக அமைந்தது.

பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நகைச்சுவை கதை இது. வசனத்தையும் அவரே எழுதினார்.

கதாநாயகனாக டி.ஆர். ராமச்சந்திரனும் அசட்டு வேலைக்காரன் சபாபதியாக காளி என்.ரத்தினமும், கதாநாயகியாக பத்மாவும் நடித்தனர். கே.சாரங்க பாணியும் உண்டு.

சோடா கொண்டு வா என்று ராமச்சந்திரன் சொன்னால், சோடா பாட்டிலை கொண்டு வந்து நீட்டுவார், காளி என்.ரத்தினம். முட்டாள்! உடைச்சு கொண்டா! என்றால், உள்ளே போய் பாட்டிலை துண்டு துண்டாக உடைத்து தட்டில் கொண்டு வருவார்!



இப்படி, ரசிகர்களை வயிறு வலிக்க சிரிக்க வைத்த படம், சபாபதி.

இந்தப் படத்தில் கதாநாயகன் டி.ஆர். ராமச்சந்திரனுக்கு மாதச்சம்பளம் 67% ரூபாய். கதாநாயகிக்கு 45 ரூபாய். படத்தின் மொத்த செலவே 32 ஆயிரம் ரூபாய்தான்.

பின்னர் என் மனைவி என்ற நகைச்சுவைப் படத்தைத் தயாரித்தார். கே.சாரங்கபாணி, கே.ஆர். செல்லம் முக்கிய வேடத்தில் நடித்த இப்படத்தை சுந்தர் ராவ் நட்கர்னி டைரக்ட் செய்தார். நகைச்சுவைக் காட்சிகள் நிறைந்த இந்தப்படமும் வெற்றி பெற்றது.

1942 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் தீவிரமாக நடந்துகொண்டிருந்த நேரம்.

சென்னை மீது எந்த நேரத்திலும் ஜப்பான் குண்டு வீசலாம் என்று நிலை இருந்ததால், சென்னை நகரில் வசித்தவர்கள் வீட்டை காலி செய்துவிட்டு வெளியூர்களில் குடியேறினார்கள். ஏவி.எம். நடத்திய பிரகதி ஸ்டூடியோவில் சுமார் 6 மாத காலம் எந்த வேலையும் நடைபெறவில்லை.

நிலைமை சீரானதும், மீண்டும் படம் தயாரிக்க முனைந்தார், ஏவி.எம். ஏற்கனவே அவர் கன்னடத்தில் தயாரித்த ஹரிச்சந்திரா தமிழ் நாட்டிலும் சக்கைப்போடு போட்டது. இதை ஆர்.நாகேந்திரராவ் (பின்னால் ஜெமினியின் அபூர்வ சகோதரர்கள் படத்தில் வில்லனாக நடித்தவர்) டைரக்ட் செய்திருந்தார்.

(தொடரும்)

# மயிர்க் கூச்செறிய வைக்கும் சிங்க- இரத்தம் பிரச்சாரமும் உயிர்கொண்டெழும் இலங்கை வம்ச வரலாறும் (மகாவம்சம்)

(18 ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி....)

கடந்த காலத்தில் இருந்து தமிழ்- சிங்கள- பறங்கி இனங்கள் இலங்கையில் ஒன்றாகவே வாழ்ந்து வருவதாக சிங்கள தேசிய மாநாடு கூறுகிறது.

இலங்கையின் தேசிய கொடியை ஏற்றுக் கொண்டிருக்கும் இலங்கைவாழ் சமூகங்களனைத்தும் இலங்கையை ஓர் சிங்கள நாடாக அங்கீகரித்தவர்களாகவே இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார் வண யக்கல முல்ல பாவர தேரர்.

எப்படியும் இலங்கையின் சிறுபான்மை அரசியல் கட்சிகள் அதனை ஒரே நாடாக அல்லாமல் இதன் சமூகங்களனைத்தையும் அங்கீகரித்திருக்கும் ஒரு நாடாகவே உரிமை பாராட்டுகிறார்கள். கடந்த காலத்தில் பௌத்த துறவிகள் நாட்டுக்காகப் போராடியது மட்டுமல்லாது அது ஒரு 'சிங்கள நாடு' என்ற அடையாளத்தைப் பாது காத்துக் கொள்வதற்காக அவர்களில் சிலர் தமது உயிர்களையுங்கூட நாட்டுக்காக தியாகம் செய்துள்ளனர் என்று கூறும் அவர், சிறுப்பான்மையினர் தற்போதைய தமது 'எழுச்சி' யினை அரசியல் மயப்படுத்து வதை தாம் ஒரு போதுமே அங்கீகரிக்கப் போவதுமில்லை என்று கூறுகிறார். நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த இளைஞர்கள் பலரும் சிங்கள நாட்டைப் பாதுகாப்பதற்கான இந்த பிரச்சார இயக்கச் செயற்பாடுகளை ஆதரித்து வருகின்றனர் எனவும் அவர் கூறுகின்றார்.

கடந்த காலத்தில் இலங்கை சிங்களவருக்கு மட்டுமே உரிய ஒரு நாடு என அழுத்தம் கொடுத்து பௌத்த துறவிகள் போராடி வந்தமை முரண்பாடுகளுடன் கூடிய வன்முறை இன மோதல்களுக்கு வழிகோலியதாயிற்று. முன்னைய அரசாங்கம் அதிகாரத்திலிருந்தபோது முஸ்லிம்களின் சில நம்பிக்கைகளுக்கெதிராக தீவிர பிரச்சாரமொன்றை 'பொது பலசேனா' என்ற அதி தீவிரவாத பௌத்த மத அமைப்பொன்று நடத்தியிருந்தது.

எப்படியும் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பொது பலசேனா மௌனமாகியிருந்ததுடன் பௌத்த துறவிகள் கொண்ட 'சிகல ராவய' என்ற மற்றுமொரு இன- மதவாதக் குழுவும் அமைதி காத்தது. கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது ஏற்கனவே இடம்பெற்றிருந்த தாக்குதல்களுக்கு இந்தக் குழுவே காரணமாயிருந்ததாக அறியப்படுகிறது.

எப்படியோ, தற்போது புதிதாக வெளிக்கிளம்பியிருக்கும் மற்றுமொரு தீவிரவாத பௌத்த துறவிகளுக்கான முன்னர் குறிப்பிட்ட குழுவானது, கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் ஒப்பீட்டளவில் உருவாகியிருக்கும் ஓரளவு சமாதானமான சூழ்நிலையிலும் புதிதான பதற்ற நிலையை தோற்றுவித்துவிடுமோ என்ற விதமான அச்சத்தை ஏற்படுத்துவதாயுள்ளது. இந்த புதிய குழுவானது யக்கலமுல்ல பாவர தேரரது தலைமையில் இயங்குகிறது. இந்த 'சிங்க இரத்தம்' பிரச்சார இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு உத்வேகம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் அண்மையில் கூடி கலந்தாலோசித்திருப்பது பற்றிய புலனாய்வு அறிக்கைகள் கிடைத்திருப்பதாக கூறிய அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ண இதில் பத்திரிகையாளர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறியிருந்தார். அரசாங்கத்திற்கெதிராக எவர் பிரச்சாரம் மேற்கொண்டாலும் அது அரசுக்கு பிரச்சினையாக இருக்கப் போவதில்லையென்றாலும் இவர்களில் யாராவது இனவாத வன்முறைகள் மூலம் இனக்கலவரங்களை உருவாக்க முயற்சிக்கக் கூடுமென்பதே இப்போது இருக்கும் பிரச்சினையாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

அவர் மேலும் கூறுகையில், எதிர்காலத்திலோ உடன்வரும் அண்மைக் காலங்களிலோ நாட்டின் ஸ்திர நிலையை குழப்புவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் கடுமையான நடவடிக்கைகளையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுடன் அவை முளையிலேயே கிள்ளியெறியப் படுமென்றும் வலியுறுத்தினார்!

தமிழில் யோகர்

ஊர் இரண்டு பட்டால்
கூத்தாடிக்கு கொண்டாட்டம்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள்

அன்புக்கு இனிய தமிழ் அரசியல்வாதிகளுக்கு அன்பு வணக்கம். எங்கள் அரசியல்வாதிகளுக்கு இவ்விடத்தில் பல தடவைகள் கடிதங்கள் எழுதியுள்ளோம். அவை எதுவும் பயன் பெற்றதாக தெரியவில்லை. இப்போதும் நாம் உங்களிடம் கேட்பது, நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஓர் அணியில் ஒற்றுமைப்பட்டு எங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வோம் என்பதுதான்.

தேர்தலில் வென்று பதவியைப் பிடித்துக் கொண்ட நீங்கள், உங்களுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பதவி கிடைத்துவிட்டது, எனி நாம் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்று நினைத்தால் அது ஆணவமாகி விடும். ஆணவம் அழிவைத் தரும்.

அன்புக்கு இனிய தமிழ் அரசியல்வாதிகளே! வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களே! வடக்கு மாகாண அரசு நமக்குக் கிடைத்தது இதுவே முதற்தடவை.

முன்பு ஒருமுறை வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை நம் கைகளுக்குக் கிடைத்தனவாயினும் அன்றைய போர்க்காலச் சூழல் அந்த அரசை தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்க முடியாமல் போயிற்று.

பின்னாளில் வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் செய்து இணைந்த இரண்டு மாகாணங்களையும் பிரிப்பதற்கு ஆளும் தரப்பு எடுத்த முயற்சி வெற்றி பெற்றது.

இந்த விடயங்களில் எல்லாம் தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருந்தனர். இப்பொழுது வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாண அரசுகளாயின.

வடக்கும் கிழக்கும் தனித்தனியானபோது வடக்கு மாகாணத்தின் முதலாவது அரசு இது என்ற பதிவை தனதாக்கிக் கொண்டது.

ஆக, வடக்கு மாகாண அரசின் முதலாவது முதலமைச்சர்; முதலாவது அவைத்தலைவர்; முதலாவது அமைச்சர்கள்; முதலாவது உறுப்பினர்கள் என்ற பெருமையும் உங்களுக்குரியது. இருந்தும் இவற்றை எல்லாம் நீங்கள் மறந்து செயற்படுவது கண்டு வேதனை அடைவதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.

அன்புக்குரிய வடக்கு மாகாண சபையின் ஒட்டுமொத்த உறுப்பினர்களே! தயவு செய்து தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள்.

தமிழ் மக்கள் பேரவை தயாரித்த அரசியல் தீர்வுத்திட்ட வரைபு நேற்றையதினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது மண்டபம் நிறைந்து, மண்டபத்தின் முன்றறில் கால்கடுக்க நின்று அந்த நிகழ்வில் மக்கள் பங்குபற்றியதை பார்த்தபோது, இதயம் நெகிழ்ந்து கொண்டது; உள்ளம் பூரித்துக் கொண்டது.

எங்கள் மக்களின் உணர்வு வெளிப்பாட்டை மனித மொழியில் கூறிவிட முடியவில்லை. எப்பேற்பட்டாவது அந்நிகழ்வை மொழிப்படுத்தி விடலாம் என் றால், அதற்கு கண்களில் பெருகும் கண்ணீர் அனுமதி தர மறுக்கிறது. அந்தளவிற்கு இதயத்தை நெகிழ வைத்த உணர்வு பூர்வமான நிகழ்வு அது.

இதைப் புரிந்து கொள்ளுங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டால் ஒற்றுமை தன்பாட்டில் ஏற்படும்.

## இனவாதத்தைத் தூண்டும் பனர்களை அகற்றுவதற்கு ஒருவாரம் காலக்கெடு

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர்

தனியார் பேருந்துகளில் ஒட்டப்பட்ட ஸ்ரிக்கர்கள் மற்றும் பனர்கள் இனவாதத்தை தூண்டும் நடவடிக்கை என அர்த்தப்படுத்தும் என்பதால் கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் அவற்றை ஒரு வாரத்திற்குள் அகற்ற வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தனியார் பேருந்துகளில் இவ்வாறான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பாக பல முறைப்பாடுகள் எங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

கொழும்பு நகருக்கு வெளியே அவிசாவளை, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இவை இனவாதச் செயற்பாடாக விளங்கிக்கொள்ளப்படலாம்.

கொழும்பைச் சேர்ந்த பேருந்து உரிமையாளர்கள் இவ்வாறான ஸ்ரிக்கர்களை ஒட்டுவதில்லை. அவர்கள் அது தொடர்பான விதிமுறைகளை அறிந்திருக்கிறார்கள்.

பாராளுமன்ற தேர்தல் காலத்திலோ அல்லது ஜனாதிபதித் தேர்தல் காலத்திலோ வேட்பாளர்கள் பேருந்துகளில் ஸ்ரிக்கர்களை ஒட்டுவதற்கு நாம் அனுமதி வழங்கவில்லை. மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின்படி ஸ்ரிக்கர்களை ஒட்டுவதோ அல்லது வாகன கண்ணாடிகளில் பனர்களைக் காட்சிக்குக் கட்டுவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

9 மில்லியன் பயணிகள் தினமும் பேருந்தில் பயணம் செய்கின்றனர். மீண்டுமொரு பிரச்சினை ஏற்படுவதற்கு பங்களிப்புச் செய்யவோ அல்லது அதனைஊக்குவிக்கவோ முடியாது.

மேலும் ஸ்ரிக்கர்களை ஒரு வாரத்தினுள் அகற்றாது விட்டால் உரிய தரப்பினருக்கு அறிவித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரிக்கர்மற்றும்பனர்களை அகற்றுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

## மாகாணசபை முறைமை நாட்டின் பிரிவினைக்கு வழிவகுப்பதால் இல்லாதொழிக்க வேண்டும்

### ஐக்கிய சிங்கள மக்கள் முன்னணி யோசனை

தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் காரணமாக நாடு தவறான வழியில்சென்றுகொண்டிருப்பதாக ஐக்கிய சிங்கள மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் முன்னணி என்ற பெயரில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருந்த மேற்படி அமைப்பின் செயலாளர் நாத் அமரக்கோன் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பு சீர்திருத்த குழுவுக்கு அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக நான்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிங்க லே என்று அழைப்பதே பயன்பாட்டில் இருந்தது. தேசிய இனமாக சிங்களமும் மொழியாக சிங்களமும் தேசியக் கொடியை நிறக்கோடுகள் எதனாலும் வேறுபடுத்தாது சிங்கக் கொடிக்கு மாற்ற வேண்டும்.

மாகாண சபை முறைமை பிரிவினைக்கு வழிவகுத்துள்ளது . இது இல்லாதொழிக்கப்படவேண்டும். அத்துடன் ஆட்சி முறைமையானது ஜனாதிபதி, ஆலோசனை சபை, தேசிய சபை, நிறைவேற்று அமைச்சர்கள் குழு, உள்ளூராட்சி சபைகள் என்ற ஒழுங்கமைப்பில் அமைய வேண்டும்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகப் பேணப்படுவதுடன் தொழில் ரீதியாக அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பஞ்சதந்திர பிரதிநிதித்துவ தேர்தல் முறை மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளாக 160 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். 15 உறுப்பினர்கள் தொழில் ரீதியாகவும் 15 உறுப்பினர்கள் தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் 15 உறுப்பினர்கள் சமூக கலாசார பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் ஏனைய உறுப்பினர்கள் தேசிய ரீதியில் அடையாளம் காணப்பட்ட பிரதிநிதிகளாக இருப்பதுடன் பொது மக்களுக்கு குறிப்பிடத்தக்க சேவை செய்தவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்படுவர் என தமது அமைப்பின் ஆலோசனையை அவர் முன்வைத்துள்ளார் . (3)

## பதவியைப் பெற எனது கணவர் தயாரில்லை

### அனோமா தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்றுக் கொள்வதற்கு தனது கணவர் தயாரில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மறைந்த அமைச்சர் எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தனவின் இடத்திற்கு சரத் பொன்சேகாவை நியமிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே, அனோமா பொன்சேகா ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பதவிக்காக பலரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகாவின் பெயரும் அதில் அடங்குவதாகவும் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம் இது தொடர்பில் இறுதி முடிவை ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணைந்து மேற்கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் 9ஆம் திகதி புதிய பாராளுமன்ற உறுப்பினர் பதவியேற்கவுள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிநாளை மறுதினம்புதன் கிழமை பிற்பகல் 2 மணிககு நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திருமதி.சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்திகலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.சிறிமுருகதாஸ் காந்தன், ஓய்வுபெற்ற இ.போ.ச பரிசோதகர் அ.நடராசா ஆகியோர் கலந்து கொள் வதுடன் வித்தியாலய பழைய மாணவியும் அபான்ஸ் நிலைய உதவக்கணக்காளருமான செல்வி சந்திரன் ஐஸ்வர்யா கௌரவ விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றுதிங்கட்கிழமை யாழ்.பிரதேசத்தில் பாற்பண்ணை பிரதேசம், பாலாவோடை, காரைநகர் CTB Depot பிரதேசம் செட்டி வீதியடி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரியில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 29, பிறவுண் வீதி, கொக்குவில் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்த அல்லது தேசியத் தொழில் தகைமை மட்டம் 4 இனை பூர்த்தி செய்த ஆர்வமுள்ள மாணவர்களை இக் கலந்துரையாடலில்கலந்து கொள்ளுமாறு கல்லூரி பணிப்பாளர் யூட் வோல்ரன் அறிவித்துள்ளார். (இ-5)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அருள் வெள்ளம்



நமது வாழ்க்கையின் நோக்கம் அமைதியும் நிறைவும் பெற்று வாழ்வதோடு ஆன்ம வளர்ச்சி பெறவேண்டும் என்பதேயாகும். ஆன்ம வளர்ச்சியை முதற்குறிக்கோளாகக் கொண்டால் பிறவெல்லாம் அற்பமாகவே தோன்றும். மனதை நிறை நிலையில் வைத்துக் கொள்வோம். கடமையின் மதிப்புணர்ந்து செயலாற்றி வாழ்வோம்.

உண்மையிலேயே ஆன்ம வளர்ச்சியை வேண்டுபவர் சிக்கல்களையும் பிணக்குகளையும் தாண்டி அறிவைச் சுதந்திரமாக இயங்க விடவேண்டும். விரிந்த பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளையும் மனித வாழ்க்கையும் இணைத்து ஒத்துச் சிந்தியுங்கள். தன்முனைப்பு என்ற திரை கரைந்துவிடும். தன்முனைப்பும் இயற்கை நியதியறியாமையும் ஒன்றை ஒன்று தழுவி நிலைத்திருக்கின்றன.

இதனால் மனிதன் தன்னிடம் ஒரு கற்பனை மதிப்பை (False Prestige) உருவாக்கிக் கொள்கிறான். இந்த மருள்நீண்ட மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பிறரை ஒப்பு நோக்கும் கருத்தில் வேறுபாடுகளும் பிணக்குகளும் எழுகின்றன. தனது மனதைச் சீரமைத்துக்கொண்டு எவரை எக்கருத்தைத் தன்னோடு ஒப்பு நோக்கினாலும் ஒரு சமநிலை உணர்வு உண்டாகும். இந்த உணர்வில்தான் பேரின்பம் தொக்கி நிற்கின்றது. இப்பேருணர்வே அருள் வெள்ளமாகும்.

# இந்தியாவுக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு; தலைவர்- சந்திமால், மிரட்ட வருகிறார் பெர்னாண்டோ



இந்திய கிரிக்கெட் அணியுடன் இருபது 20 தொடரில் பங்கேற்கும் இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 இருபது 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதில் முதல் இருபது 20 போட்டி இம் மாதம் 9 ஆம் திகதி புனேயிலும், 2 ஆவது போட்டி 12 ஆம் திகதி டில்லியிலும், 3 ஆவது போட்டி 14 ஆம் திகதி விசாகப் பட்டினத்திலும் நடைபெறவுள்ளது.

இதற்கான இலங்கை அணியில் காயம் காரணமாக அணித் தலைவர் மலிங்க இடம்பெறவில்லை. அவருக்கு பதிலாக சந்திமால் இருபது 20 அணியை வழி நடத்துகிறார்.

அதேபோல் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணித்தலைவரான மத்யூசும் காயம் காரணமாக விலகியுள்ளார்.

மலிங்கவின் காயத்தை விட இவருக்கு அதிக காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மத்யூஸ் ஆசியக் கிண்ணப் போட்டிக்குள் குணமாகி விடுவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தவிர, ஷேஹான் ஜெயசூரிய, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், கிருத்துவான் விதானகே ஆகியோர் இடம் பெறவில்லை.

அதேசமயம் உள்ளூர் போட்டியில் 46 பந்தில் 16 சிக்சர் உட்பட 123 ஓட்டங்கள் குவித்த தாசன் ஷானாக (24) அணியில் இடம் பெற்றுள்ளார். சீக்குகே பிரசன்னா, அசலா குணரத்னே, கஷன் ரஜிதா, பின்ரா பெர்னாண்டோ ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், 36 வயதான அனுபவ பந்துவீச்சாளரான தில்ஹர பெர்னாண்டோ அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் உள்ளூர் போட்டியில் 4 ஆட்டத்தில் 11 விக்கெட்டுகளை அள்ளியுள்ளார்.



**இலங்கை இருபது 20 அணி:-**

சந்திமால் (அணித்தலைவர்), டில்ஷான், சீக்குகே பிரசன்னா, சிறிவர்த்தனே, குணதிலக, திசர பெரேரா, தாசன் ஷானாக, அசலா குணரத்னே, சமர கப்புகெர, துஷ்மந்த சமிர, தில்ஹர பெர்னாண்டோ, கஷன் ரஜிதா, பின்ரா பெர்னாணடோ, சசித்ரா சேனநாயக்க, செஃப்ரே வந்தர்சே.

## மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் போட்டியில் வானவேடிக்கை காட்டிய ஜெயவர்த்தன



ஓய்வு பெற்ற ஜாம்பவான்கள் விளையாடும் மாஸ்டர் சம்பியன்ஸ் லீக் இருபது 20 கிரிக்கெட் தொடரின் நடந்து முடிந்த ஆட்டத்தில் கில்கிறிஸ்ட் அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் கில்கிறிஸ்டின் சகிட்டரியஸ் ஸ்ட்ரைக் கர்ஸ் அணியும், ஸ்மித்தின் விர்கோ சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி ஜெயவர்த்தனவின் விளாசலில் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்தது.

ஜெயவர்த்தன 47 பந்தில் 3 சிக்சர், 7 பவுண்டரி உட்பட 69 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் 158 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய விர்கோ அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழந்து 131 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. அசார் முகமது (51) மட்டும் அரைசதம் கடந்தார்.

இதன் மூலம் சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

## மீண்டும் டெஸ்ட் தலைவராகிறார் டிவில்லியர்ஸ்

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் நிரந்தர தலைவர் பதவியை டிவில்லியர்ஸ் ஏற்றுக் கொண்டுள்ளார்.


தென்னாபிரிக்க அணியின் அதிரடி வீரரான டிவில்லியர்ஸ் முதுகுவலியால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் கிரிக்கெட் போட்டிகளை குறைக்கும் முடிவில் இருந்தார்.

மேலும், தனது ஓய்வு குறித்து விரைவில் முடிவெடுக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் தலைவராக அம்லா செயற்பட்டார்.

இந்த தொடரில் ஏற்பட்ட தோல்வியினால் அம்லா தனது தலைவர் பதவியை பாதியில் இராஜினாமா செய்தார். இதனையடுத்து டிவில்லியர்ஸ் தற்காலிகமாக தலைவர் பதவியை ஏற்றார்.

இந்த தொடர் வரைதான் தலைவராக செயற்படுவேன் என்றும், அதன்பின் தன்னால் தலைவராக இருக்க முடியாது எனவும் கூறியிருந்தார்.



ஆனால் தற்போது தென்னாபிரிக்க அணியை திறமையாக வழிநடத்திச் செல்ல சிறந்த வீரர் இல்லாததால் டெஸ்ட் அணிக்கு தொடர்ந்து தலைவராக செயற்படும்படி கிரிக்கெட் வாரியம் டிவில்லியர்சிடம் கேட்டுக்கொண்டது.

இதை டிவில்லியர்ஸ் ஏற்றுக் கொண்டார். எனவே தென்னாபிரிக்க அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் தலைவராக டிவில்லியர்ஸ் செயற்படவுள்ளார்.

## "விக்ரம் ராஜன் கங்கு" ஞாபகார்த்த கிரிக்கெட்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடாந்தம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்படும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட "விக்ரம் ராஜன் கங்கு" ஞாபகார்த்த வன்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 4, 6, 7 ஆம் திகதிகளில் முறையே 1, 2, 3 ஆம் நாள் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில்நடைபெறவுள்ளன.

யாழ்.ஹாட்லியிற்ஸ் அணி, யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணி, ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், யாழ். கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் இத் தொடரில் மோதவுள்ளன.

## கிளிநொச்சி மாவட்டத்தின் சதுரங்க சமர் பெருமளவு மாணவர்கள் பங்கேற்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் சதுரங்க சமர் நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சுற்றுத்தொடரில் மாணவர்கள் பங்கேற்றனர்.

காமா அபாகஸ் இன் அனுசரணை உடன் நடைபெற்றுக் கொண்டுள்ள இப்போட்டியானது 14 பிரிவுகளாக நடைபெற்றுக் கொண்டுள்ளது.

9 வயது, 11 வயது ,13 வயது 15 வயது, 17வயது, 19 வயது, 19 வயதிற்கு மேற்பட்டோர் என்ற வயதுப்பிரிவுகளில் ஆண், பெண் என தனித்தனிப் பிரிவுகளாக இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெற்றி பெறுபவர்களுக்கு பணப்பரிசில்களும், பதக்கங்களும், வெற்றிக்கிண்ணங்களும், வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

9 வயது, 11 வயது பிரிவுகளில் 1 ஆம்இடம்பெறுபவருக்கு 2500 ரூபாவும் , 2 ஆம் இடம்பெறுப வருக்கு 1500 ரூபாவும், 3 ஆம் இடம் பெறுபவருக்கு 1000 ரூபாவும் ஏனைய வயதுப் பிரிவுகளில் 1 ஆம் இடம் பெறுபவருக்கு 5000ரூபாவும் 2 ஆம் இடம்பெறுபவருக்கு 3000 ரூபாவும் 3 ஆம் இடம்பெறுபவருக்கு 2000 ரூபாவும் பணப் பரிசில்களாக வழங்கப்படவுள்ளதுடன், ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பதக்கங்கள், வெற்றிக் கிண்ணங்கள், வெற்றிச் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சதுரங்க சமர் நாளையும் தொடர்ந்தும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஷிராந்தி ராஜ...

குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் போது ஊடக ஆலோசகராக செயற்பட்ட ஒருவருக்கு குறைந்த மதிப்பீட்டில் வீடொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு குறித்தே ஷிராந்தி ராஜபக்ஷவிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் ஆணைகுழுவின் செயலாளர் கூறினார்.

கஹதுடுவ பிரதேசத்திலுள்ள குறித்த வீடு ரூபாய் ஐந்து இலட்சம் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த வீட்டின் உண்மை பெறுமதி 55 இலட்சம் ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (செ-12)

## மகனை சிறை...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, தனது மகன் யோஷித ராஜபக்ஷவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார்.

வெலிக்கட விளக்கமறியல் சிறைச்சாலைக்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷ, அங்குள்ள ஜே விடுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகன் யோஷித ராஜபக்ஷவைச் சந்தித்து நலம் விசாரித்தார்.

மகிந்த ராஜபக்ஷவுடன், நாமல் ராஜபக்ஷ, லொகான் ரத்வத்தை, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ ஆகியோரும் யோஷித ராஜபக்ஷவைப் பார்வையிடச் சென்றிருந்தனர்.

ஞாயிற்றுக்கிழமைகளில், விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்படுவதில்லை. எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் அனுமதியின்றி எந்த நாளும் எந்த நேரத்திலும் சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்வையிடுவதற்கு சிறப்புரிமை இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதனைப் பயன்படுத்தியே நேற்று தனது மகனை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ பார்வையிட்டுள்ளார். (செ-12)

## 'அங்கேயே பிடியுங்கள்'...

மதிப்பத்திரம் இல்லாமல் மது போதையில் வாகனம் செலுத்தும் குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் அதிக அளவில் பதிவாகியிருப்பதைச் சுட்டிக்காட்டி, மதுபோதையில் வாகனம் செலுத்தும் குற்றங்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நீதிபதி தனது உத்தரவில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நீதவான் நீதிமன்றம் ஒன்றினால் சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதை ரத்துச் செய்து அதனை மீண்டும் வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு மீதான வழக்கு விசாரணையொன்றின் போதே கடந்தவாரம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதி தனது உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குடித்துவிட்டு வெளியில் வந்து மோட்டார் சைக்கிள்களில் மது போதையில் வாகனத்தைச் செலுத்தும் அனைவரையும் சாராயக் கடைப் பகுதிகளில் கண்காணித்து மடக்கிப்பிடித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மது போதையில் வாகனம் ஓட்டும் இளைஞர்களை, அவர்கள் தமது பயணத்தைத் தொடரவிடாமல் மறித்து, பொலிஸ் நிலையம் கொண்டு விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

குடிபோதையில்இருக்கின்றார்கள் என்று தெரிந்த பின்னரும் வழக்கை பதிவு செய்துவிட்டு அவர்கள் பயணத்தைத் தொடர அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு அனுமதிப்பதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கு பொலிஸாரே காரணமாக நேரிடுகின்றது.

மது போதையில் வாகனம் செலுத்துபவர்களின் செயலுக்கு இனிவரும் காலங்களில் 3 மாதச் சிறைத்தண்டனை வழங்க வேண்டும் என்று சட்டம் பரிந்துரைத்துள்ளது. அவர்களுக்குத் தண்டப் பணம் விதிப்பதற்கும், அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துவதற்கும் சட்டம் பரிந்துரை செய்கின்றது.

யாழ் நகரப்பகுதியில் உள்ள சாராயக்கடைகளின் முன்பாக நூற்றுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் நிறுத்தப்படுகின்றன.

இந்த மோட்டார் சைக்கிளகளில் அங்கிருந்து செல்பவர்கள், மது போதையிலேயே வாகனத்தைச் செலுத்துகின்றார்கள்.

எனவே, சாராயக் கடைகளில் குடித்துவிட்டு வெளியில் வருபவர்கள், மது போதையில் மோட்டார் சைக்கிள்களில் பயணிக்க எத்தனிப்பவர்களைக் கண்காணித்து, அவ்விடத்திலேயே அவர்களை சட்டரீதியாகக் கைது செய்ய வேண்டும்.

யாழ் நகரப்பகுதியில் 18 க்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையில் நகர சாராயக் கடைகளில் நிரம்பி வழிகின்றார்கள்.


சட்டரீதியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறைத் தண்டனை வழங்குவதன் ஊடாக மட்டுமே, மது போதையில் இளைஞர்கள் வாகனம் ஓடுவதைத் தடுக்கவும், இவர்களின் சட்டவிரோதச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தவும் முடியும்.

சாராயக் கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு, எவ்விடத்தில் கடை திறக்கலாம் என சிபாரிசு செய்கின்ற மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச நிர்வாகப் பிரிவு அதிகாரிகளின் தான் தோன்றித்தனமான பரிந்துரை காரணமாகவே, யாழ் நகரப் பகுதிகளில் கோவில்கள், பாடசாலைகளைவிட, எண்ணிக்கையில் மதுபான சாலைகள் நிரம்பி வழிகின்றன.

யாழ் மேல் நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட கிளிநொச்சி நீதிமன்றம் மது போதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு தண்டம் விதித்தும், சிறைத்தண்டனை வழங்கியும், அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தியும் தண்டனை வழங்கியதன் காரணமாகவே அங்கு மதுபோதையில் வாகனம் செலுத்துவது குறைந்துள்ளது என்று போக்குவரத்து பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவிக்கும் அளவுக்கு அங்கு முன்னேற்றகரமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை யாழ் போக்குவரத்து பொலிஸார் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இடைநிறுத்தப்பட்ட சாரதி அனுமதிபத்திரத்தின் மீதான தடையை நீக்கி, அதனை மீண்டும் வழங்க வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்ட மீள்விசாரணை வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுக்க முடியாது என மறுத்த நீதவான், விசாரணையை பங்குனி மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளார். (செ-4)

## அம்பாந்தோட்டையில் பயணிகள் கப்பல்



(கொழும்பு)

650 பயணிகளுடன் அதி சொகுசு கப்பலொன்று அம்பாந்தோட்டை மாகம்புர மகிந்த ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.

யூரோப் 2 சுற்றுலா பயணிகள் கப்பலே இவ்வாறு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைத் தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நிலையில், நேற்றையதினம் இலங்கையை குறித்த கப்பல் வந்தடைந்துள்ளது.

இந்த கப்பலில் வருகை தந்த சுற்றுலா பயணிகள் யால, உடவலவ, புத்தல, கதிர்காமம், எல்ல உள்ளிட்ட பல பகுதிகளுக்கு சுற்றுலா பயணிகள் பஸ்ஸின் மூலம் பயணிக்கவுள்ளனர்.

சுமார் மூன்று மாதங்களுக்கும் அதிகமான காலம் உலகின் பல நாடுகளுக்கும் இந்த பயணிகள் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## கட்சி அரசியலையும் தாண்டி...

பணியாக முன்னெடுத்து செல்லும் என பேரவையின் இணைத் தலைவர் வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் திட்டமுன்வரைபு வெளியிடும் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வரைபு வரைதல் எனும் பொறுப்பான இலக்கை குறிப்பிட்ட காலத்துக்குள் செயற்படுத்தியுள்ளோம். இந்த தீர்வு முன்வரைபு உருவாக்கப்பட்டு மக்களின் முன்னால் வைக்கப்படும் நிகழ்வில் எமது இனத்தின் வரலாறு முக்கிய புள்ளியாக குறித்து கொள்ளப்படும்.

எமக்கு தேவையான தீர்வு வேறு எவருக்குமானது அல்ல. காலம் காலமாக அழிவுக்குட்படுத்தப்பட்ட எமது மக்களுக்கானது. எமது மக்களின் நியாயமான இருப்புக்கானது.

எமது மக்களுக்கான தீர்வானது பிறருக்கு முன்னால் வைக்கப்படுவதற்குமுன் எமது சொந்த மக்கள் முன் எந்தவித மறைப்பும் இன்றி வெளிப்படுத்தப்பட்டு அறிவுபூர்வமான ஆக்க பூர்வமானகலந்துரையாடல்களுக்கும் விமாசனங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு மேலும் மெருகூட்டப்படவேண்டும்.

இது ஒரு முன் வரைபே ஆகும. மக்களின் பங்களிப்புடன் இது இறுதி வடிவம் பெறும்.

வெறும் உணர்வு மயப்படுத்தப்பட்டவார்த்தைகளால் அலங்கரிக்கப்பட்டமேடைபேச்சில் இருந்து விலகி ஒரு அரசியல் மயப்படுத்தப்பட்ட சமூகமாக அறிவு பூர்வமாக இதை நாம் அணுகி கலந்துரையாடல்களுக்கு உள்ளாகி மக்களின்விருப்பு இதுதான் என்பதை பேச்சுவார்த்தை மேடையில் எமது அரசியல்தலைமை ஆணித்தரமாக முன்வைக்க வேணடும்.



இது எமது இனத்துக்கு செய்ய வேண்டிய கடமையாகும். இதையே எமது நிபுணர் குழுவும் தமது புலமையை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி முன்வரைபை உருவாக்கி தந்துள்ளனர். உண்மையில் இது மிகவும் சிக்கலான பணி ஆகும்.

தமிழ் மக்கள் பேரவை திடீரென உருவாகிய ஒன்றல்ல. 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரான சூழல் அமைப்பில் இப்படியான மக்கள் சக்திகள் கொள்கை வழி ஒன்றிணைந்து நிற்கவேண்டிய தீர்வு ஏற்பட்டது. இந்த ஒன்றிணைவு தேர்தல்களுக்கு அப்பால்பட்டு கொள்கை வழி ரீதியாக இருக்க வேண்டும் என்பதற்காக 2009 இல் இருந்து திரைக்கு வராதபல் வேறு முயற்சிகள் பல்வேறுதரப்பினரால் முன்னெடுத்துவரப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அவை பெரிய அளவில் வெற்றியளிக்கவில்லை. ஆனால் இன்றைய நிலைமிகவும் சிக்கலானது. பல்வேறுபட்ட சக்தி வாய்ந்த தரப்புகளின் கைகள் எம்மை உள்ளும் புறமுமாக சூழ்ந்துள்ளன.

எமது மக்களின் மனவிருப்புக்களையும் அபிலாசைகளையும் கருத்தில் கொள்ளாது தாம் விரும்பிய பாதையில் எம்மை நடத்தி வைப்பதற்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பல்வேறு அழுத்தங்களை பிரயோகிக்கும் நடவடிக்கைகள் நிறைந்த சிக்கலான கால கட்டம் இது. பேரால் இத்தனை காலமும் நாம் அனுபவித்த பேரிழப்புக்கள் எமக்காக மேற்கொள்ளப்பட்ட தியாகங்களின் பெயரால் நாம் கொள்கை வழி ஒன்றிணைந்து நிறகவேண்டிய தேவைமேலும் வலுப்பட்டுள்ளது. இச் சூழலிலேயே தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றது.

இதற்கான கலந்துரையாடல்கள் சில மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு எமது அடிப்படை தீர்வு மற்றும் நடந்த அநீதிகளுக்கான பொறுப்புக் கூறல் சம்பந்தமாக ஒத்த கருத்துடையோரை முதற்கட்டமாக சேர்த்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

எமது அடிப்படைகளுடன் உடனபடுபவர்களை தொடர்ந்து உள்வாங்கி இது மேலும் விரிவுபடுத்தப்படும். மேலும் மக்கள் மயப்படுத்தப்படவேண்டும்.

நாம் ஆரம்பத்தில் இருந்து கூறி வருவதுபோல்தமிழ் மக்கள் பேரவையானது தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டது.

எமது மக்களின் அரசியல் பயணமானது தேர்தலுக்கானது அல்ல என்பதை தமிழ் மக்கள் பேரவை மீண்டும் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது.

மக்களின் வாழ்வும் இருப்பும் கூட அரசியல்தான். உணர்வு வயப்பட்ட அணுகுமுறையை விடுத்து எமது பட்டறிவுப்பால்பட்டு அறிவு பூர்வமான சிந்தனையுடன் சவால்களை எதிர்கொள்வதுதான் சவால்களை வெற்றியுடன் கடப்பதற்கான வழிமுறை ஆகும்.

இதையே எமது அரசியற் கட்சிகளும் அரசியல் சக்திகளும் செய்ய வேண்டும். மக்களுக்கான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறான மக்கள் மயப்பட்ட பங்குபற்றலுடன் கூடிய அரசியலையே தமிழ் மக்கள் பேரவை அனைவரிடமும் இருந்து எதிர்பார்கிறது. இது எந்தவொரு இனத்துக்கோ அமைப்புக்கோ எதிரானது அல்ல.

இது எமது மக்களை அடக்க நினைப்பவர்களுக்கும் எமது மக்களின் அடையாளங்களை சிதைக்கநினைப்பவர்களுக்கும் மக்களின் அரசியல் முனைப்பை அடக்க நினைப்பவர்களுக்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுக்கும்.

இதேவேளை தமிழ் மக்கள் பேரவை குறித்த விமர்சனங்கள் அனைத்தையும் வரவேற்கிறோம். அது எம்மை மேலும் வழிப்படுத்தும்.

எமது பேரவையானது சாதி சமயம் சமூக பால் பிரதேச ஒடுக்குமுறை அற்ற சமுதாயமாக உருவாக வேண்டும்.

எந்தவொரு பின்புல சக்தியும் இன்றி ஒன்றரை மாதங்களே ஆகியுள்ளநிலையில் எம் மீது சுமத்தப்பட்ட பழிகளும் எதிர்பார்ப்புக்களும் அதிகமானது.

எம் மீது வைக்கப்படும் ஆக்க பூர்வமான விமர்சனங்களை ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றோம். பார்வையாளராக இராது பங்காளிகளாக மாறவேண்டும் என்பதை வேண்டி நிற்கிறோம்.

எமது மக்களின் நலன் கருதி தனிப்பட்ட குறுகிய நலன்களை களைந்து கொள்கைவழி ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நிகழ்கால தேவையைமீண்டும் வலியுறுத்துகிறோம். வேறுபாடுகளை கசப்பான அனுபவங்களை மறந்து மக்களுக்காக நேர்மையுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம' என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# தமிழ் மக்களின்...

அத்தகைய அரசியல்யாப்பு ஒரு போதும் நன்மை பயக்கப் போவதில்லை என வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வு திட்ட முன்வரைபு பொதுமக்கள் முன்னிலையில் வெளியிடும் நிகழ்வு நேற்று மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று ஒரு முக்கியமான கட்டத்தைத் தமிழ் பேசும் மக்களாகிய நாம் அடைந்துள்ளோம். தமிழ் மக்கள் பேரவையினர் குழு அமைத்து குழுவில் அங்கம் வகிக்கும் எமது அங்கத்தவர்கள் படித்து, ஆய்ந்தறிந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சம்பந்தமான ஒரு திட்ட வரைபைத் தயாரித்துள்ளார்கள். வேலைப்பளுக்கள் காரணமாக என்னால் எந்தவொரு கூட்டங்களிலும் கலந்து கொள்ள முடியவில்லை. எனினும் எனது மாணவர் திரு.புவிதரன் தலைமையில் இக்குழு தனது கடமைகளைச் செய்தமை மனமகிழ்வை அளிக்கின்றது.

இந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொள்வதைத் தடுக்கும் முகமாக எங்கள் வடமாகாணசபை உறுப்பினர்கள் நேற்றைய தினம ஒரு கூட்டம் நடத்தி எனக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்கள். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் திரு.இரா.சம்பந்தன் அவர்கள மக்கள் மட்டத்திலே அரசியல் ரீதியான சிந்தனைகளை ஏற்படுத்தி, அரசியல் யாப்பு பற்றிய தமது கருத்துக்களை மக்கள் எடுத்துக் கூற வழியமைப்பது வரவேற்கத்தக்கதே என்று கூறிய பின்னர் கூட, எமது மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான சிலர் சேர்ந்து இப்பேர்ப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது விந்தையாக இருக்கின்றது. இவை தமிழ் மக்கள் பேரவைக்கு எதிரான நடவடிக்கைகளா அல்லது முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நடவடிக்கைகளா என்று புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேராதரவாளர்கள் பலர் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கின்றார்கள் என்பதை இவர்கள் அறியவில்லையோ என்று எண்ண வேண்டியுள்ளது.

இன்று (நேற்று) காலை எமது தெருக்கள் சம்பந்தமான விடயங்களைப் பரிசீலிக்கும் எமது உறுப்பினர் திரு.சிவயோகம் அவர்கள் என்னைச் சந்தித்து, நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போவதைத் தாங்கள் விரும்பவில்லை என்று கூறினார். எங்கள நடவடிக்கைகள் எந்தத் தருணத்திலும் கூட்டமைப்புக்குப் பாதகமாக அமையாதென்றும் அனுசரணையாகவே அமையும் என்ற உறுதி மொழியை அவருக்கு வழங்கினேன். அத்துடன் நாளை வடமாகாணசபையும் திட்ட வரைவொன்றைத் தயாரிக்கக் குழு கூடுகின்றது. அது என் தலைமையில் கூடுகின்றது. 2013-ம் ஆண்டின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் எங்கள் வரைபு தயாரிக்கப்படும்.

எது எவ்வாறிருப்பினும் தமிழ் மக்களின் எதிர்காலமே எமது கரிசனையாகும். இன்று (நேற்று) வெளியிடப்பட இருக்கும் திட்ட வரைவு மட்டுமே தமிழ் மக்களின் ஒரேயொரு தீர்வு என்று நாங்கள் கூறவில்லை. கூறவும் முடியாது. பலவிதமான தீர்வுகளைப் பலரும் முன்வைக்கலாம். ஆனால் இதுவரை காலமும் எமது அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் தீர்வுத் திட்டங்களை உருவாக்கி மக்களிடையே பரப்பி மக்களின் கருத்துக்களை அறிய எவருமே முன்வந்ததில்லை. தமிழ் மக்கள் பேரவை அத்தகையதொரு மகத்தான கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பது சிலருக்கு ஒரு வேளை மனத்தாக்கத்தைக் கொடுத்திருக்கலாம். நாங்கள் அதைச் செய்யவில்லையே என்ற ஒரு மனக் குறையை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கருத்துரைகள், தீர்மானங்கள் கட்சி ரீதியாக மட்டுமே வெளிவரவேண்டும் என்று எதிர்பார்ப்பது வருத்தத்திற்குரியது. மக்களுக்காகக் கட்சிகள் இருக்கின்றனவே ஒளிய கட்சிக்காக மக்கள் இருக்க முடியாது. கட்சிகள் மக்கள் மனமறிந்து நடந்து கொள்ள வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டோம என்ற ஒரே காரணத்திற்காக மக்கள் நலம் சார்ந்த விடயங்களில் மக்களின் மனமறிய முற்படாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படக் கூடாது. கடந்த கால கட்சி அனுபவங்களை முன்வைத்து தமிழ் மக்களின் வருங்கால வாழ்வைப் பாழடித்து விடாதீர்கள் என்று யாவரிடமுந் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ் மக்கள் பேரவை கட்சியாக மாற்றப்படமாட்டாது, அரசியல் ரீதியாகச் செயற்படமாட்டாது என்ற உத்தரவாதம் தந்த பின்னரே நான் இதில் கலந்து கொண்டேன். தமிழ் மக்களின் புத்திஜீவிகள் மக்கள் சார்பாக நடவடிக்கைகள் எடுத்து தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடிய அரசியல் வழிமுறைகளை எடுத்தியம்புவது எந்த விதத்திலும் பிழையென்று யாராலும் கூற முடியாது. உண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மற்றைய சகல கட்சிகளும் சேர்ந்து தமிழ் மக்கள் பேரவையை ஊக்குவிக்க வேண்டுமேயொழிய எதிர்ப்பைத் தெரிவிக்கக் கூடாது.

கட்சிக்கான விசுவாசம் என்பது சிலரின் கண்களை மூடிவிட்டது. ஆனால் வட கிழக்கு மாகாண மக்களின் வருங்காலமே முக்கியம். வழி வழியாக வரவிருக்கும் எமது வாரிசுகளின் வருங்கால வாழ்க்கையே எமக்கு முக்கியம். அதற்காக எந்த ஒரு கடினமான பாதையில் பயணிக்கக்கூட நாங்கள் தயங்கக் கூடாது. அரசாங்கங்கள் தயாரிக்கும் அரசியல யாப்பில் தமிழ் மக்களின் தேவைகள், அபிலாசைகள், நோக்குகள், உரிமைகள் யாவையும் உள்ளடக்கப்படாவிடில் அத்தகைய அரசியல் யாப்பு ஒரு போதும் நன்மை பயக்கப் போவதில்லை.

உதாரணத்திற்கு 1981-ம் ஆண்டில் பேசப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளே எமக்குப் போதும் என்று கட்சி ரீதியாக நாங்கள் கூறினால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் வலியுறுத்தல்களுக்குக்கட்டுப்பட்டு திணறிக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தினுள் பிளவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் "எதைத் தந்தாலும் தாருங்கள் நாம் அதை ஏற்றுக் கொள்வோம்" என்ற மனோ பக்குவம் எங்களிடம் இருப்பது சரியென்று எனக்குப்படவில்லை.

தமிழ்ப் பேசும் மக்கள் 2000 வருடங்களுக்கு மேல்வடகிழக்கு மாகாணங்களில் நிலைபெற்றிருக்கின்றார்கள். சோழர் காலத்தில் 10-ம் நூற்றாண்டில் மட்டும் வந்த வந்தேறு குடிகள் அல்ல அவர்கள். எமது தொடர் பாரம்பரியம் 2000 வருடங்களுக்கு மேலானது. இதனை மனதில் நிறுத்தி வட கிழக்கு மாகாணங்களில் வாழும் எமது மக்களின் சரித்திர ரீதியான உரிமைகளைப் பாதுகாக்கும் வண்ணம் அரசியல் யாப்பு அமைய வேண்டும் என்பதே எமது அவா.

அவற்றை மனதில் முன்னிறுத்தியே இன்றைய வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது என்று தயாரிப்புக் குழு கூறியுள்ளது. அதனைப் பரிசீலித்துப் பார்ப்பது எமது கடப்பாடாகும். சில இடங்களில் முரண்பாடுகள் காணப்படலாம். ஒவ்வாத தன்மை எழக்கூடும். மேலதிக ஏற்புக்கள் தேவை என்று மனதிற்குப் படலாம். இவை அனைத்தும் மக்களால் பரிசீலிக்கப்பட்டுத் தயாரிப்புக் குழுவிற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். நான் கூட அவ்வாறான எனது கருத்துக்களை வெளியிடுவேன். இந்த வரைபை யார் தயாரித்தார்கள் என்பதிலும் பார்க்க எந்தளவுக்குக் குறித்த வரைபு எமது தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கைகளை எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கின்றது என்பதே முக்கியம்.

எமது மக்கள் மனமறிய முதல் அடி எடுத்து வைத்து விட்டோம் என்பது தான் இன்றைய நிகழ்வின் முக்கியத்துவம். வரைபில் சில இடங்களில் மாற்றுச் சொற்பிரயோகங்கள் அமைய இடமளித்து குறிப்புரைகள் தரப்பட்டுள்ளமை இவ்வரைபின் சிறப்பம்சமாகும். அத்துடன் அரசியல் யாப்பு தயாரிக்கத் தொடங்கமுன் தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு பூர்வாங்க உடன்பாடு இடம் பெற வேண்டும் என்பதும் ஒரு சிறப்பம்சமாகும்.

எமது வரைபு முற்றிலும் மாற்றப்பட வேண்டும் என்று கூட மக்கள் விரும்பலாம். அத்தகையதொரு நிலை வந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்வோம். காரணம் இந்த செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை அவசியம். ஜனநாயக வழிமுறை அவசியம். தமிழர் நலம் பேணும் ஆத்மார்த்த எதிர்பார்ப்பும் அவசியம். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, மக்கள நலம் தேடும் ஒரு புனித கைங்கரியத்தில் நாம யாவரும் ஈடுபட்டுள்ளோம் என்பதை நாம் மறத்தலாகாது. வரைபு பற்றி நான் ஏதும் இத்தருணத்தில் கூற வேண்டிய அவசியம் இல்லை. அதைப் பற்றித் தயாரிப்புக் குழு அங்கத்தவர்கள் பேசுவார்கள்.

ஆனால் ஓரிரு கவனிப்புக்களை நான் கூற வேண்டிய கடப்பாடு உடையேன். ஆங்கிலத்தில் catalyst என்று ஒரு சொல் இருக்கின்றது. அதாவது ஒரு செயற்பாட்டைக் கூடிய விரைவில் நடைபெற வைக்கும் ஒரு பொருள் என்று அர்த்தம். எமது தமிழ் மக்கள் பேரவை பல நல்ல நடவடிக்கைகளுக்கு முன்னோடியாகப் பரிணமித்துள்ளது. எமது தமிழ் மக்களிடையே அரசியல் யாப்பு ரீதியான சிந்தனைகளை மேலோங்கச் செய்துள்ளது. அதாவது வெறும் கட்சி அடிப்படையில் சிந்திக்காது தமிழ் மக்களின் தூரகால நலம் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளது.

எமது தமிழ் மக்கள் பேரவை எந்தக் கட்சிக்கும் சார்பாகவோ எதிராகவோ நடக்க முன் வராததால் அவர்கள் வெளிக்கொண்டு வந்திருக்கும் வரைபை மக்கள் யாவரும் சுதந்திரமாகவும் இதய சுத்தியுடனும் பரிசீலிக்க வழி வகுத்துள்ளது. பலகட்சியினர் பலர் சேர்ந்து கலந்துறவாடியதால் கட்சிகளுக்கு அப்பால் நின்று கடமையாற்ற வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து அரசியல் ரீதியாக இது வரை செயற்பட்ட தமிழ்மக்களின்கட்சிகள்யாவும் மக்கள் மனோநிலைக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய ஒரு நிலையை எழுப்பியுள்ளது. அரசியல் யாப்பு மாற்றங்கள் எவ்வளவு முக்கியமானவை, எத்துணை தொடர் விளைவுகள் கொண்டவை, எந்தளவு கடமையுணர்ச்சியுடனும் கண்ணியத்துடனும், கரிசனையுடனும் பரிசீலிக்கப் பட வேண்டியவை என்பது இப்பொழுது சகலராலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

மூன்றாவதாக பெரும்பான்மை தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்குச் செயலுரு கொடுத்துள்ளது இன்றைய வரைபு என்று கூறலாம். அதாவது எமது தேர்தல் மேடைகளில் சில சொற்களைப் பாவித்துக் கைதட்டல் வாங்கிய காலம் போய் அச்சொற்களின் தாற்பரியம் என்ன? தகைமைகள் என்ன? தத்துவங்கள் என்ன? என்றெல்லாம் அலசி ஆராய ஒரு சந்தர்ப்பம் அளித்துள்ளது தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள். ஆகவே சொற்களுக்குச் செயலுரு கொடுக்கத் துணை புரிந்துள்ளது தமிழ் மக்கள் பேரவை. தேசியம் என்றால் என்ன? சுயாட்சி என்றால் என்ன? சமஷ்டி என்றால் என்ன? என்று மக்கள் கேட்டு அவற்றிற்கான பதிலைப் பெற்றுக் கொள்ள வழி அமைத்துத் தந்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.

மேலும் அரசாங்கமானது யாவரிடமும் புதிய அரசியல் யாப்பு வரைபிற்கான கருத்தறியும் ஒரு செயற்பாட்டில் தற்போது ஈடுபட்டிருக்கும் போது எமது செயற்பாடுகள் அதற்கு ஒத்திசைவாக நடந்தேறி வருவது திருப்தியை அளிக்கின்றது. எந்த ஒரு தனி நபரும், சங்கமும், மக்கள் குழுவும், ஏன் கட்சிகளுங்கூட தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்படும் கருத்து ஆவணத்தை அடிப்படை ஆவணமாகப் பாவிக்க நாம் வழி அமைத்துக் கொடுத்துள்ளோம். மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எமது தமிழ் மக்கள் தலைவர்கள் கூட தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்து என்ன என்பதை ஆராய்ந்தறிந்து அதனை வெளிக் கொண்டு வரவும் தயங்காதிருப்பது எமக்கு மன மகிழ்வைத் தருகின்றது.

எமது செயற்பாடு தமிழ்ப் பேசும் மக்கள் கருத்தறிந்து செயற்படும் ஒரு நிலைக்கு அரசாங்கத்தை அழைத்துச் சென்றால் அதுவே எமது வெற்றியென்று கருதலாம். பதின்மூன்றாவது திருத்தமே தீர்வு, அதற்கு மேல் எதுவும தரமுடியாது, சமஷ்டியை வழங்க முடியாது என்றெல்லாம் கூறும் ஆளுங்கட்சி அவற்றிற்கப்பால் சென்று எமது மக்கள் மனம் அறிய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. கட்சிகளை மையமாக வைத்து இப்பிரச்சினையை அணுகாமல் களநிலையை அறிந்து கருத்துக்கு முதலிடம் கொடுத்து சர்வதேச தமிழ்ப் பேசும் மக்களின் ஒருமைப்பாட்டுடனும் எமது தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அதாவது வட கிழக்கு மாகாணத்தமிழரும், முஸ்லிம்களும், மலையக மக்களும் நிலையான ஒரு அரசியல் தீர்வைப் பெற எமது இந்த கைங்கரியமானது வழிவகுக்கட்டும்என்று வாழ்த்திஎன்சிற்றுரையை முடித்துக் கொள்கின்றேன் என்றார். (செ-4)

## அரிசி...

செய்யப்படும் அரிசிக்கான வரி 35 ரூபாயில் இருந்து 50 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ கிராம் அரிசிக்கான வரி 15 ரூபாயால் உயாவடைந்துள்ளது. (செ-12)

## சிங்க...

தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றிலேயே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

நல்லாட்சியே! நீங்கள் சிங்கத்தின் வால்பக்கத்தில்நின்று கொண்டிருக்கிறீர்கள். உங்களின அங்கங்களை சிங்கம் கிழிக்காது என்று எதிர்பார்க்காதீர்கள்! என்றுஅவர்தனதுமுகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,யோஷித ராஜபக்ஷ கைவிலங்கிடப்பட்ட நிலையில் கொண்டுசெல்லப்படும ஒளிப்படத்தையும அவர் முகநூலில் பதிவேற்றியுள்ளார். (செ-12)


**வேலையாட்கள் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஹோட்டலொன்றுக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

- றொட்டி-கொத்து றொட்டி தயாரிப்பாளர்
- றைஸ் தயாரிப்பாளர்
- சமையல்காரர்
- உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்

தொடர்புகளுக்கு : 0771258072 0774677615

(3453)

**காணி விற்பனைக்கு**

கைதடி கிழக்கு கொத்தாக்குடையில் (ஒயிட்டி செம்பாடுபுலம்) 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பரப்பு 9 இலட்சம்)

தொடர்புகளுக்கு:- 076 700 8559

(3455)

**வெற்றித்தேர்வு வெளியீட்டகம்**

25 வருடங்களிற்கு மேலாக புலமைப்பரிசில் துறையில் அனுபவம்மிக்க வெற்றித்தேர்வு வளவாளர்களின் தயாரிப்பில்

ஆரம்ப வகுப்புகளில் படிநிலை அறிவு வளர

2016ஆம் ஆண்டிற்கான நாடளாவிய வெளியீடுகள் வெளிவருகின்றன.

- தரம் 5 - 20 வெற்றித்தேர்வுகள்
- தரம் 4 - 15 வெற்றித்தேர்வுகள்

மேலதிக பயிற்சிக்காக இலவச பாடவினாப்பத்திரங்கள்

- தரம் 1, தரம் 2, தரம் 3 பாடரீதியாக 12 வினாப்பத்திரங்களைக் கொண்ட தவணைக்கான பரீட்சை வழிகாட்டிகள்
- தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்.
- தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் வழிகாட்டி நூல்.
- தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வாக்கியங்கள் எழுதப் பழகுவோம் வழிகாட்டி நூல்.

பாடசாலைகள் தாமதமின்றி உடன் தொடர்புகொள்ளுங்கள்.

வினாப்பத்திரங்கள் நேரடியாக பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

பாடசாலைகள் விசேட விலைக்கழிவுகளுடன் வெற்றித்தேர்வு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு: 021 222 9016, 0775388471, 0773126807

**பொருளியல்**

**வினைல்ஸ் சுன்னாகம்**

**திரு.P. சண்**

**2015 Day & 2016 A/L**

வினா - விடை

உற்பத்தி சாத்திய வளையி

ஆரம்பம்: 02.02.2016

செவ்வாய்க்கிழமை 5.00P.M

WEEKLY 10 HOURS

**2017 A/L**

பேரினப் பொருளியல்

WEEKLY 05 HOURS

ஆரம்பம்: 02.02.2016

செவ்வாய்க்கிழமை 4.00P.M

(C-3660)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.